
கல்கி
KALKI 13.7.2003 ரூ.6.00
அதிர்ஷ்ட
எண் - 13

நல்ல விஷயத்துக்கு நாள், கிழமை,
முன்னறிவிப்பு
எல்லாம் எதுக்கு?
இதோ ஆரம்பிச்சுட்டோம்



வணக்கத்துக்குரிய வயிறே...

டாக்டர் எஸ். அஷோக்
எழுதும்




மருத்துவத் தொடர்

பக்...36

நடக்குமென்பார்; நடக்கும்!




மேஷம் : கிரக சஞ்சாரம் உங்க ராசிநாதன் செவ்வாய் பதினொன்றில் பலமாக இருக்கறதால எந்தக் காரியத்தையும் தலைகீழா நின்னாவது முடிச்சிடுவீங்க. தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். குடும்பத்துல ஒற்றுமை, அமைதி நிலவும். வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமா தீர்ப்பு வரும். சிலர் புதிய வீடு, மனை வாங்க வாய்ப்பிருக்கு. காண்ட்ராக்ட்ஸ், இயந்திர வகை, இண்டஸ்ட்ரீஸ், டிராவல்ஸ் போன்ற துறைகள் லாபம் தரும்.




ரிஷபம் : கிரக சஞ்சாரம் உங்க ராசிநாதன் சுக்ரன் இரண்டாம் இடத்துல சூரியன் சனி ஆகியோருடன் கூட உலவுவதால எல்லாக் காரியத்திலயும் வெற்றி உண்டு. முக்கியமானவங்க ஆதரவு கிடைக்கும். இதன் மூலமா உங்களுக்கு ஆதாயம் உண்டு. அலுவலகத்தில் மேலதிகாரிகள் பாராட்டற மாதிரி நடந்துக்குவீங்க. சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும்.



மிதுனம் : இந்த வாரம் உங்க பேச்சில் வசீகரம் இருக்கும். எதிர்ப்புகள் மாயமாகும். பண நடமாட்டம் தாராளமா இருக்கும். உத்தியோக விஷயத்தில் எல்லா வகையிலும் மேன்மை உண்டு. வேலை விஷயமாக வெளியூர், வெளிநாடு போக வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகள் கைகூடும். சுயமா தொழில் பண்றவங்களுக்கு இது அதிர்ஷ்ட காலம். கடன் தொல்லை மறையும். வராமல் இழுத்தடிச்சிட்டிருந்த பணம் வந்து சேரும்.



கடகம்: இந்த வாரம் உங்கத் தேவைக்கேற்ற பணம் வந்து சேரும். இதுவரை இருந்து வந்த தடைகள், குறுக்கீடுகள் விலகும். தொழில் வகையில் நல்ல முன்னேற்றம் உண்டு. ஏற்றுமதி, இறக்குமதி தொழில்கள்ல ஆதாயம் உண்டு. குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் விலகும். சொத்து விவகாரங்களில் இருந்துவந்த பிரச்னைகள் நீங்கும். பெண்களுக்கு உற்சாக மனநிலை உண்டாகும்.




சிம்மம்: கிரக சஞ்சாரம் உங்க ராசிநாதன் சூரியன் பதினொன்றில், லாபஸ்தானத்தில் சுக்ரன், சனியுடன் கூடி சஞ்சாரங்கறதால உற்சாகமான மனநிலை ஏற்படும். பணவசதி தாராளமா கிடைக்கும். செவ்வாய் ஏழில் அமர்ந்து அந்த வீட்டின் அதிபதி பதினொன்றில் மற்ற கிரகங்களோட கூடி இருக்கிறதால உத்தியோகத்தில் எல்லா காரியத்திலும் வெற்றி உண்டு.




கன்னி: குடும்பத்தில் ஒற்றுமை, அமைதி நிறைந்து இருக்கும். புதிய சொத்து சேர்க்கை நிகழ வாய்ப்பிருக்கு. தாமதமாகி வந்த காரியங்கள் இப்ப 'சட்டுப் புட்டு'னு முடியும். நேர்முக, மறைமுக எதிரிகள் மறைவாங்க. கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு பெயர், புகழ் கூடும். வேலை விஷயமாக சிலர் வெளியூர் போக வாய்ப்பிருக்கு.



துலாம்: எதிர்பார்த்திருந்த நல்ல தகவல் இப்ப வந்து சேரும். பிரிந்து இருந்தவங்க ஒன்று சேர்வாங்க. புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அதனால ஆதாயம் உண்டு. அலுவலகத்தில் எல்லோருடைய ஒத்துழைப்பும் பாராட்டும் கிடைக்கும். புதிய வேலை முயற்சிகள் கைகூடும். சுயமா தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. கொடுக்கல், வாங்கல் கை கொடுக்கும். இயந்திரம், எலக்ட்ரானிக்ஸ், கெமிக்கல்ஸ், மருத்துவம் ஆகிய துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.




விருச்சிகம்: கிரக சஞ்சாரம் நான்காம் இடத்தில் பலம் பெற்று சஞ்சாரம் என்பதால் சகலவிதமான குழப்பங்களும்




நீனாவுக்கு (விருச்சிகம்) பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்!


சிக்கல்களும் இப்ப மாயமாகும். குருபலம் நிறைந்து இருக்கறதால குடும்பத்துல பொன், பொருள் சேர்க்கை நிகழும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்புத் தேடி வரும். பணவசதி தாராளமா கிடைக்கும். இயந்திரம், கிரானைட், எண்ணெய் வகை, காண்ட்ராக்ட்ஸ் ஆகிய துறைகள்ல லாபம் கொட்டும். எதிர்பார்த்திருந்த நிதி உதவி கிட்டும்.




தனுசு: இந்த வாரம் தெளிவான மனநிலை, தெய்வ பலம், தேவைக்கேற்ப பணவசதி, தெய்வீக ஈடுபாடு உண்டாகும். வேலை விஷயத்தில் எதிர்பாராத முன்னேற்றம் உண்டு. மூன்றாம் இடத்தில் செவ்வாய் சஞ்சாரம் என்பதால் எதிர்ப்புகள் மறையும். அலுவலகத்தில் எல்லோருடைய ஆதரவும் கிடைக்கும். உயரதிகாரிகளின் பாராட்டு உண்டு. இதுவரை இருந்து வந்த பண நெருக்கடி குறையும். குடும்பத்தில் நண்பர்கள், உறவினர்கள் வருகை நிகழும்.



மகரம்: இந்த வாரம் மனசில துணிச்சல், தன்னம்பிக்கை பிறக்கும். எதிர்ப்புகள் மறையும். முக்கியமானவங்க ஆதரவு கிடைக்கும். அலுவலகத்தில் உயரதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். புதிய வேலை முயற்சிகள் வெற்றி தரும். சுயமா,தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. கொடுக்கல், வாங்கல் தக்க சமயத்துல கை கொடுக்கும். குடும்பத்திலே குரு பார்வை ஏற்பட்டுள்ளதால ஒற்றுமை மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.



கும்பம்: கிரக சஞ்சாரம் உங்க ராசிநாதன் சனி பகவான் ஐந்தில் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரனுடன் கூடி சஞ்சாரம் என்பதால் தெய்வ பலம் கிடைக்கும். தேவைக்கேற்ப பணவசதி உண்டு. எடுத்த காரியங்களைத் திட்டமிட்டபடி செயல்படுத்திடுவீங்க. உயரதிகாரிங்க ஆதரவும், பாராட்டும் கிடைக்கும். வேலை விஷயமா, வெளியூர், வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. குடும்பத்துல பிரிந்தவங்க ஒன்று சேர்வாங்க. பெண்களுக்கு உற்சாகமான வாரம்.



மீனம்: இந்த வாரம் பண நடமாட்டம் தாராளமா இருக்கும். மனசில தன்னம்பிக்கை பிறக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். நேர்முக, மறைமுக எதிர்ப்புகள் மறைந்து உங்களுக்கு ஆதரவான சூழ்நிலை நிலவும். வர வேண்டிய பணம் வந்து சேரும். பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் உண்டு. குடும்பத்துல இதுவரை இருந்த வந்த கருத்து வேறுபாடுகள் மறையும். சுப காரியங்களுக்காக வெளியூர் போக வாய்ப்பிருக்கு.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

சென்னையில் ஹாரி பாட்டர்!



உலகைக் கலக்கி வரும் ஹாரி பாட்டர் கதைப் புத்தகம், இப்போது சென்னையிலும் பிய்த்துக் கொண்டு போகிறது. 'முதல் நாளே காலி ஆயிடுச்சு', 'ஒரு பிரதிகூட இல்லை', 'வரலாறு காணாத விற்பனை', 'எல்லாம் வித்துத் தீர்ந்திடுச்சு', 'போயே போச்சு - போயிந்தே - இட்ஸ் கான்..!' இப்படியெல்லாம் சொல்லிப் புத்தக விற்பனையாளர்கள் பூரித்துப் போயிருக்கிறார்கள்.

இங்கிலாந்தைச் சேர்ந்த ஜே.கே. ரோலிங் என்ற பெண் எழுத்தாளர், 'ஹாரி பாட்டர் என்ற சிறுவனின் சாகசங்களை கதை கதையாக எழுதத் தொடங்கினார். இதுவரை நான்கு பாகங்கள் வந்துள்ளன.

1. ஃபிலாசபர்ஸ் ஸ்டோன் (Philosopher's stone)
2. சேம்பர் ஆஃப் சீக்ரெட்ஸ் (Chamber of secrets)
3. பிரிசனர் ஆஃப் அஸ்கபான் (Prisoner of Azkaban)
4. காப்லட் ஆஃப் ஃபயர் (Goblet of fire)

இப்போது ஐந்தாம் பாகமாக 'ஹாரி பாட்டர் அண்டு தி ஆர்டர் ஆஃப் தி ஃபீனிக்ஸ்' (Harry potter and the order of the phoneix) வெளிவந்துள்ளது. உலகம் முழுக்கச் சக்கைப் போடு போட்டு வருகிறது.

சாதாரண குடும்பத்தில் பிறந்த ரோலிங், இந்தப் புத்தகங்களின் மூலம், இங்கிலாந்தின் முதல் பத்துப் பணக்காரர்களில் ஒருவராகிவிட்டார். இங்கிலாந்து ராணியைவிட இவர், பெரிய பணக்காரர் என்றால் பாருங்களேன்.

ஹாரி பாட்டரின் ஐந்தாம் பாகம், கடந்த ஜூன் 21ஆம் தேதி வெளியானது. வெளியான பத்தே நாளில் இந்தியாவில் மட்டும் ஒரு இலட்சத்து இருபதாயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்துவிட்டன. இன்னும் பிரதிகள் வேண்டும் என்று ஏராளமான ஆர்டர்கள் குவிந்து வருகின்றன.

சென்னையில் நுங்கம்பாக்கம் 'லாண்ட் மார்க்' புத்தகக் கடையின் புத்தகப் பிரிவுப் பொறுப்பாளர்


ராஜேஷிடம் இது பற்றிக் கேட்டோம்.

"முதலில் இருநூற்று ஐம்பது பிரதிகள் மட்டுமே வரவழைத்திருந்தோம். ஸ்பென்சர் பிளாசாவில் உள்ள எங்களின் மற்றொரு கடையிலும் தனியே இருநூற்று ஐம்பது பிரதிகள் வைத்திருந்தோம். இரண்டு கடையிலும் முதல்நாளே எல்லாப் பிரதிகளும் விற்றுத் தீர்ந்தன. தேவை அதிகமிருந்ததால் டெல்லியிலிருந்து விமானத்தில் உடனே ஐந்நூறு பிரதிகள் வரவழைத்தோம். இப்படியாகக் கொஞ்சம் கொஞ்சமாக வரவழைத்து, இரண்டு கடையிலும் சேர்த்து முதல் பத்து நாளில் ஆயிரத்து அறுநூறு பிரதிகள் விற்றுள்ளன.



ஹாரி பாட்டர் கதைப் புத்தகத்தின் விலை எழுநூற்று தொண்ணூற்றைந்து. இதற்காக இரண்டு முன்பதிவுத் திட்டங்களை அறிவித்திருந்தோம். இதன்படி ஒரு திட்டத்தில் நானூறு ரூபாய், முன்பணம் கட்ட வேண்டும். மீதமுள்ள முந்நூற்றுத் தொண்ணூற்று ஐந்து ரூபாயை புத்தகம் வாங்கும் அன்று தர வேண்டும். இவர்களுக்கு விலையில் பத்து சதம் கழிவு உண்டு.







அடுத்த திட்டப்படி, முழுப் பணத்தையும் முன்னதாகக் கட்ட வேண்டும். இவர்களுக்கு ஒரு வினாடி வினா, ஹாரி பாட்டர் திரைப் படக் காட்சி, நொறுக்குத் தீனி உள்ளடக்கிய ஒரு நிகழ்ச்சிக்கான இரண்டு நுழைவுச் சீட்டுகள் கொடுத்தோம். முதல் திட்டத்தில் இருநூறு புத்தகங்களும் இரண்டாம் திட்டத்தில் முந்நூறு புத்தகங்களும் விற்றன.

ஹாரிபாட்டர் புத்தகத்தில் மாயாஜலம் நிறைய இருக்கு. அது, குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும்தானே. அதனால் எல்லாரும் வாங்க விரும்புகிறார்கள். அதுவும் ஹாரி

பாட்டர் நான்காம் பாகம் வெளிவந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டதால் இந்த ஐந்தாம் பாகத்தின் மேல் எதிர்பார்ப்பு அதிகமாகிவிட்டது.

வெளியான முதல் நாள் காலை ஏழு மணிக்கே எங்கள் தொலைபேசி ஒலிக்கத் தொடங்கி, இடைவிடாமல் ஒலித்துக் கொண்டே இருந்தது. நீண்ட வரிசையில் நின்று புத்தகம் வாங்கினார்கள். தாத்தா - பாட்டிகள்கூட வந்து, தங்கள் பேரனுக்குப் பரிசு கொடுக்க வாங்கினார்கள்.

"என் வீட்டில் மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கிடையில் சண்டை வந்து விடக் கூடாது. அதனால் மூன்று புத்தகமாகக் கொடுத்து விடுங்கள்" என்றார் ஒருவர்!

ஹிக்கின்பாதம்ஸ் புத்தக சாலையின் மேலாளர் ஹேமலதாவைச் சந்தித்தோம்.

"முதல் எட்டு நாளில் இங்கு மட்டும் இரண்டாயிரம் பிரதிகள் விற்பனை ஆயின. விமான நிலையம், ரயில் நிலையம், டைடல் பூங்கா தவிர, தமிழ்நாட்டில் எங்களுக்கு பதினான்கு கிளைகள் இருக்கின்றன. மேலும் கேரளா, ஆந்திராவிலும் கிளைகள் உண்டு. எல்லா இடத்திலும் சேர்த்து சுமார் ஆறாயிரம் பிரதிகள் பறந்து விட்டன. மேலும் நான்காயிரம் பிரதிகளுக்கு 'ஆர்டர்' கொடுத்திருக்கோம். என் இருபது ஆண்டு அனுபவத்தில் இதுபோல் எந்தப் புத்தகமும் விற்றதில்லை.

இந்தப் புத்தகத்தின் அதிக விலை காரணமாக, இதற்கு நாங்கள் பதினைந்து சதம் கழிவு தருகிறோம். இந்தப் புத்தகம், வேடிக்கையாக, விட்டலாச்சாரியா கதை மாதிரி இருப்பதால் குழந்தைகள் மிகவும் விரும்புகிறார்கள்" என்றார் ஹேமலதா.



"என்னது! உங்கப்பா வித்தியாசமானவரா?"

"ஆமா! பிளஸ் டூ ரிஸல்டைப் பார்த்துட்டு நான் ஊரைவிட்டு ஓடறதுக்குப் பதில் அவர் ஓடிட்டாரு."

- உ. ராஜாஜி

ஹிக்கின்பாதம்ஸ் நிர்வாக இயக்குநர் சந்திரசேகரிடம் கேட்டோம்.

"ஒரு பையன், 'ஹாரி பாட்டர்' வாங்கித் தரச் சொல்லி அடம் பிடித்தான். அவனுடைய அப்பா, 'சரி. வாங்கித் தர்றேன். ஆனால் ஏழாம் தேதி, பரீட்சை முடிச்சுட்டு தான் படிக்கணும்" என்றார். அதற்கு அந்தப் பையன், "நான் தூங்குவதற்கான நேரத்தில், எக்ஸ்டிரா ஹவரில் படிக்கிறேன்" என்றான்.

புத்தகம் வாங்கிய ஒரு பையனிடம் 'நீ மட்டும் வச்சுக்காதே. உன் பக்கத்து வீட்டுப் பையனுக்கும் கொடு!' என்றேன். அதற்கு அவன், "இன்னிக்கே கொடுக்க மாட்டேன். படிச்சு முடிச்சுட்டு, அன்னிக்குத்தான் வாங்கினது போல் காட்டுவேன். இல்லாவிட்டால் என்னைப் படிக்க விடமாட்டான்" என்றான்.

மொத்தமாகக் கேட்பவருக்குக் கொடுப்பதில்லை. ரேஷன் அதிகாரி மாதிரி ஆளுக்கு ஒரு புத்தகம்தான் கொடுக்கிறோம்" என்றார் சந்திரசேகர்.

'புக் பாயிண்ட்' புத்தகக் கடையின் மேலாளர் ஆஷிஷ் உடன் பேசினோம்.

"நாங்க முதலில் நூறு பிரதிகள்தான் 'ஆர்டர்' பண்ணியிருந்தோம். இவ்வளவு தேவையிருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இங்கு மட்டும் முதல் ஏழு நாளில் இருநூறு புத்தகங்கள் விற்றன. இது தவிர, ஐதராபாத், பெங்களூர், மும்பையிலும் எங்களுக்குக் கிளைகள் உண்டு. அங்கும் நல்ல விற்பனைதான். ஜூலை 31க்குள் 'ஹாரி பாட்டர்' வாங்குவோருக்கு ஒரு கூப்பன் தருகிறோம். பிறகு குலுக்கல் நடத்துவோம். முதல் பரிசு பெறுபவருக்கு ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் பரிசு தரப் போகிறோம்.

குழந்தைகள் வீட்டில் அடம் பிடித்து, அப்பா, அம்மாவைக் கூட்டி வருகிறார்கள். புத்தகம் இல்லை என்றதும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளுகிறார்கள். இவர்களுக்காகவே மேலும் 'ஆர்டர்' செய்திருக்கிறோம்" என்றார் ஆஷிஷ்.


ஹாரி பாட்டரின் இமாலய வெற்றியால் சிறுவர் இலக்கியத்தின் மீது உலகின் கவனம் திரும்பியிருக்கிறது. நௌ, ரௌலிங், ரூலிங்!

சந்திப்பு: அண்ணா கண்ணன்

படங்கள்: ஸ்ரீ ஹரி

பிழையின்றி

நல்ல தமிழ் எழுதுவது எப்படி?



பக்கம் 526 விலை ரூ.150

ஆசிரியர் : பேராசிரியர் **ஜெ.ஸ்ரீசந்திரன்,** எம்.ஏ.,

தற்கால நடைமுறைக்கேற்பத் தமிழில் பிழையில்லாமல் எழுதத் தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம் ஆகிய அனைத்தையும் கற்றுத்தான் ஆகவேண்டும் என்பதில்லை. ஆயினும் அவற்றுள் கூறப்பட்டவற்றுள் மிக மிக முக்கியமானவற்றை யாவது அறிந்து கொள்ள வேண்டாமா? அந்த மிக மிக முக்கியமான வற்றைக் கூறுவதுதான் இந்தநூல். பிழையின்றி நல்ல தமிழ் எழுத இது பெரிதும் துணை செய்யும்.

வல்லினம் (க்,ச்,த்,ப்) மிகும் இடத்தையும் மிகா இடத் தையும் மிகத்துல்லியமாக விளக்குகிறது இந்நூல். இவற்றின் விளக்கம் பல பக்கங்கள் நீண்டுள்ளது.

குற்றியலுகரத்தையும் வேற்றுமையையும் சில மணித் துளிகளில் புரிந்து கொள்ளும் வகையில் அமைத்துக் காட்டுகிறது, இந்நூல்.

பெயரெச்சத்தையும் வினையெச்சத்தையும் தெளிவாக விளக்குகிறது, இந்நூல். பிழையான இருநூறு வாக்கியங்களை எடுத்துக்காட்டி அவற்றிற்குரிய சரியான வாக்கியங்களைத் தருகிறது, இந்நூல்.

கதை எழுதுவது எப்படி? கடிதம் எழுதுவது எப்படி? கட்டுரை வரைவது எப்படி? என்னும் வினாக்களை எழுப்பி, மாதிரிக்குச் சில சிறுகதைகளை-கடிதங்களை-கட்டுரைகளை எடுத்துக்காட்டுகிறது, இந்நூல்.

வடசொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை ஒரு நீண்ட பட்டியலாக அமைத்துக்காட்டுகிறது, இந்நூல்.

பிழையற்ற நல்ல தமிழ் என்பது உரை நடைக்கு மட்டுமன்று; கவிதைக்கும் அது பொருந்தும் எனக் கூறும் வண்ணம் நாலின் இறுதிப்பகுதியில் யாப்பையும், அணியையும் தேவையான அளவு சுருக்கித் தருகிறது, இந்நூல்.

இதுவரை இது போன்ற தலைப்பில் பல நூல்கள் வெளி வந்துள்ளன. ஆயினும் ஒன்றேனும் இந்த அளவு தெளிவாகவும் முழுமையாகவும் இல்லை என்பதைக் கற்பார் உணர்வர்.

இலவசம் !

பிழையின்றி நல்ல தமிழ் எழுதுவது எப்படி? என்னும் இந்நூலினை வாங்கு வோர்க்கு, பிழையின்றி நல்ல ஆங்கிலம் எழுத உதவும்,

IMPORTANT SENTENCE STRUCTURE

(முக்கிய வாக்கிய அமைப்பு - விளக்கம் தமிழில்)

பக்கங்கள் 157, விலை ரூ.50.

என்னும் நூல் இலவசம். இது, 'ஆங்கிலப் பேராசான்' 'இவ்வளவு தான் ஆங்கிலம்' என்னும் நூல்களில் முன்னரே ஒரு பகுதியாக வெளியிடப்பட்டது.

இன்று ஆங்கில நூல்களில் காணப்படும் பல்லாயிரக்கணக்கான நூல்கள் அனைத்தும் 22 வகையான வாக்கியங்களின் மேல் எழுப்பப்பட்டவைதாம்! இவற்றை அற்புதமாக விளக்குகிறது இந்நூல்.

நூலினைத் தபாலில் பெற, வர்த்தமானன் பதிப்பகம் 40, சரோஜினி தெரு, தி.நகர், சென்னை-17. (உஸ்மான் ரோடு- கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்) என்ற முகவரிக்குக் கடிதம் எழுதுக. நூல்கள் VPP மூலம் அனுப்பப்படும். நூலின் விலைரூ.150 + தபால் மற்றும் கட்டுச்செலவு ரூ25 சேர்த்து ரூ.175 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நேரில் பெற :

சென்னை	வர்த்தமானன் பதிப்பகம்,
கோவை	விஜயா பதிப்பகம், ✆ : 2382614/ 2394614
சேலம்	சந்திரா புத்தக நிலையம் ✆ : 2265635
தருமபுரி	திருவள்ளுவர் பொத்தக இல்லம் ✆ : 268769

ஆகிய இடங்களில் ரூ.150 யினை ரொக்கமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை (உணவு இடைவேளையின்றி) ஞாயிறு விடுமுறை.



அப்பா ரகுபதி ஒரு டாக்டர். அம்மா இந்திராவும் ஒரு டாக்டர். மகள் ராதா ரகுபதிக்கு இந்த இருவருமே இன்ஸ்பிரேஷன் ஆக இருந்ததில் வியப்பு இல்லைதான். ஆனால் நான்கு தங்கப் பதக்கங்களும், ஐந்து வெள்ளிப் பதக்கங்களும், நான்கு பரிசுத் தொகைகளும் - ஆக மொத்தம் பதின்மூன்று பரிசுகளை இந்த ஆண்டு எம்.பி.பி.எஸ். தேர்வில் அள்ளிக் கொண்டு வந்திருக்கும் ராதா ரகுபதிக்கு, எட்டாவது படிக்கும்போது சட்டம் படித்தால் என்ன, என்ற யோசனை இருந்ததாம்! "பிளஸ் டூ படிக்கிறபோதுதான் மருத்துவம் படிப்பது என்ற முடிவை எடுத்தேன்!" என்கிறார் புன்சிரிப்புடன்.

பத்மா சேஷாத்ரி பள்ளிக்கூட மாணவி என்பதால், மிஸஸ் ஒய்.ஜி.பி. ஒரு ரோல்மாடலாக அப்போது இருந்திருக்கிறார். ஆனால் இன்டர்னல் மருத்துவப் பேராசிரியர் டாக்டர் பென்னட், பிறகு அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டார். "அவர் தான் 'மெடிசின்' துறைத்தலைவர். இப்போது டி.எம்.ஈ.ஆக இருந்து ஓய்வு பெற்றுவிட்டார்!" என்கிறார் டாக்டர் ராதா ரகுபதி.

தமது ஆசிரியர்கள் மட்டுமே தமது வெற்றிக்குக் காரணம் என்றாலும், ராதாவுக்குத் தூண்டுதலாக இருந்தவர்கள் சில சக மாணவ - மாணவிகள்தான். "அவர்களது பொருளாதாரப் பின்னணி மிகச் சாதாரணமானதாக இருந்த போதும், அவர்களது அக்கறையும் ஆர்வமும் அசாத்தியம். அவர்களே பிரமாதமாகப் படிக்கும் போது நாம் இன்னும் கவனமாகப் படிக்க வேண்டாமா, என்று நினைத்துக் கொள்வேன்!"

மூன்று வருடங்கள் 'இன்டர்னல் மெடிசின்' படித்துவிட்டு

அதிர்ஷ்ட எண்-

'ஆன்காலஜி' எனப்படும் புற்று நோய் மருத்துவத்தில் தேர்ச்சி பெற ராதாவுக்கு விருப்பமாம். "அமெரிக்காவுக்குச் சென்று மேற்படிப்புப் படித்தாலும், இந்தியாவுக்குத் திரும்பி விடுவேன்!" என்கிறார் உறுதியாக.

காரணம்?

"மருத்துவக் கல்லூரியில் படிக்கும்போது ஜி.ஹெச்சில் உள்ள ஏழை நோயாளிகளிடமிருந்துதானே பரிசோதனைகள் மூலம் கற்றோம்? அவர்கள் முகம் சுளிக்காமல், அலுத்துக் கொள்ளாமல் எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்திராவிட்டால் எங்கள் மருத்துவப் பயிற்சியே முழுமையானதாக இருந்திருக்காது அல்லவா? அதனால் வெளிநாடு போய்ப் படித்தாலும் இந்தியாவுக்குத் திரும்பி, சென்னையில்தான் பிராக்டிஸ் செய்யப் போகிறேன்!" என்கிறார்.

ராதா இரண்டு வருடங்களாக கர்நாடக இசை பயின்று வருகிறார். (குரு: உடுப்பி கோபாலகிருஷ்ணன்) மகாராஜபுரம் சந்தானம் மற்றும் மதுரை டி.என். சேஷகோபாலன் – இருவரது இசையையுமே வெகுவாக ரசிப்பாராம். ஆங்கிலத்தில் சமூக நாவல்கள் படிக்கப் பிடிக்கும். தமிழில் எல்லாப் பத்திரிகைகளையும் படித்து விடுகிறார்!

"தமிழ்தான் இரண்டாம் மொழி. தமிழில் ஆர்வம் அதிகமாக என் ஆசிரியை ஸ்ரீமதி உஷாதான் காரணம். பாரதியார் தினம் போன்ற சிறப்பு விழாக்களை பிரமாதமாக நடத்திவிடுவார்!" என்று புகழ்கிறார் ராதா ரகுபதி.

ராதாவுக்கு ஒரே ஒரு தங்கை மட்டுமே. அண்ணா பல்கலைக் கழகத்தில் ஆர்க்கிடெக்சர் படித்து வருகிறார்.

சந்திப்பு: சாருகேசி
அட்டை, படங்கள்: வெங்கடேஷ்



13

நீதிதேவனுக்கும் அல்வா!

மார்ச் மாதம் ஒன்றாம் தேதி, 2002. குஜராத் மாநிலம் முழுவதும் கலவரத் தீ. கோத்ரா ரயில் எரிப்பைத் தொடர்ந்து நடந்த கதவடைப்பு, வேலை நிறுத்தம், மாநிலமெங்கும் வன்முறைக்குத் தூண்டில் போட்டது. முஸ்லிம் மக்களின் வீடுகளும், அலுவலகங்களும், தொழிற்சாலைகளும், கடைகளும் குறி வைத்துத் தாக்கப்பட்டன. வன்முறையாளர்களை அடக்க வேண்டிய காக்கிச் சட்டைகள், கைகட்டிக்கொண்டு வேடிக்கைப் பார்த்தன. ஏன்... சில இடங்களில் அவர்களும், கலவரக்காரர்களுடன் சேர்ந்து கொண்டனர்! எங்கும் மரண ஓலம். வயது வித்தியாசம் பாராமல் சிறுபான்மை பெண்கள் கற்பழிக்கப் பட்டார்கள். உயிருடன் எரிக்கப்பட்டார்கள்!

பரோடா நகரின் ஹனுமான் டேக்ரி மிக நெருக்கடியான இடம். நகரின் பிரபலமான பெஸ்ட் பேக்கரி அங்கேதான் இருந்தது. அதை நடத்தி வந்தவர்கள் முஸ்லிம் குடும்பத்தினர். முஸ்லிம்களின் ஒவ்வொரு கடையாக குறி வைத்துக் கொளுத்தி வந்த கும்பல், பெஸ்ட் பேக்கரியையும் விடவில்லை. பயத்தில் உள்ளே கதவைப் பூட்டிக் கொண்டிருந்தவர்கள் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். "வெளியில் ஏதோ நடக்கிறது என்பது அவர்களுக்கு தெரிந்ததே தவிர, என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. திடீரென்று அமைதி. சில நிமிடங்களுக்குப் பிறகு உச்சிக் கூரையில் ஏதோ பரபரப்பு. மின்னலென உள்ளே உஷ்ணம் தாக்கியவுடன், புரிந்து விட்டது. "ஓ! பாவிகள் தீ வைத்து விட்டார்கள். வெளியில் தப்பித்து வரலாம் என்றால் தாழ்ப்பாள் போட்டு விட்டார்கள். "காப்பாத்துங்க... காப்பாத்துங்க..."



உதவிக்கு யாரும் வரவில்லை; மாறாக வெளியே உற்சாகக் குரல்கள். "ஒழிந்தார்கள், ஒழிந்தார்கள்" உள்ளே இருந்தவர்களின் மரண ஓலம்... கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிப் போனது. எரிக்கப்பட்டவர்கள் மொத்தம் பன்னிரண்டு பேர். அதில் மூவர் இந்துக்கள். தினசரி கூலிக்கு பேக்கரிக்கு வேலை செய்தவர்கள். மூன்று பெண்கள்; இரண்டு குழந்தைகள். எல்லோரும் எலும்புப் பொடியல்களாகப் போனார்கள்.


"**ந**ன்றாகச் சொல்லுமா... நீ கண்ணாலப் பார்த்தயா?... இவங்கதான் பேக்கரியை எரிச்சாங்களா?"

"ஆமாம் ஸார்.." என்று நடுங்கியபடி சொன்னார் ஜஹீரா. உயிருடன் எரிக்கப்பட்டவர்கள் அவளது ரத்தத்தின் ரத்தம். கண்ணெதிரே அவர்கள் பொசுங்கிப் போவதைப் பார்த்த அதிர்ச்சியிலிருந்து அவர் மீளவில்லை. அந்த கொடுஞ் செயலைப் புரிந்த இருபத்தியொரு பெயரைச் ஜஹீரா சொல்ல, சொல்ல போலீஸ் வழக்குப் பதிவு செய்து அவர்களைக் கைது செய்தது. போலீஸுக்கு மட்டுமல்ல; மனித உரிமைக் கமிஷன், விசாரிக்க வந்த தன்னார்வ

தொண்டு நிறுவனக் குழுக்கள் என்று எல்லோரிடமும் நடந்ததை அப்படியே சொன்னார் ஜஹீரா. ஹனுமார் கோயிலில், இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் பிரார்த்தனை நடந்தது.

2003ம் வருடம், ஜூலை மாதம் 28ம் தேதி. அதே பரோடா நகரம். அதே ஹனுமார் கோயில். போலீஸ்





லாபியிலிருந்து இருபத்தியொரு பேர் இறங்கினார்கள். 'ஜெய் ஸ்ரீ ராம்' என்ற கோஷம் அந்தப் பகுதியை நிறைத்தது. போலீஸ் லாரியிலிருந்து இறங்கியவர்களுக்கு ஆரத்தியோடு வரவேற்பு. அவர்கள்? பேக்கரி எரிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள்தான்! குற்றம் நிரூபிக்கப்படாததால் அவர்கள் எல்லோரையும் விடுதலை செய்துவிட்டார் கூடுதல் செஷன்ஸ் நீதிபதி மஹிதா. விடுதலையானவர்கள் மத்தியில் ஹீரோ போல் நின்று கொண்டிருந்தார் உள்ளூர் பா.ஜ.க. எம்.எல்.ஏ. மது ஸ்ரீவத்சவ். நேரில் பார்த்தவர்கள் போலீஸில் புகார் செய்தும் அந்தக் கொடுஞ்செயல் புரிந்தவர்கள் தப்பித்தது எப்படி? நீதிதேவன் மயங்கி விட்டாரா?

அகமதாபாத் ஹிந்து பத்திரிகை நிருபர் மானஸ்தாஸ்குப்தாவைத் தொலைபேசியில் அழைத்து "நடந்தது என்ன?" என்று கேட்டோம்.


"மொத்தம் எழுபத்திமூன்று பேர் சாட்சிகள். இது தவிர புகார் சொன்ன ஜஹீரா. இவரைக் கோர்ட்டுக்கு சாட்சி சொல்ல அழைத்து வந்தவரே பா.ஜ.க. எம்எல்ஏதான். அவர் உட்பட எழுபத்து மூன்று சாட்சிகளும் குற்றம் சாட்டப்பட்டவர்களை ''அடையாளம் தெரியாது'' என்று சொல்லி விட்டார்கள். முதலில் போலீஸிடம் வாக்கு மூலம் கொடுத்தவர்கள் தடாலடியாக பல்டி அடித்துவிட்டார்கள். இதைப் பற்றியெல்லாம் போலீஸோ அல்லது அரசாங்க வழக்கறிஞரோ எந்தக் கவலையும் பட்டதாகத் தெரியவில்லை. இதைவிட வினோதம் என்னவென்றால், சாட்சி சொன்ன பலர், "கைது செய்யப்பட்டவர்கள் உண்மையில் உள்ளே தீயில் மாட்டிக் கொண்டவர்களைக் காப்பாற்ற முயன்றவர்கள்தானே தவிர, அவர்கள் பேக்கரியை எரிக்கவில்லை" என்று மாற்றிச் சொன்னதுதான்! புகார் கொடுத்தவரும், சாட்சிகளும் இப்படிப் பல்டியடித்தால் நீதிபதி என்ன செய்வார்? அவர் தம் முன் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தை அடிப்படையாக வைத்துதானே தீர்ப்பு எழுத முடியும்? எனவே குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். ஆனால் நடந்தது என்ன என்று எல்லோருடைய மனசாட்சிக்கும் தெரியும். சாட்சிகளை கோர்ட்டுக்கு அழைத்து வந்தவர்கள் லோக்கல் பா.ஜ.க பிரமுகர்கள். குஜராத்தில் நடப்பது பா.ஜ.க அரசு. என்ன நடந்திருக்கும் என்று எல்லோரும் சுலபமாக ஊகித்து விடலாமே. சம்பவத்தைப் பார்த்து புகார் செய்த ஜஹீரா இப்போது காணாமல்

போய்விட்டார்" என்று சொன்னார் தாஸ் குப்தா.

"அது சரி... இந்த இருபத்தியோரு பேரும் குற்றம் செய்யவில்லையென்றால், பேக்கரியில் தீயை வைத்து, பன்னிரண்டு பேரை எரித்துக் கொன்றது யார்? அரசு பதில் சொல்லுமா?" என்று கேட்கிறார் மக்கள் உரிமை கழகப் பிரமுகர் ரோஹித் பிரஜாபதி. "தீர்ப்பு வந்தபின் இதில் ஏதோ சதி நடந்திருக்கிறது" என்று கத்துவதைவிட, விசாரணையின்போதே சிவில் உரிமைக் கழகம் மற்றும் தன்னார்வ அமைப்புகள், அக்கறையுடன் வழக்கின் போக்கைக் கவனித்து, ஒரு விழிப்புணர்வு உண்டாக்கியிருக்க வேண்டும்... அப்போது நீதி தேவனுக்கு அல்வா கொடுப்பதைத் தடுத்திருக்கலாமே'' என்று மைனாரிட்டி அமைப்புகள் சொல்கின்றன. தீர்ப்பை வழங்கிய நீதிபதி, அரசியல்வாதிகளைப் பற்றியும், இட ஒதுக்கீடு பற்றியும் தமது விமர்சனத்தைச் சொல்லியிருக்கிறார். ஆனால் அரசு வழக்கு நடத்திய விதத்தைப் பற்றியும், சாட்சிகள் பல்டி அடித்ததைப் பற்றியும் ஒரு விமர்சனமும் செய்யவில்லையே என்று சுட்டிக் காட்டுகின்றன அந்த அமைப்புகள், குஜராத் அரசு மேல்முறையீடு செய்வதாக இன்னமும் சொல்லவில்லை.

"இந்த வழக்குகளின் மேல் முறையீடு ஒரு பக்கம் இருக்கட்டும். குஜராத் கலவரம் தொடர்பான வேறு பல முக்கிய வழக்குகளின் கதியை நினைத்தால் டென்ஷன் ஏறுகிறது. முக்கியமாக அகமதாபாத் நகரில் நரோதா பாட்டியா மற்றும் குல்மார்க் அபார்ட்மெண்ட்ஸ் எரிப்பு வழக்கு, சர்தார் பிபுரா கிராமத்தில் இருநூற்றி ஐம்பது பேர் உயிரோடு எரிக்கப்பட்ட வழக்கு ஆகியவற்றில் பா.ஜ.க எம்.எல்.ஏக்கள், மற்றும் சங்க அமைப்புகளின் பிரமுகர்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். சாட்சியம் இல்லாததால் போலீஸ் யாரையும் கைது செய்யவில்லை. இந்த வழக்குகளிலும் நீதிமன்றத்தைத் திசை திருப்பும் வேலை நடக்கலாம். எனவே குஜராத் கலவரம் தொடர்பான வழக்குகளை வேறு மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டும்" என்று மைனாரிட்டி அமைப்புகள் குரல் கொடுத்திருக்கின்றன.

- சஞ்சயன்



அன்புச் சகோதரியின் அடக்குமுறை அரசு!

கடந்த ஆண்டே அரசு ஊழியர் வேலை நிறுத்தம் தொடங்கியது. சிக்கன நடவடிக்கைகளை எடுப்பதாகச் சொல்லி, ஜெயலலிதா அரசு, அரசு ஊழியர்கள் வருமானத்தில் கை வைத்த போதே முளைவிட்டது. அதை ஒடுக்குவதற்காக அத்தியாவசிய சேவைகள் காப்புச் சட்டத்தில் அவசர அவசரமாகச் சில மாற்றங்களைக் கொணர்ந்து நிறைவேற்றியது அரசு. இப்போதைய வேலை நிறுத்தத்தை ஒடுக்க இக் கடுமையான சட்டத்தைப் பயன்படுத்தி, அரசு ஊழியர்களையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் கைது செய்துள்ளது தமிழக அரசு. 21 யூனியன் தலைவர்கள் கைதான பின்னரும், தலைமைச் செயலகம் உள்பட பல அலுவலகங்களில் வேலை நிறுத்தம் வெற்றிகரமாகவே தொடங்கியிருக்கிறது. இது எத்தனை நாள் நீடிக்கும் என்பதைப் பொறுத்து, தமிழக அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடைஞ்சலும் நஷ்டமும் அதிகரித்து வரும்.

'அரைக்காசு உத்தியோகமானாலும் அரசாங்க உத்தியோகம்' என்று பேசிய காலம் உண்டு. இப்போது அரசாங்கச் சம்பளம் என்பது அரைக்காசு ஊதியம் அல்ல; கணிசமானதாகவே இருக்கிறது. தனியார் துறையுடன் ஒப்புநோக்க, அரசு ஊழியர்களுக்கான பணி விதிகளும் சலுகைகளும் கவர்ச்சிகரமானவை.

அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர்கள், அரசு ஊழியர்களைத் திருப்தி செய்ய விதவிதமான சலுகைகளை அளித்தார்கள். மத்திய




கல்கி



2003 ஜூலை 13
சுபானு ஆனி 29
மலர் : 61
இதழ் : 50

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் தமிழக அரசு ஊழியர்களும் பெற வழிவகை செய்யப்பட்டது. போதும் போதாதற்கு மத்திய ஊதியக் கமிஷன் அவ்வப்போது அரசு ஊழியர் சம்பள விகிதத்தை ஆய்ந்து சிபாரிசுகள் வெளியிட, அவையும் அமல்படுத்தப்படு கின்றன.


'இத்தனையும் நடக்கிறபோது, அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது அநியாயம் இல்லையா?' என்ற கேள்வி எழுகிறது. ஆனால், இம்முறை அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வது மேலும் சலுகைகள் கேட்டு அல்ல. நிறுத்தப்பட்ட பல சலுகைகளையும், தடைப்பட்ட வருமானத்தையும்தான் (போனஸ், பென்ஷன், கிராஜுவிடி) அவர்கள் திரும்பக் கேட்கிறார்கள்.

நீண்ட நாட்களாக அனுபவித்த எந்தவொரு சலுகையையும் திரும்பப் பெறுவது மிகவும் கடினம். பழக்கப்பட்டுப் போன ஒரு வாழ்க்கை முறை, வாழ்க்கைத் தரத்திலிருந்து வீழ்ச்சியுறும் வகையில் ஊதியத்தைக் குறைப்பது நியாயமல்ல.

'தஞ்சையில் வறட்சி; விவசாயிகள் கஷ்டப்படவில்லையா? தமிழகமே தவிக்கிறபோது அரசு ஊழியர்கள் பென்ஷன், கிராஜுவிடி குறைத்ததற்காக அலறுவது என்ன நியாயம்?' என்ற பொருள்பட பேசியுள்ளார் ஜெயலலிதா.

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிற இந்த வாதம் சிறிதும் நியாயமானது அல்ல. அரசு செலவினங்களைக் குறைத்தாக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டிருப்பது வாஸ்தவமே. ஆனால் முன்னுதாரணமாக அமைச்சர்களோ, எம்.எல்.ஏக் களோ என்ன செலவுகளைக் குறைத்தார்கள்? எவ்வளவு தொகையை அரசுக்கு மிச்சம் பிடித்துக் கொடுத்தார்கள்?

அரசு செயல்பாட்டையே சாதனைகளென முரசறையும் முழுப்பக்க விளம்பரங்கள் நாளிதழ்களில் தொடர்கின்றன. 'உங்கள் அன்புச் சகோதரியின் அரசு வழங்குகிறது'



என்று தினமொரு புதுத் திட்டத்தின் கீழ் வீண் செலவுக்கு வழிசெய்யப்பட்டுத்தான் வருகிறது.

ஆயிரத்தெட்டு ஜோடிகளுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டு, அதை ஆன்மிகப் புரட்சி என்று அறிவிப்பது போன்ற அபத்தங்கள், அரசு முயற்சியில், மேற்பார்வையில் நடைபெறுகிற போது, 'கஜானா காலி' என்ற புலம்பலுக்கு என்ன அர்த்தம் இருக்கிறது!

அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை நாம் ஆதரிப்பதற்கில்லை. ஆனால், ஜெயலலிதா அரசு இப் பிரச்னையை எதிர்கொண்ட விதத்தில் காட்டிய முதிர்ச்சியின்மை, நிலைமையை மோசமாக்கியிருக்கிறது.

முதலில் கஜானா காலி என்று சொல்லி பல சலுகைகளை ரத்து செய்கிறார். எதிர்ப்பு தீவிரமடைந்து, வேலை நிறுத்தம் உறுதி என்ற நிலையில், தாமே சிலவற்றைத் திரும்பவும் அளிக்கிறார். 'இதையும் மீறி வேலை நிறுத்தம் செய்தால், எஸ்மா பாயும்' என்று மிரட்டுவதோடு, செயலிலும் காட்டுகிறார். ஒவ்வொரு நிலையிலும் தமது முடிவே இறுதியானது, அதையே ஏற்றாக வேண்டும் என்பது போன்ற சூழலை உருவாக்குகிறார். இந்த அணுகுமுறை மனோதத்துவ ரீதியில் வெற்றி பெறாது. அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் சிலவற்றை, பல சிரமங்களுக்கிடையில் ஏற்று, தாம் அவர்களுக்காக விட்டுக் கொடுப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தாமல், அதிகார பலத்தைப் பிரயோகிப்பது பலன் தராது.

இப்போது எஸ்மாவுக்குப் பயந்து வேண்டுமானால் சிலர் பணிக்கு வரலாம். ஆனால் அவர்கள் கூட உற்சாகமாகப் பணியாற்றி அரசு அலுவல்கள் சிறப்பாக நடைபெற உதவ மாட்டார்கள். பழிவாங்க இன்னொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பார்கள். 'ஜெ' அரசின் 'உனக்காச்சு - எனக்காச்சு, பார்த்துடலாம்' என்பது போன்ற அணுகுமுறை வன்மத்தையே வளர்க்கும்; கடமையுணர்வை அல்ல.

வட்டமேஜை



✉ அடப்பாவமே...! எல்லார்கிட்டேயும் மரியாதையா பழகணுங்கறதுல ரஜினியின் மகள் அப்பா பிள்ளையாமே! அப்புறம் எப்படி முதல்வராக முடியுங்க?
திசையன்விளை, ஆர்ஜி. ஹரிஹரா.

✉ நீரில் அலையும் எண்ணெய்த் திவலைகள் போல இருக்கும் மூத்த குடிமகன்களின் வாழ்க்கையை அற்புதமாகப் பிரதிபலித்தது ‘அட்ரஸ் புத்தகம்’ சிறுகதை.
குட்டலாடம்பட்டி, அம்பிகா மூர்த்தி.

✉ ‘அடடா! அப்படியா?’ என்று உண்மையிலேயே வியக்க வைத்தது ‘மரக்கிளையில் ஒரு வீடு!’ கட்டுரை.
மதுரை - 1, என். பாலகிருஷ்ணன்.

✉ ஆங்காங்கு தூவப்பட்டிருந்த துணுக்குகள் முந்திரி, திராட்சை, ஏலக்காய் போல சுவையும், வாசமும் சேர்த்துவிட்டன.
அருகந்தம்பூண்டி, மலை அரசன்.

✉ அரசியல் நிகழ்வுகளை ஆங்காங்கே கலந்து ‘பாறை’ படத்தை, விமரிசித்திருந்ததைப் படித்தவுடன் என் மனம் ‘அம்மா’வைச் சந்தித்துவிட்டு வந்த ராமராஜன் போல பூரித்தது!
சென்னை - 91, பால. சூர்யா.

✉ இரண்டு பேருக்கும் சேர்த்து ஒரே குல்லாய் - கார்ட்டூன் சூப்பர். ஆனால்... சர்வ கட்சியினரும் கைகோத்துக் கொண்டு ஏமாளி மக்களுக்கு நிரந்தரமாக வைக்கிறார்களே... ஒரு குல்லாய்...! அதுதான் சூப்பரோ சூப்பர் குல்லாய்!
கும்பகோணம், சித்ரா கிருஷ்ணமூர்த்தி.

✉ ஏழை மாணவமணிகளுக்கு உதவுகிற ‘அமரர் கல்கி நினைவு அறக்கட்டளை’யின் தூய பணிக்கு வாழ்த்து!
திருப்பூர்-4, பா. சு. மணிவண்ணன்.

✉ ‘கல்லூரிப் பெண்களுக்கு பேல்பூரி தடையா?’ டயட் கட்டுரை மிக மிக உபயோகமுள்ளதாகவும், யதார்த்தமாகவும் இருந்தது. தாரிணி கிருஷ்ணனுக்கு வாழ்த்து!
திருச்சி - 6, வை. கிருஷ்ணமூர்த்தி.

✉ ‘ஔவியம் ஒதுக்கு’ கட்டுரையில் ஸ்ரீ கிருஷ்ணர் சாப்பிடுவதற்குப் போடப்பட்ட வாழை இலையின் நுனி, இடப் பக்கமாகத்தானே இருக்க வேண்டும்? வலப்பக்கம் போடப்பட்டிருக்கிறதே! பக்தர்களின் பக்தியை மெச்சி, பகவான் இதையெல்லாம் பொருட்படுத்த மாட்டாரோ என்னவோ...!
சென்னை - 34, என்.கே. ஆராவமுதன்.

நல்லா போட்டீங்க குல்லா!



பனிமலை டு எரிமலை!

கோடை கடுமையாகத் தாக்கி மக்கள் வெந்து கொண்டிருக்கும்போது பெங்களூரில் ஜில்லென்ற ஒரு புகைப்படக் கண்காட்சி. அன்டார்டிகாவில் இருபது நாட்கள் இருந்து அருமையான காட்சிகளை, இயற்கை எழிலை, பெங்குவின்களைத் தம் காமிராவில் சிறைப்படுத்தி காட்சிக்கு வைத்திருக்கிறார் ஷரெனிக் பல்தோத்தா.

"அன்டார்டிகாவுக்குப் போக வேண்டும் என்பது என் நீண்ட நாளைய கனவு. மனத்தில் உறுதியும், உற்சாகமும், துணிச்சலும் இருந்தாலே போதுமானது. அங்கிருக்கும் சீதோஷ்ண நிலையே தனி! -30°C முதல் + 15°C ... என்ற கணக்கில் தட்ப வெப்ப நிலை. எலும்பை ஊடுருவும் குளிர். நாங்கள் அந்தக் கண்டத்திற்கு அவ்வப்போது விஸிட் அடித்து விட்டுக் கப்பலுக்குத் திரும்பி விடுவோம். அந்தத் தீவில் தங்க முடியாது. பெங்குவின்கள், பனி மலைகள், ஐஸ் கட்டிகள், வேறு சில அற்புதமான ஜீவராசிகள்... என வியக்க வைக்கும் பிரதேசம் அன்டார்டிகா'' என்கிறார் ஷரெனிக் குளிரக் குளிர!

பனிப்பாறையைப் பார்க்கும்போது நாம் உறைந்து போகிறோம். நகரும் பனிமலைகள் நமக்கு டைட்டானிக்கை ஞாபகப்படுத்துகின்றன. கூட்டம் கூட்டமாகப் பெங்குவின்கள் 'க்ரில்' என்ற ஒரு வகை மீனை உணவாக உட்கொள்கின்றன. ஏதோ கோட் சூட் போட்டுக் கொண்டு அவசர மீட்டிங்கில் கலந்து கொள்கிறாற்போல ஒரு பிரமை ஏற்படுத்துகின்றன, இந்தப் பெங்குவின்கள்! எத்தனை அழகு!









மும்பையில் பிஸினஸ்மேனாக இருக்கும் ஷரெனிக், தன் அன்டார்டிகா பயணக் காட்சிகளை, தொண்ணூறு புகைப் படங்களாக மக்கள் பார்வைக்கு வைத்திருக்கிறார்.

சமீபத்தில் போட்ஸ்வானா சென்று முதலைகளைப் பற்றிய ஆராய்ச்சியும் செய்திருக்கிறார் இவர்.

"நாம் கனவு மட்டுமே காணக் கூடாது. அதைச் செயலிலும் காட்ட வேண்டும். இயற்கை எழில்களைக் கண்டு களிப்பதோடு அதைக் காப்பாற்றவும் வேண்டும்'' என்று சொல்லும் ஷரெனிக்கின் அடுத்த இலக்கு, ஆஸ்திரேலியாவிலிருக்கும் 'வானாவூத்து' என்ற இடமாம். அங்கு தினமும் எரிமலைதானாம். "வெடித்துச் சிதறுவதைப் பார்க்கணும்.'' என்கிறார் ஷரெனிக்.

- லதா சேகர்



எங்க ஊரு சங்கதி

பேசும் பெருமாள்!

காஞ்சிபுரம் - வந்தவாசி நெடுஞ்சாலையில் உள்ள கூழமந்தல் கிராமத்தில் ஸ்ரீ பேசும் பெருமாள் திருக்கோயில் உள்ளது. பேசும் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றார். மிகவும் கம்பீரமான தோற்றம். இருகைகளில் சங்கு சக்கரங்கள், வலக்கை அருள்பாலிக்கும் வரத ஹஸ்தம், இடக்கை தொடையில் பதிந்துள்ளது. ஏராளமான அணிகலன்கள், கிரீடம், அதில் பல வண்ண வேலைப்பாடுகள், ஸ்ரீதேவி, பூதேவி இருவரும் அணிந்துள்ள அழகிய அணிகலன்கள், தலைக்கிரீடங்களும் மெய் மறக்கச் செய்கின்றன. பெருமாள் முன்பு நின்றால் பெருமாள் புன்முறுவலுடன் நம்மிடம் பேசுவது போலவே தோன்றுகிறது. அதனால் 'பேசும் பெருமாள்' என்று அழைக்கப்படுகிறார்.

பதிமூன்றாம் நூற்றாண்டின் நடுவில் ஆந்திர மாநிலத்தில் உள்ள நெல்லூரையும் காஞ்சிபுரத்தையும் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர்கள், காகதீயர்கள். அவர்களில் தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்டவன் ஸ்ரீவிஜயகண்ட கோபாலன் - இவ்வரசன் இக் கோயிலுக்கு வந்து, பேசும் பெருமானிடம் பேசியதற்கு ஆதாரமாக இரண்டு வாயிற்படி நிலைக்கால்களில் கல்வெட்டுக்கள் பொறித்துள்ளான். தற்போது இரண்டு கல்வெட்டுக்களும் அப்படியே உள்ளன. இக் கோவிலுக்காக அந்தியிலும், சந்தியிலும் மூன்று விளக்குகள் ஏற்ற பதினான்கு பணமும் பதின்கலநெல்லும் கொடுத்துள்ளான். இவ்வூர்ப் பட்டன் (பட்டாச்சாரியார்) ஒருவர், உலகில் சூரியன், சந்திரன் உள்ளவரை, அந்த மூன்று விளக்கையும் கோவிலில் ஏற்ற இந்தப் பணத்தையும், நெல்லையும் பெற்றுக் கொண்ட விவரமும் உள்ளது.

இக் கோயிலில் முக்கிய சிறப்பு, இப் பேசும் பெருமாள் குபேர ரேகை கொண்டு அருள்பாலிப்பதால் பொருட் செல்வங்களும், மன அமைதியும் கொடுக்கின்ற எம் பெருமானாகத் திகழ்கிறார். முக்கியமாக புத்திர பாக்கியம் பெற விரும்புபவர்களுக்கு மிகச் சிறந்த திருத்தலமாகும். நிறைய பக்தர்கள் துலாபாரம் செலுத்துவதையும், பல்வேறு நேர்த்திக் கடன் செலுத்துவதையும் காணலாம். புது மணத் தம்பதிகள் அவசியம் சென்று வணங்க வேண்டிய தலம்.

- த. ரவிக்குமார்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி


P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
Old No. 102, New No. 138, USMAN ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.
PH: 24344442, 24327764 TUESDAY HOLIDAY
(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

PROPRIETOR : P. RAVINDHIRAN

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் **P.R.** ஜுவல்லரிக்கு வந்து ரூ.400/-க்கு ராசிக்கல் வாங்கி பயன் பெறுங்கள். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

ராசி	ராசிக்கல்	வெள்ளி மோதிரம் விலை	
மேஷம், விருச்சிகம்	பவழம் -	2 CARAT	400/-
ரிஷபம், துலாம்	வைரம் -	5 CENT	2250/-
மிதுனம், கன்னி	மரகத பச்சை -	20 CENT	400/-
கடகம்	முத்து -	2 CARAT	400/-
சிம்மம்	மாணிக்கம் -	20 CENT	400/-
தனுசு, மீனம்	புஷ்பராகம் -	1 CARAT	400/-
	கனகபுஷ்பராகம் -	½ CARAT	1000/-
மகரம், கும்பம்	நீலம் -	20 CENT	400/-



எங்களிடம் நியூமராலஜிபடியும் கல் மோதிரங்கள் கிடைக்கும்.

TOPAZ, MOONSTONE, AMETHYST, TARQUISE, TIGER EYE, BLOOD STONE, OPAL, AQUAMARINE.

மதர் மோதிரம், மதர் டாலர் தங்கத்திலும், வெள்ளியிலும் ரெடியாக கிடைக்கும்.

தங்கத்தில் ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 1800/- முதல் 5000/-ம் வரை உடனே கிடைக்கும்.

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம் விலை ரூ. 400/- இதை அணிவதால் படிப்பு, ஞாபக சக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம், செல்வ வளம் பெருகும்.

தபால் மூலம் மோதிரம் 1க்கு ரூ 450/-

M.O. (or) D.D. அனுப்பவும்.

தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

மேஷ ராசி, விருச்சிக ராசி - பவழம் * ரிஷப ராசி, துலாம் ராசி - வைரம் * மிதுன ராசி, கன்னி ராசி - மரகத பச்சை

கடகராசி - முத்து * சிம்மராசி - மாணிக்கம் * தனுசுராசி, மீனராசி - புஷ்பராகம் * மகரராசி, கும்பராசி - நீலம் *

குறிப்பு : தினசரி காலை ராஜ் டீவியில் 6.55 மணிக்கு சிறப்புப் பேட்டியை பார்க்கவும்

டைம்டேபிள் பார்த்தேன். வெள்ளிக்கிழமை. இன்று சோஷியல் மட்டும் இல்லை. அதைத் தனியே எடுத்து வைத்தேன். மற்ற புத்தகங்களை பேக்கில் அடுக்கினேன். சுற்றும் முற்றும் பார்த்தேன். அம்மா சமையலறையில் இருந்தாள். அப்பா பாத்ரூமில் குளிப்பது கேட்டது. பிறகு அந்தக் கத்தியை எடுத்தேன். அம்மா காய்கறி நறுக்குகிற கத்தி. அதைப் புத்தக சந்தில் கவனமாய் மறைத்தேன். இலேசாய் உடம்பில் நடுக்கம் வந்தது.

"சுஜா, என்னடீ பண்றே... ஸ்கூலுக்கு டயம் ஆயிடுச்சு..." அம்மா உள்ளேயிருந்து கத்தினாள்.

"இதோ ஒரு நோட்டுக்கு லேபிள் ஒட்டிட்டு வந்தர்றேம்மா..."

அவசரமாய் லேபிள் ஒட்டினேன். கை விரல்களில் இன்னும் நடுக்கம் இருந்தது. பெயர் எழுதினேன். எழுத்து இலேசாய் நெளிந்தது. எஸ்.சுஜாதா. தேர்ட் ஸ்டாண்டர்ட். பி. செக்ஷன். மேத்ஸ் நோட், குட் ஷெபார்ட் மெட்ரிகுலேஷன் ஸ்கூல். எழுதி முடித்து பேக்கை மூடி பத்திரப்படுத்தினேன். உள்ளே எழுந்து ஓடினேன்.

சமையலறை பரபரப்பில் அம்மா. இட்டிலி தட்டை இறக்கினாள். என்னைக் கிளப்பி விட்டு அம்மாவும் ஆபீஸ் கிளம்ப வேண்டும். எட்டரைக்கெல்லாம் அம்மா எலக்ட்ரிக் டிரெயினைப் பிடித்தால்தான் பத்து மணிக்கு ஆபீஸில் இருக்க முடியும். நான் ஸ்கூல் விட்டு டியூஷன் முடித்து வர இரவு எட்டாகும். அம்மா அப்போதும் ஆபீஸ் விட்டு வந்து சமையலறையில்தான் இருப்பாள். அடிக்கடி தைலம் தேய்த்துக் கொள்வாள்.



■ சரசுராம் ■

நேற்றே வகுப்பில் நடந்த பிரச்னையை அம்மாவிடம் சொல்ல நெருங்கினேன். அம்மா எப்பொழுதும் போல் தைல வாசனையில் இருந்தாள்.

"அம்மா... அந்த பரத் இல்ல..." நான் சொல்லி முடிக்கும் முன்பே என் பேச்சை நிறுத்தினாள்.

"போதும்மா. அம்மாவுக்குத் தலை வலிக்குது.. அப்பா வந்ததும் சொல்லு..." அம்மா திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அப்பா அம்மாவைவிட மோசம், காலையில் அப்பா எப்பொழுதுமே வாட்ச்சைப் பார்த்து அலறிக் கொண்டுதான் எழுந்திருப்பார். அப்புறம் டீ குடித்தபடி ஹிந்துப் பேப்பர். வேகமாய் ஒரு குளியல். எல்லாம் அவசரகதியில் நடக்கும். எனக்கு சாப்ளின் படம் பார்க்கிற மாதிரி இருக்கும். அப்பாவுக்கு மயிலாப்பூரில் ஆபீஸ். எப்போது ஆபீஸ் விடுவார்கள் என்றெல்லாம் தெரியாது. கிளப்பெல்லாம் போய் விளையாடி விட்டு வர இரவாகிவிடுகிறது. அப்பா அதிகபட்சம் என்னைத் தூக்கத்திலேயே கொஞ்சுவார். அல்லது அது என் கனவாகக் கூட இருக்கலாம்.

தட்டில் அம்மா இட்டிலி வைத்தாள். சாப்பிடத் தோன்றவில்லை. வேண்டாம் என்றால் அம்மா விட மாட்டாள். சாப்பிடத் தொடங்கினேன். ஒருமுறை திரும்பி பேக்கைப் பார்த்துக் கொண்டேன். அம்மாவிடம் மறுபடியும் பரத் பற்றி சொல்லிப் பார்க்



கத்தி

கலாமா என்று தோன்றியது.

"அம்மா அந்த பரத் நேத்து என்ன பண்ணினான்..." இப்போதும் என்னால் அதை முழுமையாய்ச் சொல்ல முடிய வில்லை. அம்மா திட்டினாள்.

"போதும்... எப்பப் பார்த்தாலும் அந்த பரத்... பரத்... அவன் என்ன பண்ணினாலும் கவிதா மிஸ்கிட்ட சொல்லு.. அவங்க அடி பிச்சிருவாங்க தெரியுதா? சும்மா என்னைத் தொல்லை பண்ணிட்டு... எட்டு வயசாகுது இன்னும் எதுவும் தெரியற தில்ல..." அம்மா திட்டிக் கொண்டே இன்னொரு இட்டிலி வைத்தாள்.

அம்மா சொல்கிற மாதிரியில்லை கவிதா மிஸ். யாரையும் அடிக்கிற ஆளில்லை. கூப்பிட்டுத் திட்டினால்கூட வேறு யாருக்கும் கேட்காது. பெரிய தப்புக்குக் கண்ணை உருட்டிப் பார்ப்பார்கள். காதைத் திருகுவார்கள். அதிக தண்டனையாய் மண்டையில் குட்டு விழும். அவ்வளவுதான். அதற்கெல்லாம் அடங்குகிற ஆளில்லை அந்த பரத். கவிதா மிஸ்ஸிற்குப் பாடத்தைவிட அழகாய் கதைகள் சொல்ல வரும். சிங்கம், புலி, கரடிகள் வரும் கதைகளில். எல்லாக் கதையிலும் அந்த நரி கெட்டதே செய்யும், அந்த பரத் மாதிரி.

பரத் என் வகுப்புதான். அவனோடு எனக்கு எப்படி சண்டை ஆரம்பித்தது என ஞாபகமில்லை. ஏன் என்னை அவனுக்குப் பிடிக்காமல் போனது என்றும் தெரியவில்லை. வர்ஷா தான் ஒருநாள் சொன்னாள். 'நீ அவனைவிட நல்லா படிக்கறதால இருக்குமோ?' என்றாள். அப்படி எனக்குத் தோன்றவில்லை. எனக்கும் அவனுக்கும் நான்கு ரேங்க்குகள் இடைவெளி இருக்கும். ஆக, என்னை மட்டும் அவன் வெறுப்பேத்தக் காரணம் புரியவில்லை.

எப்போதும் என்னை முறைத்தபடியே இருப்பான். என் சடையைப் பிடித்து திடீரென இழுத்துவிட்டு திருப்பிக் கொள்வான். நான் நடக்கிறபோது குறுக்கே காலை விட்டு என்னை நிறைய முறை விழ வைத்திருக்கிறான். ஆனால் தெரியாமல் என் கால் பட்டுவிட்டால் அவ்வளவுதான். பதிலுக்கு என்னை நாலு உதைவிட்டால்தான் அவனுக்கு ஆத்திரம் அடங்கும். பென்சிலை வீட்டில் மறந்துவிட்டு வந்தால் அவன் கவலைப்படுவதில்லை. தைரியமாய்

என் பாக்ஸை உருவி, என் பென்சிலை எடுத்து எழுத ஆரம்பித்து விடுவான்.

அவனுக்குக் கையில் கூர்மையான நகங்கள் இருக்கின்றன. எனக்காகவே வளர்க்கிறான் போலும். இன்னும் எரிந்து கொண்டிருக்கிறது நேற்றைய கீறல். நடந்ததை ஆரம்பத்திலேயே, அம்மாவிடம் சொல்ல முயற்சித்திருக்கிறேன். அம்மா முழுமையாய்க் கேட்டால்தானே?

"நீ எதுவும் செய்யாம அவன் அப்படி செய்ய மாட்டான்டீ..." என்றாள். அதற்குப் பிறகு அம்மாவிடம் எதையும் சொல்வதை நிறுத்திக் கொண்டேன்.

நேற்று என் டிராயிங்கால் வந்தது பிரச்னை. குளத்தருகே மேயும் இரண்டு மான்கள். ராத்திரி ரொம்ப நேரம் கண் விழித்து வரைந்த ஓவியம். குளம், புல்வெளி. இரண்டு மான்கள். நிஜம் போல் நிறம் தீட்டியிருந்தேன். வர்ஷா ஆச்சரியமாய் பார்த்தாள். 'சூப்பர்டீ' என்று கைகுலுக்கினாள். எனக்குப் பெருமையாய் இருந்தது.

அப்போதுதான் அதை ஒரு கை சட்டெனப் பிடுங்கியது. அதிர்ச்சியோடு திரும்பினேன். பரத் வில்லன் மாதிரி சிரித்தான். பரபரவென கிழித்துப் போட்டான். குளம், மான், புல்வெளியெல்லாம் தனித் தனியாய், போனது. 'இப்ப எப்படி இருக்கு' என்றான். சிரித்துக் கொண்டே ஓடி விட்டான்.

எனக்கு அழுகை வெடித்தது. வர்ஷா விடவில்லை. கவிதா மிஸ்ஸிடம் காட்டினாள். நான் இன்னும் அழுதபடியே இருந்தேன். பரத் கவிதா மிஸ் முன்னால் நிறுத்தப்பட்டான். கவிதா மிஸ் காதைத் திருகி மண்டையில் ஒரு குட்டு வைக்க, உண்மையை ஒப்புக் கொண்டான்.

பிறகு அவரவர் இடத்தில் வந்து அமர்ந்தோம். பரத் கண்களைத் துடைத்துக் கொண்டான். என்னையே முறைத்தான்.

"எங்கப்பா யாரு தெரியுமா?" என்றான்.

நான் பதில் சொல்லவில்லை. அவன் பக்கம் திரும்பக் கூட இல்லை.

"போலீஸ்! வீட்ல நீளமா கொம்பு வைச்சிருக்காரு. அது மட்டுமல்ல துப்பாக்கி கூட வைச்சிருக்காரு. நாளைக்கு பார், அதைக் கொண்டு வந்து உன்னை என்ன செய்யறேன்னு..." என்றான் கட்டைக் குரலில்.

அவன் செய்தாலும் செய்வான். எனக்குப் பயமாய் இருந்தது. பதிலுக்கு நானும் ஏதாவது செய்தாக வேண்டும். என்ன செய்யலாம்?

வகுப்பறை. கவிதா மிஸ் பாடம் எடுத்தார்கள். கவிதா மிஸ் பாடத்தின் இடையே கதையை ஆரம்பித்தார்கள். நரியைப் பற்றிய கதை. கதையில் அப்பாவி முயல் இரை தேடுகிறது. மரத்தடியில் நரி அதைக் கெட்ட எண்ணத்தோடு எட்டிப் பார்க்கிறது. நான் கதையைக் கவனித்துக் கொண்டிருந்தேன். பரத் என்னையே முறைக்கிற மாதிரி இருந்தது. நானும் திரும்பி தைரியமாய் முறைத்தேன். 'இரு நரியே உனக்கு இருக்குது!' மனத்தில் நினைத்துக் கொண்டேன்.



கதை முடியும் முன்பே ஜான்ஸி மிஸ் வந்தார்கள். கவிதா மிஸ்ஸைக் கூப்பிட்டார்கள். இருவரும் வராந்தாவில் நின்று பேச ஆரம்பித்தார்கள். வகுப்பறையில் மீண்டும் சத்தம் உயர்ந்தது. பரத் என்னிடம் திரும்பினான். பேச ஆரம்பித்தான்.

"என் பேக்ல என்ன கொண்டு வந்திருக்கேன் தெரியுமா?" என்றான்.

எனக்கு ஆத்திரம் வந்தது. பற்களைக் கடித்துக் கொண்டேன்.

"எங்கப்பாவோட துப்பாக்கி..." என்றான்.

எனக்கு அதற்கு மேல் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. பரத்தைத் திரும்பிப் பார்த்தேன். அப்படியே நரியாய்த் தெரிந்தான். அவசரமாய் என் பேக்கைத் திறந்தேன். புத்தகத்தின் இடையில் தேடினேன். கத்தி அப்படியே இருந்தது. வேகமாய் அதை வெளியே எடுத்தேன்.

"இது என்ன தெரியுமா...?" என்று

பரத்திடம் நான் கத்தியைக் காட்டினேன்.

பரத் இதை எதிர்பார்க்கவேயில்லை. நடுநடுங்கிப் போனான். அப்புறம் அவன் அலறிய அலறலில் வகுப்பறையே அதிர்ந்தது. எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். என் கையில் கத்தியைப் பார்த்ததும் வகுப்பே அதிர்ந்தது. கவிதா மிஸ் பதற்றமாய் ஓடி வந்தார்கள். அதிர்ந்து போய் நின்றார்கள். மெதுவாய் என் அருகில் வந்து மிக நிதான மாய்க் கத்தியை என் கையிலிருந்து வாங் கினார்கள்.

"இல்ல மிஸ், இவன் என்னை துப் பாக்கியில கட்டுடுவேன்னான்..." நான் பரத்தைக் காட்டினேன்.

"கணக்கு வாத்தியாரை சரித்திரப் பாடம் நடத்தச் சொன்னது தப்பாப் போச்சு."

"ஏன்?"

"அக்பரிடம் இருவகைப் படைகள் இருந்தன. அவை ஒற்றைப் படை, இரட்டைப் படைன்னு பாடம் நடத்திட்டார்!"

- அதிராம்பட்டினம் யூசுப்

"இல்ல மிஸ்.. இவ பொய் சொல்றா..." என்றபடி அவன் சத்தமாய் அழுதான்.

ஹெட் மிஸ் அறை. நான், பரத், கவிதா மிஸ். ஜான்வி மிஸ்ஸும் சாட்சிக்கு வந்திருந்தார்கள். டேபிளில் கத்தி மின்னியது. ஹெட் மிஸ் விசாரித்தார்கள். பரத் இன்னும் அழுது கொண்டிருந்தான். எனக்கு அழுகை வரவில்லை. நான் இன்னும் அப்படியே நின்றிருந்தேன். நான் நடந்ததைச் சொன் னேன். பரத்தின் பேக் வந்தது. முழுவதும் உதறித் தேடினார்கள். துப்பாக்கி எதுவும் கிடைக்கவில்லை. என்ன செய்தான்? தந்திரக்கார நரி. ஏதாவது செய்திருப்பான்.

அம்மாவின் ஆபீஸுக்குப் போன் செய்தார்கள். அம்மா அப்பாவுடன் பதற்ற மாய் வந்தாள். கவிதா மிஸ் விளக்கமாய் நடந்ததைச் சொன்னார்கள். அப்பா அதிர்ச்சியோடு கேட்டார். அம்மா என்னை ஆத்திரத்தில் அடிக்க வந்தாள். ஹெட் மிஸ் தடுத்தார்கள்.

"இதைப்பத்தி வீட்ல அவ எதுவும் பேசவே யில்லையா?" என்றார் ஹெட் மிஸ்.

"எதுவுமே பேசல மிஸ்..." என்றாள் அம்மா.

நான் அம்மாவை நிமிர்ந்துப் பார்த்தேன்.

'அம்மா பொய் சொல்லாதே, எங்கே பேச விட்டாய்? எப்போது பேசியிருக்கிறோம்?' எனக்கு நேராக இதை அம்மாவிடம் கேட்கத் தோன்றியது.

"இந்த வயசில எவ்வளவு அழுத்தம்? ஒரு சொட்டுக் கண்ணீர் வருதா பாருங்க.." என்றார் ஹெட் மிஸ்.

நான் அப்படியே பார்த்தேன். எதுக்கு அழணும்? நான் என்ன தப்பு செஞ்சேன்?

பிறகு அம்மா, அப்பாவிடம் ஹெட் மிஸ் ரொம்ப நேரம் பேசினார்கள்.

வகுப்பறைக்கு வந்தேன். பரத்தும் வந் தான். அவன் பேக்கை எடுத்துக் கொண் டான். வேறு இடம் தேடி அமர்ந்து கொண் டான். என் பக்கம் திரும்பக் கூட இல்லை. எனக்கு சந்தோஷமாய் இருந்தது. ஆனால் வீட்டிற்குப் போனால் என்ன நடக்குமோ என்கிற பயம் வந்தது.

ஆட்டோவில் போய் வீட்டில் இறங்க, அம்மா வாசலிலேயே நின்றிருந்தாள். நான் பயத்தோடு அம்மாவைப் பார்த்தேன். நான் ஆட்டோவிலிருந்து இறங்கியதும் அம்மா வந்து பேக்கை வாங்கிக் கொண்டாள். அப்பாவும் வாசலுக்கு வந்தார். பிறகு அம்மா ஆட்டோ அண்ணாவிடம் பேசினாள்.

"இனிமேல் ஆட்டோ வேண்டாம் துரை." என்றாள்.

"ஏம்மா... என்னாச்சு!" என்றார் டிரைவர் அண்ணா.

எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது. அம்மா தொடர்ந்தாள்.

"செலவுக்காகச் சொல்லல துரை. சுஜாவை இனிமேல் ஸ்கூலுக்கு நான் கொண்டு போய் விட்டுடுவேன். வரும் போது அவங்கப்பா கூட்டிட்டு வந்துருவார். பாப்பாவுக்கு அதுதான் பிடிக்குது" என்றார்.

டிரைவர் அண்ணா புரியாமல் தலை யாட்டி விட்டு நகர்ந்தார். நான் அம்மாவைக் கட்டிக் கொண்டேன். அப்பா என்னைத் தூக்கிக் கொள்ள, எனக்குள் இருந்த பய உணர்வு காணாமல் போயிருந்தது. ●

திட்டப்படாமலே போன கொட்டாங்குச்சி!

● 'சஹானா' டீவி தொடரில், சிந்து பைரவியின் மகள் 'சஹானா'வாக நடிக்க ஒப்பந்தமாகியிருந்தவர் ஸ்ரீரஞ்சனி. இப்போது அவருக்குப் பதிலாக நடிப்பவர் காவ்யா சேகர். ஸ்ரீரஞ்சனி நீக்கப்பட்ட கசமுசா விவரம் என்ன என்று காவ்யாவையே துப்பறியச் சொல்லலாம்! கிரிமினாலஜி படிச்சவராச்சே!

● ராஜ் டீவியில் ஒளிபரப்பாகிறது. 'ரெக்கை கட்டிய மனசு'. "டைட்டிலே தப்பா இருக்கே. 'இறக்கை'ன்னுதானே வரணும்?" என்று கேட்டால், "கதையின் டைட்டிலே 'இலக்கணம் மீறிய சுவாரஸ்யம்'ங்கிறதுதானே...! அதான் தலைப்புலேகூட இலக்கணத்தை மீறிட்டோம்" என்று பதில் வருகிறது.



• 'ரெக்கை கட்டிய மனசு'

● 'சலனம்' தொடரின் கதாநாயகி ஷாலினியைப் பார்த்தால் "ஹாய் மயூரி" என்று கூப்பிடுங்கள். சட்டென்று திரும்பிப் பார்ப்பார். ஷாலினியின் கேரளப் பெயர் அதல்லே?



• காவ்யா

● வண்ணக் கோலங்கள் படைத்துக் கொண்டிருந்த ராஜ் டீவி, அடுத்த வாரம் முதல் சுந்தரத் தெலுங்கிலும் மாட்லாடப் போகிறது. 'விஸ்ஸா' என்ற பெயரில் தெலுங்குச் சானல் ஆரம்பித்திருக்கிறார்கள். ராஜ் டீவி உரிமையாளரின் அம்மா பெயர் விசாலாட்சி... சேனலின் பெயர்க் காரணம் தெரியுதா?

● "ஹாய்... நீ எப்போடி இந்தப் புடைவை எடுத்தே...? தீபாவளி போதா? பொங்கல் போதா?"

"கடைக்காரர் பில் போட குனிஞ்சபோது."

ஜெயா டீவி காம்பேர் உஷா ரசித்த ஜோக் இது!

● விஜய் டீவிக்கு போன் செய்தால், "மலரே... உன் கண்ணில் என்ன நீரோட்டமா? ('நீ, நான், அவன்' மெகா தொடரின் டைட்டில் பாட்டு) என்று ஆதங்கத்தோடு விசாரிக்கிறார்கள். 'ஆம்' என்று சொல்பவர்களுக்கு ஆறுதல் பரிசாகக் கைக்குட்டை தபாலில் வருமா? தெரியவில்லை.

● சென்னை பெருநகரில் உள்ள



சில முக்கியமான ஸ்பாட்களை, 'க்ளூ' மூலம் கண்டறிந்து கார் மூலம் அந்தந்த இடங்களுக்கு விரைய

• ஜாக்கிசான்



• ஷாலினி

வேண்டும். ஏகப்பட்ட விதிமுறை, ஸ்பாட்டுக்கு ஒரு பரிசு என, ஜாலியாகச் செல்கிறது இந்தப் பயண விளையாட்டு! போட்டியின் பெயர் 'ஜெய்..' டீவி? ஈஸியா கண்டுபிடிச்சுடுவீங்களே!

• ஆக்ஷன் அண்ணாச்சி ஜாக்கிசான் படங்களை (விஜய் டீவி) தமிழ் வசனத்தில் பார்க்க தனி குஷியாக இருக்கிறது. "இன்னா மாமு... நம்ம ஃபிகராண்டியே ராங் வைச்சுகினியே..!" போன்ற வசனங்கள் காமெடி என்றால், 'எங்கிட்டே மோதாதே!... 'அன்பே... அன்பே... கொல்லாதே!' போன்ற பாடல்கள் பின்னணியில் ஒலிப்பது மசாலா மிக்ஸ்!

• "கைவசம் இரண்டே இரண்டு படம்தானே இருக்கு?"

"ஆமா... அதுக்கென்ன?"

"அதை முடிச்சுட்டா ஃப்ரீதானே?"

"ஏன் கேக்கறீங்க?"

"இல்ல... நாங்க தயாரிக்கிற டீவி சீரியல்ல உங்களை புக் பண்ணலாம்னு..."

"வாட்...? இன்னும் மீனா, தேவயானியே டீவி சீரியலுக்கு வரலை... என்ன தைரியமிருந்தா என்னைக் கூப்பிடுவீங்க?"

- பிரபல நடிகையின் டீவி நிறுவனத்துக்கும், 'ஜோ'வுக்கும் நடந்த உரையாடல்!

• மண்வாசனை இயக்குநரை ஓரங்கட்டி வைத்திருந்த சூரிய டீவி சற்றே இளகி இறங்கி வந்திருக்கிறதாம். ஆனால் கிராமத்து இமயத்தின் கோபக்கனல் மீது, ஈர நிலா காய வாய்ப்பே இல்லை என்கிறார்கள். (கிசுகிசு 1)



• ஜோதிகா



• ஸ்ரீரஞ்சனி

• சப்தஸ்வர நிகழ்ச்சி போலவே அந்த ஒற்றை எழுத்துச் சானலில் இன்னொரு திரை இசை நிகழ்ச்சி தரத் தயாராக இருந்தார், அந்த எதுகை மோனை இயக்குநர். ஆனால் வீசிய அரசியல் சூறாவளியில் கொட்டாங்குச்சி தட்டப்படாமலே போய்விட்டதாம்! (கிசுகிசு 2)

மறுப்புகள் வரவேற்கப்படுகின்றன.

— அனு

அந்த அறைக்குள் வெளிச்சம் பரவிக் கிடக்கின்றது. அங்கே வேலை பார்த்துக் கொண்டிருக்கும் அவர்களுக்கு வெளிச்சம், இருட்டு எல்லாமே ஒன்றுதான். அவர்கள் அனைவரும் கண் பார்வையற்ற பெண் தையல் தொழிலாளிகள்.


''லாட்டரிச் சீட்டு விக்கிறதை தடை செஞ் சதுலேருந்து எங்களுக்கு வருமானம் குறைஞ்சு போச்சு. என்னோட வீட்டுக்காரரும் கண் பார்வை இல்லாத வர்தான். லாட்டரிச் சீட்டு விற்று வந்தபோது எப்படி யும் ஒரு நாளைக்கு ஐம்பது - அறுபது ரூபா சம்பாதிப் பார். லாட்டரிச் சீட்டு இல்லேங்கவும், இப்போ ஊது பத்தி விக்கப் போறார். ஒரு நாளைக்கு பத்து - இருபது கிடைக்கிறதே பெரும்பாடா இருக்குது. நாலைஞ்சு மாசமாவே ரொம்பவும் கஷ்டம்தான். இப்ப இரண்டு மாசமா துணி தைச்சுத் தர்ற வேலையில நான் ஈடு பட்டதால, சொற்ப வருமானம் கிடைக்குது. ஏதோ அரை வயித்துக் கஞ்சியாவது குடிக்க முடியுது.'' என்கிறார் பாப்பாத்தி.



• உஷா

அரசு கட்டித் தந்திருக்கும் கண் பார்வையற்றோ ருக்கான குடியிருப்பு ஒன்று திருச்சி, நாகமங்கலம். காந்தி நகரில் உள்ளது. அங்கு பார்வையற்ற தம்பதிகளடங்கிய நூறு குடும்பங்கள் வசித்து வருகின்றன. முன்னர் அவர்களில் பெரும்பா லோருக்கு லாட்டரிச் சீட்டு விற்பதே தொழி லாக இருந்து வந்தது. எஞ்சிய சிலருக்கு ஒயர் சேர் பின்னுதல், ஊதுபத்தி விற்பனை மற்றும் எடை மிஷின் வைத்து சம் பாதித்தல் ஆகியன வரு வாய்க்கு கை கொடுத்து உதவி வருகின் றன. லாட்டரிச் சீட்டு தடை என்றான பிறகு, அந்தப் பெரும்பாலோரும் தங் களால் இயன்ற வெவ்வேறு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஊசிமுனை உலகம்!






கண் பார்வையற்ற பெண்களில் பலரும், பார்வையற்றோர் மறு வாழ்வு மையங்களில் கடந்த காலங்களில் தங்கியிருந்தபோது,

தையல் பயிற்சி பெற்றவர்களாய் இருந்தார்கள். தாங்களே ஒரு தையல் நிலையம் அமைத்து நடத்தி, வருவாய் ஈட்டலாம் என்கிற எண்ணம் உருவானது அவர்களுக்கு. பொதுவாக மையங்களில் பயிற்சிக் காலங்களில் தையல் பயிற்சி பெற்ற பெண் பார்வையற்றோர்கள் எவரும் பின்நாளில், அதைத் தொழிலாகச் செய்ய ஏனோ முன் வருவதில்லை. ஆனால், நாமும் அவ்விதம் இருந்து விடலாகாது என நினைத்த நாக மங்கலம் குடியிருப் புப் பெண்கள் சில



• பரிதா



• ஊசியில் நூலை நுழைக்கிறார் கலா

ருக்கு, உதவி செய்ய முன் வந்தது மாவட்ட நிர்வாகம்.

தமிழக முதல்வர் அனுமதி அளித்திருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை மான்ய திட்டத்தின் வாயிலாக, பதினோரு நபர்களுக்குத் தையல் மிஷினும் - அதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அளவு ஜாக்கெட் ஒன்றை இரண்டாக மடித்து வைத்து, புதுத்துணியை வெட்டிக் காட்டுகிறார் பார்வையிழந்த பரிதா. இந்தக் குழுவில் இருக்கும் பெண்களில் பரிதாவின் கணவர் மட்டுமே பார்வை தெரிந்தவர். லேப் டெக்னீஷியனாக வேலை பார்க்கும் அவர், ஓய்வு நேரங்களில் இங்கு வந்து அவர்களுக்கான சின்னச் சின்ன உதவிகளைச் செய்து வருகிறார்.

"இது சுழலும் கைச் சக்கரம். இது பாபின் வைண்டர். பாபின் கைடு. தையல் நூல் கண்டு செருகும் ஆணி. இது ஸ்டிச் ரெகுலேட்டர். தைக்க வேண்டியது மிகவும் கெட்டித் துணியா? பதினெட்டு அல்லது பதினாறாம் எண் தையல் ஊசியில் நூல் நுழைத்து, ஸ்டிச் ரெகுலேட்டர் பாயிண்ட் ஐந்தில் இறக்கி வைத்து தைக்க வேண்டும். இது எப்போதாவது தான் தேவைப்படும். மெலிதான துணி வகைகளா? பதினாலாம் எண் தையல் ஊசி. மூன்று அல்லது இரண்டரை பாயிண்ட்டில் ஸ்டிச் ரெகுலேட்டரை உயர்த்தி வைத்துத் தைக்க வேண்டும். இந்த பாயிண்ட் நார்மலானது. பெரும்பாலும் உபயோகத்தில் இருப்பது" என விவரமாகச் சொல்கிறார்கள். "என் பையனுக்கு ஸ்கூல் யூனிபார்ம் நானே வெட்டி, தைத்துத் தந்துள்ளேன். அந்த முழு அளவிலான உடை உருவான பிறகு அதை தடவிப் பார்த்தபோது நான் பூரித்துப் போனேன். அதையே அவன் உடுத்தி வந்து நின்று, அந்த உடையுடன் அவன் முழு உருவத்தையும் தடவிப் பார்த்து உணர்ந்தேன்." என்றார் உஷா, மகிழ்ச்சி பொங்க.

கட்டுரை, படங்கள் : ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

மெல்லினம் 3

அதிக நேரம் தூங்க வேண்டும் என்று ஆசைப்பட்டாலும் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் அதிகாலையே விழிப்பு வந்துவிடு கிறது. ஏராளமான பணிகளைச் செய்து முடித்தாக வேண்டும் என்பதாக ஓர் உத் வேகமும், எதுவுமே செய்யக் கூடாதென் னும் செல்லப் பிடிவாதமுமாக மனம் இரண்டு பட்டு ஊசலாடத் தொடங்கி விடுகிறது. ஞாயிறு குடும்பத்துக்கான தினம். அலுவலகம் என்னும் கடமை அன்று இல்லை. வீடும் கடமைதான். ஆனால் கண்ணுக்குப் புலப்படாத ஒரு நூலிழை வித்தியாசம் இருப்பதாகக் குமார் நினைத்தான். லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டு செய்கிற வேலை களின் நடுவே வழங்கப்படும் உறவின் பரிகத்தமான புன்னகை, கடமைகளைக் கவிதையாக்கி விடுகிறது.

"இன்னிக்கு என்ன ப்ளான்?" என்று மாலு கேட்டாள். ஜக்கு இன்னும் விழிக்கவில்லை. இருள் பிரியத் தொடங்கியிருந்த புலர் காலையில் போர்வை சுகத்தில் இருவரும் கண் மூடியபடியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே சமையலறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வயதான குமாரின் பெற்றோருக்கு வாரம் முழுவதுமே ஞாயிறுதான் என்ப தால் பிரத்தியேகத் திட்டங்கள் எதுவும் அவர்களுக்கு இல்லை. காலைக் காப்பி, குமாரின் அம்மா பொறுப்பு, சமையலுக்குள் மாலு தயாராகி விடுவாள். மாமியாரும் மருமகளும் பேசிக் கொள்ள மேலதிக விஷயங்கள் இல்லாத தருணங்களில் ஸ்லோகங்கள் கை கொடுக்கும். இரட்டைக் குரலில் கடவுள்களுக்கான பக்தி கலந்த அழைப்புகள்.

தாத்தா வாசலில் இருப்பார். ஞாயிறுகளில் மட்டும் மனிதர் கள் ஏன் இப்படி சோம்பித் திரிகிறார்கள்? பொதுவில் சிரழியும் விதி. இளைஞர்கள்



குறித்த அவரது கவலையைக் குமாருடன் பகிர்ந்து கொள்வார். குமார் அன்றைய செய்திகளைப் படித்துவிட்டுக் காய்கறி வாங்கக் கிளம்புவான்.

ஜக்குவின் ஞாயிறுகள் செடிகளுடன் கழியும். கீரைப் பாத்தி கட்டுவது, கத்திரிக் காய் பிஞ்சு விட்டிருக்கிறதா என்று பார்ப்பது, நட்டு வைத்த பாரிஜாதத்துக்கு பைப்பில் நீர் ஊற்றுவது. ஆ! இந்தத் தண்ணீர் ஊற்றும் காரியம்தான் எத்தனை இனிமையானது! வேக வேகமாக உறிஞ்சிக் குடிக்கும் மண்ணின் தாகத்தை அவன் ரசித்து அனுபவிப்பான். மேலும் நீரூற்றியபின் தோட்டத்துக்கு ஒரு பிரத்தியேக வாசனையும் நிறமும் வந்துவிடுகிறது. ஒரு சோலை போல, பிருந்தாவனம் போல, பிரதேசமே குளிர்ந்துவிட்ட மாதிரி.

ஜக்கு ஒரு நாய்க்குட்டி வளர்த்துக் கொண்டிருந்தான். ஆசையாசையாய் அதற்கு வெங்கடாஜலபதி என்று பெயரிட்டு, வெங்கட் என்று அழைத்தான்.



"தப்புடா செல்லம், நாய்க்கெல்லாம் பெருமாள் பெயர் வைக்கலாமா?"

தாத்தா கேட்டபோது, "ஏன் பெருமாளுக்கு நாய்ன்னா பிடிக்காதா?" என்று பதிலுக்குக் கேட்டான்.

இல்லை. கடவுளுக்கு நாய் என்கிற பேதமில்லை. ஒரு நாய்க்குத் தன் பெயர் இடுவதில் அவருக்கு எவ்வித மனச்சிக்கலும்

▪ பா. ராகவன் ▪

உண்டாகப் போவதுமில்லை. ஆனாலும் இந்தக் குழந்தைக்கு மட்டும் ஏன இப்படி எல்லாமே வித்தியாசமாகவே தோன்றுகிறது? ஒரு சராசரியாக அவன் வர மாட்டான் என்று அவருக்குப்பட்டது. சராசரிகளால் நிறைந்த உலகில் வித்தியாசமான ஜீவராசிகள் படும் அவஸ்தைகள் கொஞ்சநஞ்சமல்ல, காலம் காலமாக, யுகம் யுகமாக. ஆனால் வித்தியாசமாக இருக்கப் பணிக்கப்பட்டவர்களால் ஒருபோதும் சராசரியாக சிந்திக்க முடிந்ததே இல்லை.

"சரி, உன்னிஷ்டம்" என்று தாத்தா சொன்னார். வெங்கட், ஜக்குவின் ஞாயிறுகளுக்கு ஒரு வண்ணம் சேர்க்கத் தொடங்கியது.

அதற்குக் காலை டிபனாக இரண்டு இட்லி வைப்பது, மத்தியானம் குழம்பு சாதமும் தயிர் சாதமும், மூன்று மணியானால் குளிப்பாட்டுவது, நாலு மணிக்கு அதனுடன் வாக்கிங் என்று அவனும் ஒரு திட்டம் உருவாக்கி வைத்திருந்தான்.

இன்று ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை வேறு வண்ணம் பூசிப்பார்க்கலாமா, என்று குமார் நினைத்தான்.

"என்ன பண்ணப் போறீங்க?" என்றாள் மாலு.

'வீடு க்ளீன் பண்ணப் போறேன்."

"உருப்படியான காரியம். ஜக்குவும் ஹெல்ப் பண்ணுவான்."

உற்சாகமாகப் படுக்கையை விட்டு எழுந்தான் குமார். காப்பிக்குப் பிறகு ஜக்குவை அழைத்து விஷயத்தைச் சொன்னான்.

"ஹை, பண்லாமே!" என்றான் அவன்.

"அப்ப ஒண்ணு பண்ணலாம். இன்னிக்கு கார்த்தால வீட்டுல சமையல் வேண்டாம். ஓட்டல்லேருந்து மசால் தோசை வாங்கிண்டு வந்துடறேன். வேலை முடிச்சிட்டு, நிதானமா மத்தியானம் சமையல்

வெச்சிக்கலாம்."

'ஓ' என்று குதித்தான் ஜக்கு. சின்னச் சின்ன திட்ட மாறுதல்கள் கூட அழகு தான். சந்தோஷம்தான். உள்ளம் எப்போதும் மாற்றங்களையும் வளர்ச்சிகளையுமே எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறது. மாற்றம் நிகழ்கிற ஒவ்வொரு கணமும் வாழ்வின் மறக்க முடியாத கணங்களுக்குள் சேர்கின்றன. மிகப் பெரிய விஷயமாக இருக்க வேண்டுமென்பதே இல்லை.

அற்ப விஷயங்கள். 'ப்பூ' என்று ஊதினால் உதிர்ந்துவிடுகிற விஷயங்கள்கூட...

குமார் ஓட்டலுக்குப் போய் டிபன் வாங்கி வந்து வீட்டுக் கூடத்தில் பொட்டலங்களைப் பிரித்ததும், குப்பென்று வீசிய மசாலா நெடிக்கு பாட்டி சற்று முகம் சுளித்தாள். பிறகு சமாளித்துக் கொண்டு, "வெங்காயம் இல்லாமே உருளைக்கிழங்கா போடு" என்று கேட்டு வாங்கிச் சாப்பிட்டாள்.

ஒன்பது மணிக்கு குமார் லுங்கியை மடித்துக்கட்டி, தலைக்கு ஒரு முண்டாசும் அணிந்து "பாரதியார் மாதிரி இருக்கேனா?" என்று மாலுவைப் பார்த்துக் கண்ணடித்தான்.

"போறுமே? எங்கேருந்து ஆரம்பிக்கப் போறீங்க?"

ஜக்கு புத்தக அலமாரியிடம் போய் நின்று கொண்டான். "இங்கதாம்பா ரொம்ப தூசி."

புத்தகங்கள் கீழே இறக்கப்பட்டன. செல்லரித்த புத்தகங்கள். அட்டை கிழிந்த புத்தகங்கள். புதிய புத்தகங்கள். அளவில் பெரிதும் சிறிதுமான ஆங்கிலப் புத்தகங்கள். குமாரின் அப்பா சேகரித்த பழைய நிகண்டுகள் மற்றும் சுதேசமித்திரன் மலர்கள், நாவல்கள், வாழ்க்கையில் வெற்றி பெறுவது தொடர்பான ஆலோசனை நூல்கள், சுலோகப் புத்தகங்கள். குமாருக்கும் அவனது தந்தைக்கும் படிப்பில் ஆர்வம் இருந்தது. தேடிப் படிப்பதில்லை என்றாலும், கிடைப்பதைப் படிக்காமல் விடுவது கிடையாது. படிப்பதை விமர்சனம் செய்யாத குடும்பம் அமைவது ஒரு குடுப்பினை. பொருட்படுத்தாது போனால்கூடப் பொருட்டில்லை. அவமதிக்காதிருப்பதே நூல்களுக்கும் வாசிக்கிறவர்களுக்கும் செய்கிற மரியாதை. என்பதை அந்தக் குடும்பம் அறிந்திருந்தது.

ஓ. இவற்றை எப்படி இன்னும் வாழ்நாள் முழுவதும் பராமரிக்கப் போகிறேன்?

அவன் அப்பாவுக்கு வந்த ரிடையர்

அடுத்த இதழில்...

அழகிய பெரியவன்

எழுதும்

நாணல் மனம்

காதல் கசியும்

மினி தொடர் ஆரம்பம்

மெண்ட் பணத்தில் கட்டிய சொந்த வீடு தான் அது. அரை கிரவுண்டு நிலத்தில் அமைந்த அந்தப்புரம். வத்திப்பெட்டி அளவிலொரு வசிப்பிடமும் தீக்குச்சி சொருகுகிற இடத்திலான சிறு தோட்டமும். விசாலம் என்பது பார்க்கிற கண்ணோட்டத்தில் இருக்கிறது!

"மெட்ராசுல இருக்க சொந்தமா ஒரு பொந்து. அதுவே பெரிய விஷயமில்லையா?" என்பார் குமாரின் தந்தை.

ரொம்பச் சரி. ஒரு பத்திரிகையாளனாக வாழ்ந்து முடித்த பிறகும் தன்னால் ஒரு சொந்த வீடு கட்ட முடியும் என்கிற நம்பிக்கை அவனுக்கு இருந்ததேயில்லை. கைக்கும் வாய்க்குமான வருமானம். வலிந்து உற்பத்தி செய்து கொள்கிற திருப்தியில் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது. புரிந்து கொள்ளும் மனைவியும் உணர்ந்து வாழும் பெற்றோரும். போதும். வாழ்க்கையின் இனிமை என்பது வசதிகளில் மட்டும் இல்லை.

"அது என்னப்பா, தனியா ஒரு பண்டில் வெச்சிருக்கே?" ஜக்கு கேட்டான்.

"எங்கடா?"

"அதோ மேல் ஷெல்ஃப்ல, ரைட் ஹாண்ட் சைட் எண்டுல?"

"எடு, பாக்கலாம்!"

குமார், ஜக்குவைத் தன் தோளில் தூக்கிக்கொண்டு எழுந்து நின்றான்.

"ஜாக்கிரதை! பிடிச்சிக்கோ. அம்மாவை வேணா கூப்பிடலாமா?"

"இரு. நானே எடுப்பேன்!"


குழந்தையின் ஆர்வம் அவனுக்கு சந்தோஷமளித்தது.

"தூசு மூக்குல போகாம பொத்திக்கோ ஜக்கு. இல்லாட்டி தும்முவே."

"மூச்சைப் பிடிச்சிண்டுதான் இருக்கேன்."

"பைத்தியம். அப்படியெல்லாம் பண்ணக்கூடாது. இரு. துண்டு சுத்தி விடறேன்."

அந்தச் சிறு அட்டைப்பெட்டியைக் கீழே இறக்கி, தூசைத் தட்டினார்கள்.



"இதுல என்ன வெச்சிருக்கே?"

"இருடா. எனக்கே மறந்து போச்சு."

அவன் அதன் கயிற்றுச் சுற்றை அவிழ்த்து, பெட்டியைத் திறந்தான். நிறைய தூசியின் கீழே கத்தைக் கத்தையாகக் காகிதங்கள். எல்லாம் அவன் எழுதிய ரிப்போர்ட்டுகள்.

"எல்லாம் வேஸ்ட். தூக்கிப் போடணும். அந்த மோறத்தை எடு."

ஜக்கு நகர்ந்து போனான். குமார், தாள்களை எடுத்துத் தனியே வைக்கத் தொடங்கினான்.

"என்ன ஆயிண்டிருக்கு. கடை பரப்பியாச்சா?" இரண்டாம் டோஸ் காப்பியுடன் மாலு வந்தாள்.

"உம் பிள்ளைதான் முதல்ல இதை க்ளீன் பண்ணலாம்னான்."

"அப்பாவுக்கேத்த பிள்ளை."

அந்தப் பெட்டி அநேகமாகக் காலியாகிவிட்டிருந்தது. அடியில் ஓரிரு பழைய டைரிகள் மட்டுமே இருந்தன.

"இந்த பேப்பர் குப்பையையெல்லாம் பேப்பர்காரனுக்குப் போட்டுடலாம் மாலு. அநாவசியமா இடத்தை அடைச்சிண்டு இருக்கு."

"தனியா எடுத்து வைங்க" என்று மாலு சொன்னாள்.

அவன் அந்த டைரிகளை எடுத்து தூசு தட்டி விட்டு வருஷம் பார்த்தான்.

எல்லாம் ஜக்கு பிறப்பதற்கு முன் எழுதிய டைரிகள். குழந்தை பிறந்த பின் ஏனோ அந்தப் பழக்கம் விட்டுப் போயிற்று. எழுத விஷயமில்லாமல் வேலை. சொல்ல முடியாத சோம்பேறித்தனம். அல்லது, இனி பிரத்தியேகம் என்று எதுவுமில்லை என்பதான மனத்தின் முடிச்சு.

"இப்பல்லாம் நீங்க டைரி எழுதறதே இல்லை" என்றாள் மாலு.

"ஆமா. தோணலை."

"திரும்பத் திரும்ப அந்த போலீஸ் ஸ்டேஷன் போனேன். இவன் கொலை பண்ணான்னு எழுதறது போராடிச்சிருக்கும். இல்லாட்டி, எடிட்டர் எரிஞ்சி விழுந்தார். எழுதின மேட்டர் சரியா வரலை. மத்தியானம் மோர் சாதம் புளிச்சுப் போச்சு. பூ வாங்கிண்டு வர மறந்துட்டேன்..."

அவன் சிரித்தான்.

சராசரிகளின் அந்தரங்கம் அநேகமாக ஒரே மாதிரி தான் இருக்கின்றன. இடங்களும் பெயர்களும் சம்பவங்களும் மாறினாலும் உணர்ச்சிகள் ஒரேதரம்தான்.

அவன் ஒரு பெருமூச்சுடன் அந்த டைரிகளை எடுத்து தூசு தட்டி, தனியே வைத்தான். ரொம்ப நாளாயிற்று. முடிந்தால் ஒரு தரம் முழுக்கப் படித்துப் பார்க்கலாம்.

தன்னைத் தனக்கு மறு அறிமுகம் செய்து கொள்வது மாதிரி.

மேலும் இரண்டு மணி நேரமாயிற்று. ஒரு வழியாக ஹால், படுக்கையறை, பூஜையறை, அப்பாவின் அறை எல்லாம் சுத்தமாகி வீடு பளிச்சென்றானது. ஜக்குவுக்குப் பசித்தது.

ஒன்றரைக்குச் சாப்பிட்டார்கள். கண்ணைச் சுற்றிக் கொண்டு வந்தது.

"சாயங்காலம் பீச்சுக்குப் போகலாமா?" என்று ஜக்கு கேட்டான்.

"போலாமே!" என்று மனைவியைப் பார்த் தான் குமார்.

"போலாம், ராத்திரிக்கு ஏதாவது பண்ணி வெச்சிட்டு வந்துடறேன்" என்று மாலு சொன்னாள்.

பிற்பகல் உறக்கத்தில் வீடு ஆழ்ந்தது.

ஜக்குதான் முதலில் எழுந்தான். தாத்தா பாட்டி, அப்பா, அம்மா என அத்தனை பேரும் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தது அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. சரி, இன்னும் கொஞ்ச நேரம் தூங்கட்டும் என்று நினைத்தான்.

எழுந்து வெளியே வந்து வெங்கட்டுடன் சில நிமிடங்கள் கொஞ்சிவிட்டு செடிகளையும் ஒரு சுற்று பார்வையிட்டான். மீண்டும் உள்ளே வந்தவனுக்கு, அப்பா தனியே அலமாரியில் எடுத்து வைத்திருந்த அந்த டைரிகள் கண்ணில் பட்டன.

எழுதக் கொஞ்சம் தாள்கள் இருக்குமா என்று பார்க்க அவற்றை எடுத்தான். புரட்டத் தொடங்கினான்.

(தொடரும்)

கண்டுபிடிச்சேன், கண்டுபிடிச்சேன்!



உலகளாவிய விருது ஒன்றை, பெங்களூர் பெண்மணியான டாக்டர் சீமா பிரகாஷ் தட்டிக் கொண்டு வந்திருக்கிறார் என்பது தான் லேட்டஸ்ட் வேளாண் செய்தி!

'குளோபல் இன்வென்டர்' விருது என்பது மிகவும் முக்கியமான விருது. உலகின் பல நாடுகளிலிருந்தும் விஞ்ஞானிகள் தத்தம் படைப்புகளை அனுப்பியிருந்தனர். கடைசிச் சுற்றுக்கு இருபத்தொன்பது பெயர்கள் வந்தன. எனக்கு ஒரே படபடப்பாக இருந்தது. 'எனக்கில்லை எனக்கில்லை' என்றே என் மனம் துடித்தது. என் பெயரை அவர்கள் அழைத்த போது, மேடைக்குப் போகக் கூடத் திராணியில்லை. GWIIN என்று சொல்லப்படும் உலகளாவிய பெண் கண்டுபிடிப்பாளர்கள் நெட்வொர்க்கின் இந்தச் சிறப்பு விழா, லண்டனின் கஃபே ராயலில் நடைபெற்றது. மற்றவர்கள் 'ஃபார்மல் டிரஸ்ஸில்' பந்தாவாக வந்திருக்க, நானோ சல்வார் கமீஸில்! பரிசு வாங்க புடவையில் போக வேண்டுமென்றிருந்தேன். ஆனால் அன்றே, அப்போதே, பரிசு கொடுப்பார்கள் என எதிர்பார்க்கவில்லை'' என்று சிரிக்கிறார் சீமா.



• விருது பெறுகிறார் சீமா பிரகாஷ்



• அயர்லாந்து பிரதம மந்திரி மேரி ஹார்னேவுடன் டாக்டர் தம்பதி

வேளாண்மைத் துறையில் சீமாவின்



கண்டுபிடிப்பான 'க்ளால் பீட் லிக்விட் கல்சர் டெக்னாலஜி' ஒரு மைல் கல்! பயிர்களைப் பாதுகாக்கவென்றே ஏழு வருடங்களுக்கு முன் பெங்களூரில் இன்விட்ரோ என்ற உலகத் தரம்வாய்ந்த தொழிற்சாலையைத் தொடங்கினார் சீமா. இன் விட்ரோ என்றால் லத்தீன் மொழியில் 'கண்ணாடிக்குள்' என்று பொருளாம். பெயருக்குத்தக்க 'கண்ணாடி மணி திரவ தொழில்நுட்பத்தைக்' கண்டுபிடித்து சீமா, விவசாயிகளின் நம்பிக்கைச் சீமாட்டியாகி விட்டார்.

க்ளோனிங் என்பது மிருகங்களுக்கு மட்டுமல்ல. பயிர்களுக்கும் பயன்படும் டெக்னிக்! அசலைப் போலவே நகல்கள்



"இருந்தாலும் அந்த ஸ்கூல்ல ஃபீஸ் ரொம்ப ஓவர்!"
"எப்படிச் சொல்றீங்க?"
"ஃபீஸ் கட்ட வரப் போறதா போன் பண்ணினா போதும். வீட்டுக்கே நாலைஞ்சு அடியாட்களை அனுப்பி பாதுகாப்பா கூட்டிட்டுப் போறாங்க!"
— கொங்கணாபுரம் வே. செந்தில்

தயாரிப்பதே க்ளோனிங். சீமாவின் க்ளாஸ்பீட் கண்டுபிடிப்பும் க்ளோனிங் வகைதானாம்!

"இம்முறையினால் விவசாயிகள் பயன் பெறுவார்கள். பொருளாதாரம் சிறக்கும். ஏனென்றால், இது 'காஸ்ட் எஃபெக்டிவ்'. கையைக் கடிக்காது. உதாரணமாக ஏலக்காய் பயிரிட்டால் அதன் விளைச்சல் 15-20 கிராம்கள் மட்டுமே இருக்கும். அதே நல்ல ஏலச் செடிகளை எடுத்து, அதை டிஷ்யூ கல்சர் டெக்னாலஜி முறைப்படி க்ளோன் செய்து பயிரிட்டோமானால், சுமார் இரண்டு கிலோ விளையும். வருடம் பூராவும் சீரான விளைச்சல். விவசாயிகளுக்குப் பெரும் நன்மை. நாட்டின் பொருளாதாரமும் மேன்மையடையும்" விவரிக்கிறார் சீமா!

இன்னும் நம் இந்திய விவசாயிகள் அனைவருக்கும் இந்தப் புது டெக்னிக் வெளிவந்திருப்பது தெரியவில்லை என வருத்தப்படுகிறார். "கிராமம் கிராமமாகப் பயணித்து ஏழை எளிய விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்பதே என் கணவரின் லட்சியம் கூட" என்கிறார் சீமா. யாரிவரது கணவர்?

டாக்டர் ஜிதேந்திர பிரகாஷ், நாடு போற்றும் விஞ்ஞானி. நம் நாட்டின் முன்னணி ஸெல்-பயாலஜிஸ்ட். வெளிநாட்டில் பல முக்கியப் பதவிகளை வகித்தவர். பற்பல அரிய கண்டுபிடிப்புகளின் மூலம் வேளாண்மைத் துறையில் கௌரவமான இடத்தைப் பிடித்திருப்பவர். உலகிலேயே சிறந்த பத்து பயோடெக்னாலஜி வல்லுநர்களில், டாக்டர் பிரகாஷும் ஒருவர்.

"என் கணவர் யு.கேயில் இருந்த போது ராஜீவ் காந்தி, நீங்கள் நாடு திரும்ப வேண்டும். உங்கள் உழைப்பு, திறமை நம் நாட்டுக்குப் பயன்பட வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார். என் கணவரும் அன்றிலிருந்து நம் நாட்டு மக்களுக்காக, அரசின் பொருளாதார மேம்பாட்டிற்கென இராப்பகலாக உழைக்கிறார். என்னுடைய ஆராய்ச்சியிலும் என் கணவரின் பங்கு மகத்தானது. எனக்குத் திருமணமான போது எம்.எஸ்ஸி., முடித்திருந்தேன். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், என் கணவர் தன் தாயிடம், 'எனக்கு எம்.எஸ்ஸி., பாட்டனி முடித்த பெண்தான் வேண்டும்' என கண்டிஷன் போட்டிருந்தாராம். ('மணல் கயிறு' பார்த்திருப்பாரோ!) எனக்குத் திருமணமான பின் 'படி படி' என்று சொல்லிக் கொண்டேயிருப்பார். 95-ல் பி.எச்டி., முடித்தேன். இந்தியப் பொருள்களைத்தான் உபயோகிக்க வேண்டுமென்பதை அவர் கொள்கையாகவே வைத்திருக்கிறார். எங்களுடையது முக்கியமாக ஏற்றுமதிதான். அரசுக்கு இதனால் அந்நியச் செலாவணி கிடைக்கிறதே" என்கிறார் சீமா.

சீமாவுக்குக் கிடைத்த விருதுகள் ஏராளம்! ராஜீவ் காந்தி ஷிரோமணி விருது, பெண் சாதனையாளர் விருது, 'பிரைட் ஆஃப் இந்தியா' விருது, எக்ஸலன்ஸ் இன் எக்ஸ்போர்ட்... என நிறைய.

— எல்.எஸ்.

1

வணக்கத்துக்குரிய வயிறே...

ஸர்ப்ரைஸ் மருத்துவத் தொடர்!

டாக்டர் எஸ். அஷோக்



முரளிக்கும் மோகனுக்கும் நல்ல பசி! அருகிலிருந்த ஹோட்டலுக்குப் போய் ஸ்பெஷல் மஷ்ரூம் பீஸா ஆர்டர் செய்தார்கள்.

ஹோட்டலின் உள்ளே சுழன்றடித்துக் கொண்டிருந்த குருமா, மசாலா, இத்யாதி வாசனையே பசியை இன்னும் கிளப்பிவிட, வயிற்றில் செல்லக் கிள்ளல்கள்.

முந்திரி, வெங்காயம், பாலாடை, தக்காளி எல்லாம் அலங்காரமாகத் தூவப்பட்டு, மிஸ் யூனிவர்ஸின் ஸ்டைலுடன் ஒயிலாக அமர்ந்தது பீஸா தட்டு!

அதைக் கண்ணால் பார்த்ததுமே வாயில் ஏற்பட்டது அடுத்த ரியாக்ஷன்! பைண்ட் கணக்கில் உமிழ்நீர் சுரந்து "நா ரெடி... நீங்க ரெடியா?" என்றது. உமிழ் நீரின் பங்காளிப் பசங்களான நாக்கின் சுவை மொட்டுகள் மட்டும் சும்மா இருந்து விடுமா? "துண்ணு மச்சி, துண்ணு" என்று எஃப்எம் ரேடியோ ஸ்டைலில் உசுப்பிவிடுகிறது.

சூடாக, பெரிய பெரிய விள்ளல்களாக, சாஸில் முக்கி எடுத்து விழுங்க ஆரம்பிக்கிறார்கள். முதல் இரண்டு துண்டுகள் உள்ளே போன அளவுக்கு, மற்றவை வேகம் பிடிக்கவில்லை. சொல்லப் போனால், கடைசித் துண்டின் மிச்சம் மீதி, தட்டிலேயே கிடந்தது.

"சே! இந்த பேரர் ஸ்பெஷல் பீஸாவை எட்டுத் துண்டா வெட்டிக்கிட்டு வந்துட்டான்... இதையே நாலு பெரிய துண்டா கட் பண்ணிக் கொண்டு வந்திருந்தான்னா, ஈஸியா சாப்பிட்டிருக்கலாம்" என்றான் முரளி.

மோகனும் தலையாட்டினான். 'பில்' தரப் போறது முரளி தானே?

பசி வந்தால் பத்தும் பறந்து போகுங்கிறாங்களே... அந்த பத்தில் லாஜிக்கும் ஒண்ணா?

சரி விஷயத்துக்கு வருவோம்!

காசா, பணமா? சும்மா ஒரு கற்பனை செய்து பாருங்களேன். ஒரு நாள் காலையில் எழுந்திருக்கும்போது, 'பசி' என்ற 'புருபுராவே' இல்லாமல் போய் விடுகிறது. அப்பொழுதுதான் தலைவாழை விரித்து, ஃபுல்

மீல்லை ஒரு கட்டுக் கட்டிய திருப்தி. வயிறும் மனசும் நிறைந்து கும்மென்று இருக்கிறது. உங்களுக்கு மட்டுமில்லை... இந்த உலகத்துப் பிரஜைகள் அனைவருக்கும்.

அவ்வளவுதான்! பிரபஞ்சமே ஸடன் பிரேக் போட்டது போல ஸ்தம்பித்துப் போய் விடாதா? 'முன்னை அன்னை இட்ட தீ அடி



வயிற்றிலே'னு பட்டினத்தார் பாடினாரே... அந்த 'கண கண அலாரம்' தான் உலக இயக்கத்தின் ஆதாரம். பசி இல்லை என்றால் 'புசி' இல்லை; 'புசி' இல்லை என்றால் ருசி இல்லை. அப்புறம் என்னத்துக்கு

* பரோடிட் ட்யூமர்




இப்படியொரு ஓட்டம்...?

எனவே... வயிற்றுக்கும் வாழ்வுக்கும் ஆதாரராகமாக இருப்பது பசி!

பசி எப்படி ஏற்படுகிறது?

மூளையில் 'ஹைபோதாலமஸ்' என்னும் மையத்தில் பசியைத் தூண்டும் விசைகள் இருக்கின்றன. நாலு இட்லியில் ஆரம்பித்து, மசால் தோசையில் இறங்கியதுமே, ''நாஷ்டாவை நிப்பாட்டு' என்று சிக்னல் தரவும், அருகிலேயே 'திருப்தி மண்டலம் (Satiety centre) இருக்கிறது. சாப்பிடும் உணவு வயிற்றுக்குள் போய் ஓரளவுக்கு செட்டிலாகி, திருப்திக் கொடியை அசைக்க, இருபது நிமிஷம் ஆகிறது. ஆனால் அந்த சிக்னல் கிடைக்கும்வரை, மெள்ளச் சாப்பிட நமக்கெல்லாம் ஏது அவகாசம்? வயிறு 'டொம்' என்று முட்டிக் கொள்ளும்வரை, அதுவும் வேக வேகமாக சாப்பிட்டே பழகி விட்டோமே!



* சப்மான்டிபுலர் ட்யூமர்

'நொறுங்கத் தின்றால் நூறு ஆயுசு!' என்று பெரியவங்க சொல்லி வைத்தது சும்மா இல்லீங்க. மேட்டர் இருக்கு!

வாயில் ஊறும் உமிழ் நீருடன், நாம் சாப்பிடும் உணவு சரிவரக் கலந்து, இரைப்பைக்குள் போனால், அஜீரண அவஸ்தைகள் ஏற்படுவதில்லை. அது மட்டுமில்லை; உமிழ் நீரில் உள்ள 'லைசோசைம்ஸ்' எனப்படும் நொதிப்பொருள் சண்டியர் குலத் திலகம் மாதிரி. வாயில் உள்ள தீய பாக்டீரியாக்களை இரைப்பைக்குள் கொண்டு சென்று சைலன்டாகத் தீர்த்துக் கட்டி விடுகின்றன.

உமிழ் நீரில் இரண்டு வகைகள் இருக்கின்றன. பிசின் போல கொழ கொழப்பாகவும், நீர் போல சொட்டக் கூடியதாகவும் இருவகை உமிழ்நீர் சுரக்கின்றன.

நொறுக்கப்பட்ட உணவை, வயிற்றுப் பகுதிக்கு, இதமாக, பதமாகக் குழைத்து எடுத்துச் செல்லும் வேலையைப் பிசின் உமிழ்நீர் செய்கிறது. செரிமானத்துக்கு உதவி செய்யும் எடுபிடி வேலையில் சொட்டு உமிழ் நீர் ஈடுபடும்.

உமிழ்நீர் குறைந்து சுரந்தாலும் பிரச்னைதான். வாய்ப்பகுதி உலர்ந்து, தாடைகளில் வீக்கம், வலி ஏற்படும். இதற்கு 'மிகுலிக்ஸ் சின்ட்ரோம்' (mikulicz) என்பார்கள்.

உமிழ்நீர் அதிகமாகச் சுரந்தாலும் சிரமம்தான். பருத்த தேகம் உடையவர்களுக்கும், நீரிழிவு நோயாளிகளுக்கும் இந்தப் பிரச்னை ஏற்படும். இந்த 'சையலோஸிஸ்' கோளாறும் சவாலானதுதான்!

உமிழ்நீர் என்றால் எச்சில் தானே என்று கேவலமாக நினைக்காதீர்கள். உமிழ்நீர் சுரப்பிகளில் கற்களும், கட்டிகளும்கூட ஏற்பட்டு, நோய்கள் ஏற்படுகின்றன.

பரோடிட் ட்யூமர் (parotid tumour) சப்மான்டிபுலர் ட்யூமர் (submandibular tumour)போன்றவை அதிகமாகக் காணப்படுகின்றன. இவற்றுக்கு மிக நுட்பமான அறுவைச் சிகிச்சை தேவைப்படும். கொஞ்சம் அசிரத்தையாக இருந்தாலும், கண், உதடு, நரம்புகள் பாதிக்கப்படும். கண்களை இமைக்க முடியாது. வாய் கோணிக் கொள்ளும். இத்தகைய அறுவை சிகிச்சைகளை, கன்னத்தில், காதுக்கு முன்புறம் செய்ய வேண்டியிருக்கும் என்பதால், தழும்பு தெரியாமல் நேர்த்தியாகச் செய்ய வேண்டும்.

இன்னும் சிலருக்கு, உமிழ்நீர் சுரப்பிகளில் சீழ்க் கட்டிகள் உருவாகும். இதற்கு வாய் சுத்தமில்லாமல் இருப்பது முக்கியக் காரணம். பாக்டீரியல் இன்ஃபெக்ஷன் ஆகி, அது 'பரோடிட் டக்ட்' வழியாக உமிழ்நீர் சுரப்பிக்குள் போய், சீழ் பிடித்து விடும்.

எனவே, பல் தேய்க்கும்போது, நாக்கு, ஈறு, என வாய் முழுவதுமே சுத்தப் படுத்துவது மிக அவசியம்.

அடுத்த வாரம், 'வயிறு' எனப்படும் வணக்கத்துக்குரிய பகுதிக்குள் நுழைகிறோம்... காத்திருங்கள்.

உங்கள் குழந்தையின்

NESTLÉ CERELAC 1 2 3

THE NESTLÉ DEVELOPMENTAL NUTRITION PLAN



“குமாருக்கு 6 மாதமாகிறது. துறுதுறுவென்று இருக்கிறான்! இப்போது எந்த மென்மையான திடமான உணவை நான் அவனுக்குக் கொடுக்கத் தொடங்கலாம்?”

STAGE 1

மென்மையான முதல் உணவு

6 மாதம் முதல்

மென்மையான, சுவையான மற்றும் செரிப்பதற்கு எளிதான உணவு.

வீட், ரைஸ், வீட் ஆப்பிள் மற்றும் வீட் வெஜிடபிளில் கிடைக்கிறது.



“வந்தனாவுக்கு கிட்டத்தட்ட
எப்படி மாறிவிட்டாள்
முடியவில்லை! அவளுக்கு
ஒரேமாதிரியான ருசியை

STAGE 2

குழந்தை ஸ்டேஜ் 1-லிருந்து ஸ்டேஜ் 2, ஸ்டேஜ் 3 என வளரும் போது, நெஸ்லே டெவலப்மெண்டல் நியூட்ரிஷன் பிளான் நல்ல உணவுமுறையை வளர்க்க உதவுவதுடன், பெரியவர்களின் உணவை உண்ண அக்குழந்தையை தயார் செய்கிறது. குழந்தையின் விருப்பம் மற்றும் மருத்துவரின் ஆலோசனையைப் பொறுத்து, குழந்தை விரும்பும் வரை உண்பதற்கு ஸ்டேஜ் 1, 2, 3 தயாரிப்புகளை தொடர்ந்து சாப்பிடக் கொடுக்கலாம்.

IMPORTANT NOTICE : MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY. INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE

Infant foods should be introduced only on the advice of a health worker as to the need for its use and proper method of use. Infant food is no
only clean utensils. Boil drinking water for 5 minutes. Leave it till lukewarm. Pour necessary quantity of lukewarm water into a bowl or plate. St
hour otherwise microbial deterioration may set in. Discard unused feed. **WARNING/CAUTION :** Careful and hygienic preparation of infant food
needed by your infant. Do not use more scoops than directed, since concentrated feed will not provide the water needed by your infan
Cerelac. Infant food should be stored in a cool and dry place in an air tight container. Cerelac has to be used within 12 months (15 months fo



சிவகாமியின் சபதம்

பதினைந்தாம் அத்தியாயம்

குலச்சிறையார்

சென்ற அத்தியாயத்தில் கூறியபடி மாமல்ல சக்கரவர்த்தி படையுடன் புறப்பட்டுச் சென்று மூன்று தினங்கள் ஆயின. காஞ்சி மாநகரத்தின் வீதிகள் வழக்கமான கலகலப்பு இல்லாமல் வெறிச் சென்று கிடந்தன. பட்டணமே தூங்கி வழிந்து கொண்டிருந்தது.

வழக்கத்துக்கு மாறான அந்தப் பகல் தூக்கத்தைக் கலைத்துக் கொண்டு காஞ்சி நகர் வீதிகளில் ஒரு ரதம் கடகடவென்ற சப்தத்துடன் அதிவேகமாகப் பிரயாணம் செய்து திருநாவுக்கரசர் மடத்தின் வாசலில் வந்து நின்றது. ரதத்தை ஓட்டி வந்தவன் வேறு யாருமில்லை, நம் பழைய நண்பன் கண்ணபிரான்தான்.

ரதத்திலிருந்து நாம் இதுவரையில் பார்த்திராத புது மனிதர் ஒருவர் - இளம் பிராயத்தினர் - இறங்கினார். சிறந்த பண்பாடு, முதிர்ந்த அறிவு, உயர் குடிப்பிறப்பு ஆகியவற்றினால் ஏற்பட்ட களை அவர் முகத்திலே ததும்பியது.

கீழே இறங்கியவரைப் பார்த்துக் கண்ணபிரான், "ஆம், ஐயா! இதுதான் திருநாவுக்கரசரின் திருமடம். அதோ இருக்கும் பல்லக்கு புவன மகாதேவிக்கு உரியது. சக்கரவர்த்தியின் அன்னையார் சுவாமிகளைத் தரிசிக்க வந்திருக்கிறார் போல் தோன்றுகிறது" என்றான்.

"யார் வந்திருந்தபோதிலும் சரி; தாமதிக்க நமக்கு நேரமில்லை" என்று சொல்லிக் கொண்டு அந்தப் புதுமனிதர் மடத்துக்குள்ளே நுழைந்தார்.

உள்ளே உண்மையாகவே புவன மகாதேவியார் தமது வளர்ப்புப் பெண்ணாக ஏற்றுக் கொண்ட மங்கையர்க்கரசியுடன்

வாகீசப் பெருந்தகையைத் தரிசிப்பதற்காக வந்திருந்தார். சுவாமிகள் வடநாட்டில் தாம் தரிசனம் செய்து வந்த ஸ்தலங்களின் விசேஷங்களைப் பற்றிப் புவன மகாதேவிக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். எல்லாம் சொல்லிவிட்டுக் கடைசியில் தாம் மீண்டும் தென்னாட்டு யாத்திரை கிளம்பப் போவது பற்றியும் நாவுக்கரசர் தெரிவித்தார்.

"ஆம், தாயே! வடநாட்டில் எத்தனையோ ஸ்தலங்களைத் தரிசனம் செய்தேன். கயிலையங்கிரி வரையில் சென்றிருந்தேன். எனினும், நமது தென்னாட்டிலேயுள்ள க்ஷேத்திரங்களின் மகிமை தனியானதுதான். நமது ஏகாம்பரநாதர் ஆலயத்துக்கு இணையான ஆலயம் வேறு எங்கும் இல்லை. நமது திருத்தில்லை, திருவையாறு, திருவானைக்கா முதலிய க்ஷேத்திரங்களுக்கு இணையான க்ஷேத்திரமும் வேறு எங்கும் கிடையாது. மறுபடியும் தென்னாடு சென்று அந்த ஸ்தலங்களையெல்லாம் மீண்டும் தரிசித்துவிட்டு வர எண்ணியிருக்கிறேன். நாளைக்குப் புறப்படப் போகிறேன்!"

இப்படி அவர் சொல்லிக் கொண்டிருந்தபோது, மடத்தின் வாசலில் ரதத்திலிருந்து இறங்கிய இளைஞர் உள்ளே வந்தார்.

பயபக்தியுடன் சுவாமிக்கும் புவனமகாதேவிக்கும் வணக்கம் செலுத்தினார்.

"நீ யார் அப்பனே? எங்கு வந்தாய்?" என்று நாவுக்கரசர் கேட்ட குரலில் சிறிது அதிருப்தி தொனித்தது.

அந்தக் குறிப்பைத் தெரிந்து கொண்ட இளைஞர் கைகூப்பி நின்ற வண்ணம், "சுவாமி! மன்னிக்க வேண்டும். சக்கரவர்த்தியின் அன்னையார் இவ்விடம் விஜயம் செய்திருப்பது தெரிந்தும் முக்கிய காரியத்தை முன்னிட்டுப் பிரவேசித்தேன். அடியேன் வராக நதிக்கரையிலிருந்து வருகிறேன். அங்கே நெடுமாற பாண்டியர் கடுமையான தாபஜ்வரத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறார். வைத்தியர்களின் ஔஷதங்களினால் மட்டும் அவரைக் குணப்படுத்த முடியாதென்று கருதித் தங்களிடமிருந்து திருநீறு வாங்கிக் கொண்டு போக வந்தேன்; மன்னிக்க வேண்டும்" என்று திருநாவுக்கரசரைப் பார்த்துக் கூறிவிட்டுப் புவனமகாதேவியின் பக்கம் திரும்பி, "தேவி! தாங்களும் க்ஷமிக்க வேண்டும்!" என்றார்.

அப்போது தேவி, "அப்பனே! நீ ரொம்ப விநயமுள்ளவனாயிருக்கிறாய். ஆனால், சுவாமிகள் முதலில் கேட்ட கேள்விக்கு நீ மறுமொழி சொல்லவில்லையே? நீ யார்?" என்று கேட்க, "பதற்றத்தினால் மறந்துவிட்டேன், தேவி! பாண்டிய நாட்டில் மணமேற்குடி என்னும் கிராமத்தில் பிறந்தவன். என் பெயர் குலச்சிறை; படையுடன் கிளம்பிய பாண்டிய குமாரருக்கு ஓலை எழுதவும், படிக்கவும் உதவியாயிருக்குமாறு என்னை நியமித்து மதுரை மன்னர் அனுப்பி வைத்தார்!" என்றான் அந்த இளைஞன்.

"நோய்ப்பட்ட பாண்டிய குமாரரை வராக நதிக்கரையில் ஏன் வைத்திருக்க வேண்டும்?" என்று தேவி மீண்டும் கேட்டார்.


"ரொம்பக் கடுமையான ஜுரம், தேவி! இந்த நிலையில் அவர் பிரயாணம் செய்யக் கூடாது என்பது வைத்தியரின் அபிப்பிராயம். கொஞ்சம் குணப்பட்டதும் இவ்விடத்துக்கு அழைத்து வந்துவிடுகிறோம். அரண்மனைக்கு வந்து செய்தி சொல்லி விட்டுப் போக எண்ணினேன். நல்ல வேளையாக இங்கேயே தங்களைச் சந்தித்தேன்."


"அப்படியில்லை, அப்பா! என்னிடம் சொன்னால் மட்டும் போதாது! அரண்மனைக்கு வந்து வானமாதேவியிடமும் நேரில் சொல்லிவிட்டுத் திரும்பிப் போ! பாவம்! அவள் மிகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாள்" என்று புவனமகாதேவி சொல்லிக் கொண்டே எழுந்து, "சுவாமி! போய் வருகிறேன். விடை

அமரர் கல்கி








சிவசிவ

கொடுங்கள்!" என்றார்.

புவனமகாதேவியுடன் மங்கையர்க்கரசி எழுந்து சென்றாள். குலச்சிறை உள்ளே வந்தது முதல் அவளுடைய முகத்தை அடிக்கடி உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவள் இப்போது வெளியேறு முன்னர் கடைசி முறையாக ஒரு தடவை பார்த்தாள். அப்போது குலச்சிறையும் அவளைப் பார்க்க நேர்ந்தது. இருவருடைய முகங்களிலும் கண்களிலும் ஏதோ பழைய ஞாபகத்தின் அறிகுறி தோன்றலாயிற்று.

பெண்ணரசிகள் இருவரும் போன பிறகு திருநாவுக்கரசர்,

"அப்பனே! எல்லாம் எனை ஆளும் எம் பெருமான் செயல்! அடியேனால் நடக்கக் கூடியது என்ன இருக்கிறது? என்றாலும் சிரித்துப் புரமெரித்த இறைவன் பெயரை உச்சரித்து இந்தத் திருநீற்றைக் கொடுக்கிறேன். எடுத்துக் கொண்டு போய் இடுங்கள். அடியேனுக்கு நேர்ந்திருந்த கொடிய சூலை நோயை ஒரு கணத்தில் மாயமாய் மறையச் செய்த வைத்தியநாதப் பெருமான், இளம் பாண்டியரின் நோயையும் குணப்படுத்தட்டும்" என்றார்.

நாவுக்கரசர் அளித்த விபூதியைப் பயபக்தியுடன் வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்ட குலச்சிறையார், மீண்டும், "சுவாமி! அடியேனுக்கு இன்னொரு வரம் அருள வேண்டும்" என்று பணிவுடன் கேட்டார்.

"கேள், தம்பி! உன்னுடைய பக்தி விநயம் என் மனத்தை ரொம்பவும் கவர்கிறது!" என்றார் வாகீசர்.

"தென் பாண்டிய நாட்டில் சமணர்களின் ஆதிக்கம் அதிகமாகி வருகிறது. ஸ்வாமிகள் தங்கள் சிஷ்ய கோடிகளுடன் பாண்டிய நாட்டுக்கு விஜயம் செய்ய வேண்டும். விஜயம் செய்து, மக்களைச் சமணர் வலையில் விழாமல் தடுத்தாட் கொள்ள வேண்டும்! தமிழகத்தின் புராதன பாண்டிய வம்சத்தையும் சமணப் படுகுழியில் விழாமல் காப்பாற்ற வேண்டும்! ஆஹா! நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததுபோல், இந்தத் தமிழ்நாட்டில் சமணம் ஏன் வந்தது சுவாமி!" என்று குலச்சிறை ஆவேசத்துடன் பேசிவந்தபோது நாவுக்கரசர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. அந்தப் பெருந்தகையார் குலச்சிறையைக் கையமர்த்தி நிறுத்திக் கூறினார்: "தம்பி! சமண மதத்தின் மீது ஒரு காலத்தில் நானும் இப்படிக் கோபம் கொண்டிருந்தேன். ஆனால், இந்தக் காலத்திலே ஒரு சிலர் செய்யும் காரியங்களுக்காகச் சமண சமயத்தின் மேல் துவேஷம் கொள்ளுதல் நியாயமன்று. அன்பையும் ஜீவகாருண்யத்தையும் போதிப்பதற்கு ஏற்பட்ட சமயம் சமண சமயம். நமது செந்தமிழ் நாடு ஆதி காலத்துச் சமண முனிவர்களால் எவ்வளவோ நன்மைகளை அடைந்திருக்கிறது. சமண முனிவர்கள் தமிழ் மொழியை வளர்த்தார்கள். அரிய காவியங்களைத் தமிழில் புனைந்தார்கள். ஓவியக் கலையை நாடெங்கும் பரப்பினார்கள்."

குலச்சிறை பொறுமை இழந்தவராய், "போதும், சுவாமி! போதும்! தங்களிடம் சமணர்களைப் பற்றிய புகழுரைகளைக் கேட்பேனென்று நான் எதிர்பார்க்கவில்லை. தொண்டை மண்டலத்தைச் சமணர்களிடமிருந்து காப்பாற்றிய தாங்கள் பாண்டிய நாட்டையும் காப் பாற்றியருள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வந்தேன். அவர்கள் செய்யும் அட்டூழியங்களைத் தாங்கள் பாண்டிய நாட்டிற்கு வந்து பாருங்கள்!" என்று பேசினார்.

நாவுக்கரசர் சற்றுநேரம் கண்களை மூடிய வண்ணம் ஆலோசனையில் இருந்தார். பிறகு கண்களைத் திறந்து குலச்சிறையைப் பார்த்துக் கூறினார். "மந்திர தந்திரங்களில் வல்லவர்களான சமணர்களுடன் போராடுவதற்குச் சக்தியோ விருப்பமோ தற்போது என்னிடம் இல்லை. ஆனால் கேள், தம்பி! என்னுடைய அகக் காட்சியில் ஓர் அற்புதத்தை அடிக்கடி கண்டு வருகிறேன். பால் மணம் மாறாத பாலர் ஒருவர் இந்தத் திருநாட்டில் தோன்றி அமிழ்தினும் இனிய தீந்தமிழில் பண்ணமைந்த பாடல்களைப் பொழியப் போகிறார். அவர் மூலமாகப் பல அற்புதங்கள் நிகழப் போகின்றது. பட்ட

மரங்கள் தளிர்க்கப் போகின்றன. செம்பு பொன்னாகப் போகின்றது. பாஷாண்டிகள் பக்தர்களாகப் போகிறார்கள். அந்த இளம்பிள்ளையின் மூலமாகவே தென் பாண்டி நாட்டிலும் சமணர்களின் ஆதிக்கம் நீங்கும்; சைவம் தழைக்கும்; சிவனடியார்கள் பல்கிப் பெருகுவார்கள்."

இவ்விதம் திருநாவுக்கரசர் பெருமான் கூறி வந்தபோது குலச்சிறையார் மெய் மறந்து புளகாங்கிதம் அடைந்து நின்றார்.

காஞ்சி பல்லவ சக்கரவர்த்தியின் அரண்மனை மிக மிக விஸ்தாரமானது. அது மூன்று பெரிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மூன்று பகுதிகளின் வெளி வாசலும் அரண்மனையின் முன்புறத்து நிலா முற்றத்தில் வந்து சேர்ந்தன. மூன்று பகுதிகளுக்கும் பின்னால் விசாலமான அரண்மனைப் பூங்காவனம் இருந்தது.

மூன்றுக்கும் நடுநாயகமான பகுதியில் மாமல்ல சக்கரவர்த்தி தம் பட்ட மகிஷி வானமாதேவியுடன் வசித்து வந்தார். வலப்புறத்து மாளிகையில் புவனமகா தேவியும் மகேந்திர பல்லவருடைய மற்ற இரு பத்தினிகளும் வசித்தார்கள். இடப் புறத்து மாளிகை, அரண்மனைக்கு வரும் முக்கிய விருந்தாளிகளுக்காக ஏற்பட்டது. அந்த மாளிகையில் தற்சமயம் இலங்கை இளவரசர் தமது மனைவியுடன் வசித்து வந்தார். ஒவ்வொரு மாளிகையை ஒட்டியும் அரண்மனைக் காரியஸ்தர்கள், காவலர்கள் முதலியோர் வசிப்பதற்குத் தனித் தனி இடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

சோழன் செம்பியன் மகளைப் புவன மகாதேவி தம் புதல்வியாகக் கருதிப் பாதுகாத்து வருவதாக வாக்களித்திருந்தார் என்று சொன்னோமல்லவா? அந்த வாக்கை அவர் பரிபூரணமாக நிறைவேற்றி வந்தார். அரண்மனையில் இருந்தாலும், வெளியே கோயில்கள் அல்லது மடங்களுக்குச் சென்றாலும், மங்கையர்க்கரசியைச் சதா சர்வகாலமும் அவர் தம் பக்கத்திலேயே வைத்துக் கொண்டிருந்தார்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற மகேந்திர பல்லவரைப் போலவே அவருடைய பட்ட மகிஷி புவனமகாதேவியும் சிவபக்தியிற் சிறந்தவர். சக்கரவர்த்தி சிவபதம் அடைந்த பிறகு அவர் தமது காலத்தைப் பெரும் பாலும் சிவபூஜையிலும் சிவபுராணங்களின் படனத்திலும் கழித்து வந்தார். அவருடைய அரண்மனையின் ஓர் அறையில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து தினந்தோறும் ஆகம விதிகளின்படி அவர் பூஜை செய்வதுண்டு. இந்தச் சிவபூஜைக்கு வேண்டிய பணி விடைகளைச் செய்யும் உரிமையை மங்கையர்க்கரசி வருந்திக் கோரிப் பெற்றிருந்தாள். மேற்படி பணிவிடைகளை மிக்க பக்தி சிரத்தையுடன் நிறைவேற்றி வந்தாள். முன்பின் அறியாதவர்கள் அடங்கிய அந்தப் பிரம் மாண்டமான அரண்மனையில் மங்கையர்க்கரசி பொழுது போக்குவதற்கும் அத்தகைய பூஜா கைங்கரியங்கள், சிறந்த சாதனமாயிருந்தன.

மாமல்லர் படையுடன் கிளம்பிச் சென்று மூன்று தினங்கள் வரையில்தான் அவ்விதம் எல்லாம் ஒழுங்காக நடந்தன. நாலாவது நாள் புவனமகாதேவியும் மங்கையர்க்கரசியும் திருநாவுக்கரசரைத் தரிசித்துவிட்டு வந்தார்கள் அல்லவா? அன்றுமுதல் மங்கையர்க்கரசியின் கவனம் சிறிது சிதறிப் போய்விட்டது. தேவியார் சிவபூஜை செய்ய அமர்ந்த பிறகு, புஷ்பம் வேண்டியபோது தூபத்தையும், தூபம் கேட்டால் பிரசாதத்தையும் மங்கையர்க்கரசி எடுத்துக் கொடுக்கலானாள்.

இதையெல்லாம் கவனித்த புவன மகாதேவி பூஜை முடிந்த பிறகு, "குழந்தாய்! இன்றைக்கு என்ன ஒரு மாதிரி சஞ்சலம் அடைந்திருக்கிறாய்? தகப்பனாரை நினைத்துக் கொண்டு கவலைப் படுகிறாயா? என்னைப் பார்த்துக் கொள், குழந்தாய்! என்னுடைய ஏக புதல்வனைப் போர்க்களத்துக்கு அனுப்பி விட்டு நான் நிம்மதியாக இருக்கவில்லையா?" என்று தைரியம் கூறினார்.

அப்போது மங்கையர்க்கரசி சிறிது நாணத்துடன், "இல்லை அம்மா! அப்படி

அருள்வாக்கு

எனக்கு முன்னாள் வாழைப்பழச் சீப்பு வைத்திருக்கிறது. "இதைப் பார். இது மஞ்சளாக இருக்கிறது" என்று நான் சொன்னால், இது மஞ்சளாகத்தான் இருக்கிறது என்று காண்கிறீர்கள். அதற்குமேல் மனசில் அதைப்பற்றி எந்தப் பிரதி சிந்தனையும் (Reaction) எழுவதில்லை. மாறாக, இதே வாழைப்பழத்தைக் காட்டி, "இதோ பார், இது சிவப்பாக இருக்கிறது" என்று நான் சொல்லியிருந்தால்? உடனே உங்கள் மனசில் ஓர் ஆட்சேப உணர்ச்சி எழுந்திருக்கும். இது மஞ்சள் என்றோ, சிவப்பு என்றோ நான் சொல்லாமல், "இந்த வாழைப்பழம் சிவப்பாக இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னால் அப்போது உங்கள் மனசில் ஒருவிதமான பிரதி உணர்ச்சி உண்டாகிறது. மஞ்சள் பழத்தையே சிவப்பாக இருப்பதுபோல் உங்கள் மனசினால் கற்பனை செய்து பார்க்கிறீர்கள். மனசை ஒருமுகப்படுத்தினால் அப்படிப் பாவிக்கவும் முடிகிறது.



உபாசனை என்பது இப்படிப்பட்டதுதான். பரம்பொருள் இப்படி இப்படி இருப்பதாகப் பாவியுங்கள் என்று பலவிதமான குணங்களைக் கொண்ட பல மூர்த்திகளைக் காட்டிக் கொடுக்கிறது உபாசனா மார்க்கம். வாழைப்பழம் உண்மையில் மஞ்சள் நிறம் என்பது போல் பரமாத்மாவின் உண்மைக் குணம் என்பது என்ன? அது குணம் கடந்தது என்பதே. பரமாத்மா எல்லா குணமும் கடந்த வஸ்து என்று சொல்லிவிட்டால், அப்புறம் ஜனங்களின் மனசு அதில் மேற்கொண்டு நிற்பதற்கு இடமே இல்லை. இது நமக்குப் புரியாத வஸ்து என்று விட்டுவிடுவார்கள். வாழைப்பழத்தைச் சிவப்பு என்று சொன்னதை மனசு ஆட்சேபித்தது போல், ஒரு சிலையைக் காட்டி, இதுதான் பரமாத்மா என்றால், அதை எவராலும் ஏற்க முடியாது. "இது ஒரு கல் பொம்மை அல்லவா? இது எப்படி உலகத்தை நடத்துகிற பரமாத்மா சக்தி ஆகும்?" என்று தோன்றும். ஆனால் ஒரு சிலையைக் காட்டி, "இதைப் பரமாத்மா என்று பாவியுங்கள்" என்றால் அப்படி பாவிக்க முடிவதாகத் தோன்றும் - வாழைப் பழத்தைச் சிவப்பாகக் கற்பனை செய்வது போல். ஆனால் சிவப்பு என்றால் என்னவென்று மனசுக்குத் தெரிவது போல் பரமாத்மா லட்சணம் தெரியாதே! அதனால் விக்கிரகத்தை 'ஏதோ பெரிய வஸ்து' என்று சிறிது எண்ணிப் பார்க்கலாமே தவிர, அதிலேயே ஆழ ஊன்றி நிற்க முடியாது. தெரிந்த விஷயங்களில்தான் மனசு பிடிமானத்தோடு நிற்கும். எனவே, ஒரே காருண்யமும் சௌந்தரியமும் வழிகிற மாதிரி ஸ்திரீ ரூபத்தில் விக்கிரகம் செய்து, "இதில் பரமாத்மா தாயாராக வந்திருக்கிறார் என்று பாவனை பண்ணு" என்றால் மனசு அதை நன்றாகக் கிரகித்துக் கொண்டு அப்படியே ஆழ்ந்து ஈடுபட முடிகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

யெல்லாம் கவலை ஒன்றுமில்லை!'' என்றாள்.

''பின் ஏன் உன் முகத்தில் சிந்தனைக்கு அறிகுறி காணப்படுகிறது? இந்த அரண்மனையில் வசிப்பதில் ஏதாவது உனக்குத் தொந்தரவு இருக்கிறதா?'' என்றார் மகேந்திரரின் மகிஷி.

''தொந்தரவா? இவ்வளவு சௌக்கியமாக நான் என் தந்தையின் வீட்டிலே ஒரு நாளும் இருந்ததில்லை. என் மனத்திலும் சஞ்சலம் ஒன்றுமில்லை. நாவுக்கரசர் பெருமானோடு தாங்கள் வார்த்தையாடிக் கொண்டிருக்கையில், வாலிபர் ஒருவர் வந்தாரல்லவா? அவரை எங்கேயோ ஒருமுறை பார்த்த ஞாபகமிருந்தது. அதையொட்டிச் சில பழைய ஞாபகங்கள் வந்தன. வேறொன்றுமில்லை அம்மா'' என்று மங்கையர்க்கரசி கூறினாள்.

(தொடரும்)

சோ எழுதிய

வால்மீகி ராமாயணம்

மஹாபாரதம் பேசுகிறது

அல்லயன்ஸ் நூற்றாண்டு சிறப்பு வெளியீடுகள் **100** தலைப்புகளில் **100** புத்தகங்கள்!

என். ஸ்ரீநிவாஸன் எழுதியது

முதன்முறையாகத் தமிழில் வெளிவரும்

என்சைக்ளோபீடியா

1.	நம்மவர் செய்த விந்தைகள்	100
2.	அவர்கள் செய்த விந்தைகள்	100
3.	உலக மகா கொடுங்கோலர்கள்	100
4.	உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவுகள்	100
5.	விந்தை உயிரினங்கள்	100
6.	அரண்மனை ரகசியங்கள்	100
7.	உலகப் புகழ் பெற்ற கட்டடங்கள்	100
8.	நம்ப முடியாத உண்மைகள்	100
9.	வியப்பூட்டும் உண்மைகள்	100
10.	தாவர உலகிலே!	100
11.	விந்தைத் தாவரங்களும் மூலிகைத் தாவரங்களும்	100
12.	யார் என்ன சொன்னார்கள்?	100
13.	நீருலகிலே!	100
14.	பாலூட்டிகள் வரிசையிலே!	100
15.	தமிழ் வளர்த்த பெருமக்கள்	100

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ. 100/-

Dr. சுப்ரமண்ய ஸ்வாமி

எழுதிய

ராஜீவ் காந்தி கொலை

விடை கிடைக்காத வினாக்களும் கேட்கப்படாத கேள்விகளும்

(தமிழாக்கம் - சுதாங்கன்)

பரபரப்பான அரசியல்வாதியின் பரபரப்பான புத்தகம்

விலை ரூ. 125/-

25000க்கும் மேற்பட்ட பழமொழிகளைக் கொண்டது 'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் தொகுத்த

தமிழ்ப் பழமொழிகள் (4 தொகுதிகள்) ரூ. 300/-

காஞ்சீ மஹா ஸ்வாமிகள் ஸ்ரீ சந்திர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் திரு அவதாரத்தில் தொடங்கி - திரு அவதாரம் நிறைவு வரை - ஓவியர் சில்பியின் ஏராளமான படங்கள் - புகைப்படங்களுடன் - இரண்டு தொகுதிகள் - (ஸ்ரீ சாம்பமூர்த்தி ஸாஸ்த்ரிகள், குப்புஸ்வாமி ஐயர், பி.என். பரசுராமன் எழுதியது)

பூஜ்யஸ்ரீ மஹா ஸ்வாமிகள் வரலாறு (ரூ.500/-)

'சொல்லின் செல்வன்' பி.என். பரசுராமன் எழுதிய நூல்கள்

விதுர நீதி	ரூ. 30/-	சனத்குமாரரின் உபதேசங்கள்	ரூ. 25/-
நீதி சதகம்	ரூ. 21/	பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள்	ரூ. 60/-
விபூதி ருத்ராட்சம் மகிமை	ரூ. 37/-	வைராக்கிய சதகம்	ரூ. 16/-
சித்தர்கள் சரித்திரம்	ரூ. 35/-	யட்சப் பிரச்னம் ப்ரச்னோத்ர ரத்னமாலிகா	ரூ. 25/-
துணுக் துணுக்	ரூ. 21/-	சித்ரகுப்தன் கதைகள்	ரூ. 18/-
அஷ்டாவக்ரர் உபதேசங்கள்	ரூ. 33/-	வாரியார் சொற்பொழிவில் கேட்டவை	ரூ. 60/-
மஹரிஷிகள் வரலாறு A.V. சுகவனேஸ்வரன்	ரூ. 65/-	An Introduction to the Vedas (Ka.Sri.Sri)	ரூ. 60/-

அல்லயன்ஸ் கம்பெனி

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்
சென்னை - 6000 004. ✆ 24941314

● எம். பாலமுருகன், பாப்பான்குளம். *

? தற்போதுள்ள சூழ்நிலையில் ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பவர் யார்?

! பத்திரிகைகள்தான். குஜராத் பேக்கரி வழக்கில் சாட்சிகள் பல்டி அடித்த விஷயத்தை அவை விரிவாக எழுதப் போய்தான், தேசிய மனித உரிமைக் கழகம் தலையிட்டுத் தட்டிக் கேட்டிருக்கிறது. அரசு, வழக்கை நியாயமாக நடத்தவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? இலவசத் திருமணம் போன்ற திட்டங்களால் எந்தப் பயனும் கிடையாது என்கிறாரே ப. சிதம்பரம்?

! திருமணம் செய்து வைப்பது குடும்ப விவகாரம். அது அரசின் கடமைகளில் ஒன்றல்ல. வரிப்பணம் ஆக்க பூர்வமாக, தொழில் – பொருளாதாரத்தையும் அதன் மூலம் வேலை வாய்ப்புக்களையும் பெருக்கும் விதத்தில் முதலீடாக வேண்டும். மக்கள், அரசைச் சார்ந்திராமல் சொந்தக்காலில் நிற்க வேண்டும். அதுதான் மெய்யான மக்கள் நலன் பேணுதல் – என்பது போன்ற பல ஆரோக்கியமான விஷயங்களை ரத்தினச் சுருக்கமாகக் கூறியிருக்கிறார்.

● வி. பரமசிவம், சென்னை.

? காங்கிரஸ் வலுவான இயக்கம்; அதை யாராலும் உடைக்க முடியாது என தமிழ்நாடு காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கெய்க்வாட் கூறியிருப்பது பற்றி...?

! உண்மை. காங்கிரஸை வெளியிலிருந்து யாரும் உடைக்க முடியாது. உள்ளே இருப்பவர்களே உடைத்துக் கொள்கிறார்களே!

● ஏ. குமாரவேலு, பாளையங்கோட்டை.❐

? வைகோவையும் நக்கீரன் கோபாலையும் பொடா சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்திருப்பதால் தமிழக அரசுக்கு என்ன நன்மை? அவர்கள் வெளியிலிருந்தால் என்ன கெடுதல்?

! தமிழக அரசுக்கு நன்மையோ இல்லையோ, தனது பராக்கிரமத்தை நிரூபித்த திருப்தி. இவர்கள் வெளியில் இருந்தால் என்ன கெடுதல் என்பதை உணர்த்தும் வகையில், வழக்கு எதுவும் முடிந்து, தீர்ப்பு வெளியாகவில்லையே!

● எம். பாலமுருகன், பாப்பான்குளம்.

? அமெரிக்கா - பாக் - இந்தியா உறவை மதிப்பிட்டுக் கூறவும்?

! இந்தியா - பால்; பாக் - பூனை; பெரியண்ணன் பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்!

● இ. ராதாகிருஷ்ணன், எர்ணாகுளம்.

? 'ஜனநாயகத்துக்குப் பத்திரிகைகளும் மிக முக்கியமான ஒரு தூண்' என்று அத்வானி கூறியுள்ளாரே?

! அதைத் தமிழக முதல்வர் காதில் விழும்படி இன்னும் கொஞ்சம் சத்தமாகச் சொன்னால் நல்லது.

● அஜார், சென்னை - 18.

? ஒரு சாதாரண மனிதன் கடவுளை நினைப்பதால் கடவுளுக்கு என்ன லாபம்? அவன் கடவுளை நினைக்காவிட்டால் கடவுளுக்கு என்ன நஷ்டம்?

! சகோரப் பறவை என்று ஒன்று உண்டு. அது முழு நிலவை, வைத்த கண் வாங்காமல் பார்த்து மகிழுமாம். இறைவன் அந்தப் பறவையைப் போன்றவன் என்கிறார் சதாசிவ பிரம்மேந்திரர். பரமஹம்சர்களான



• அனாவசிய அதிருப்தி



• பராக்கிரமப் பிரகடனம்!

காங்கிரஸை யாராலும் உடைக்க முடியாதாமே...?





• போடா...



• ... பரிதாபம்!



• கருக் - நறுக் விளக்கம்!

தனது பக்தர்களின் முகங்களை, சகோரப் பறவை நிலவைக் காண்பது போல் கண்டு மகிழ்வானாம்! ஆக, நஷ்டமோ லாபமோ - இரு தரப்புக்கும் தான்!

● டி. சுப்ரமணியன், மேலையூர்.

? 'சீரியல்களால் சினிமா அழிகிறது' என்று பேசி வந்த சினிமாக்காரர்கள் இப்போது சின்னத்திரை சேனல் துவங்குவது எதைக் காட்டுகிறது?...

! எதிர் நீச்சல் போட்டு சோர்ந்து போய், இப்போது sailing with the wind!

● திருமதி பிச்சை சுவாமி நாதன், சென்னை-47.

? 'என்னைப் போன்ற குணச்சித்திர நடிகர்களை அயல்நாடுகளில் நட்சத்திர நிகழ்ச்சிகளுக்கு அழைப்பதேயில்லை. ஏன் குணச்சித்திர நடிகரானோம் என்று வருத்தமாயிருக்கிறது' என டெல்லி கணேஷ் பொதிகையில் பேட்டி கொடுத்தது பற்றி..?

! அயல்நாட்டு நட்சத்திர நிகழ்ச்சிகள் இப்போதைக்கு வெறும் கேளிக்கை மட்டுமே. எனவே டெல்லி கணேஷின் ஆதங்கம் தீர்ந்ததானால், அவரைப் போன்ற குணச்சித்திர நடிகர்கள் தங்கள் தனித்தன்மையை இழக்கவே நேரிடும். வேண்டாமய்யா, நல்ல நடிப்புக்கு இலக்கணமாகச் சில பேராவது இருந்துட்டுப் போங்க.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.


? சமீபத்தில் தங்கள் மனத்தை பாதித்த சம்பவம்...?

! ஆபாச இணையதள வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் டாக்டர் பிரகாஷுக்கு எதிராக முக்கிய சாட்சியம் அளித்திருக்கும் நர்ஸ் சித்ரா, தற்கொலைக்கு முயன்றிருப்பதை அறிந்ததும் அதிர்ந்து போனேன். இதற்கு மெய்யான காரணம் என்ன? யார் பொறுப்பு என்று துப்பறிந்து மற்றொரு வழக்குத் தொடர வேண்டியது காவல் துறையின் கடமை. இல்லையெனில் வேலியே பயிரை மேய்வதாக அர்த்தமாகும்.

● ஜி. குப்புசாமி, சங்கராபுரம்.

? தராசுவுக்கு த்ரிஷாவிடம் பிடித்தது

தேனீயும் சிலந்தியும்!



நற்பண்புகள் தேனீக்களைப் போல ஒவ்வொரு மலரிலிருந்தும் தேனைச் சேகரிக்கும். தீய பண்புகள் சிலந்தியைப் போல இனிமையான மலரிலிருந்தும் கூட விஷத்தை மட்டுமே உறிஞ்சும்.

— ஸ்ரீ சத்ய சாய் பாபா



தெய்வ அருளில் ஒருவனுக்கு நம்பிக்கை இருக்குமானால், அவன் வாழ்வின் எல்லா வகையான கஷ்டங்களையும், விபத்துகளையும் எளிதில் கடந்து விடுவான். அவனை எதுவும் அசைக்க முடியாது.

— ஸ்ரீ அரவிந்த அன்னை
தகவல்: பா. அச்சுதன்



பேச்சு குறைவாகவும், செயல் அதிகமாகவும் இருக்க வேண்டும். சதா ஒலித்துக் கொண்டேயிருக்கின்ற தண்டை, சிலம்பு முதலியன காலில் கிடக்கின்றன. மௌனமாகவுள்ள அணிகலன்கள் கழுத்திலும், தலையிலும் அணியப்படுகின்றன.

— கிருபானந்த வாரியார்
தகவல்: பா. குணா

என்ன...? ஹீ...ஹீ...!

! பதில்கள் பகுதியில் வண்ணமயமாக ஒரு ஸ்டில் வெளியிடுகிற வாய்ப்புத் தரும் கேள்விகளை, வாசகர்களிடமிருந்து வரவழைக்கிறாரே! ஹ, ஹ, ஹா!

● **என். சுஜாதா, சென்னை - 61.**

? *மக்களிடையே சினிமா மோகம் குறைந்துள்ளதா?*

! தியேட்டரில் போய்ப் பார்க்கும் மோகம் குறைந்திருக்கிறது. திருட்டு வி.சி.டியில் அதிகரித்திருக்கிறது.

● **பா.சு. மணிவண்ணன், திருப்பூர் - 4.**

? *எம்.பியாக ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர், மறுமுறையும் எம்.பியாகிவிட வேண்டும் என்று துடிப்பது ஏன்...?*

! ருசி கண்டதுதான் காரணம்.

● **ஆர். லட்சுமணன், திருப்பாச்சேத்தி.**

? *குடுகுடுப்பைக்காரன், செப்பிடு வித்தைக்காரன், அரசியல்வாதி இம்மூவரில் மக்கள் அதிகம் பயப்படுவது யாருக்கு...?*

! முதல் இரண்டு பேராக மூன்றாமவரே ஆகிவிடுவதால், அவருக்குத்தான் மக்கள் அதிகம் பயப்படுகிறார்கள்.

● **சித்ரா கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்.**

? *மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம், என்கிறோம்... கணவன் அமைவதெல்லாம்...?*

! கடவுள் கொடுத்த வரம்!

● **ஜே.டி.ஆனந்தன், மதுரை - 5.**

? *ஆன்மிகத்திலிருந்து மூட நம்பிக்கைகளை முழுமையாக அகற்ற முடியாதா...?*

! வழிபாட்டு முறைகளுள் சில, மூட நம்பிக்கைகளைச் சார்ந்து வளர்ந்துள்ளன. இதற்குக் காரணம் அறியாமையே தவிர, ஆன்மிகம் அல்ல. ஆன்மிகம் என்பது மெய்யறிவின் தேடல்.

● **பொன்விழி, அன்னூர்.**

? *முற்றும் துறந்தவர் யார்...?*

! 'முற்றும்' துறந்த ஒரே நபர், தந்தியில் 'கன்னித்தீவு' எழுதுபவர்தான்.

❒ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
ஏ. குமாரவேலு,
8/1, போலீஸ் ஸ்டேஷன் தெரு,
பாளையங்கோட்டை, நெல்லை - 627 002

ரூ. 50/- பரிசு பெறுபவர்:
எம். பாலமுருகன்,
S/o, முத்துகிருஷ்ணன்,
முதல் தெரு, பாப்பாங்குளம்,
நெல்லை மாவட்டம் - 627 006



பரிகார ஸ்தலமான இராமேஸ்வரத்தில்
ஆடி அமாவாஸை திதியில்
அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அமாவாஸையில் சூரியனும் சந்திரனும் ஒரே நேர்க்கோட்டில் சஞ்சரிப்பதால் அன்றைய தினம் மனிதர்களது புத்தி சஞ்சலம் இல்லாமல் தெளிவாகச் செயல்படுகிறது. நாம் எதை நினைத்து அமாவாஸை தினத்தில், இராமேஸ்வரத்தில் தான தர்மங்கள் செய்கிறோமோ, அந்த எண்ணங்கள் பல மடங்கு உறுதியோடு வெற்றி பெறும். ஆடி அமாவாஸை அன்னதானம் மேலும் சிறப்பான பலன்களை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ஸ்ரீ இராமனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், முனிவர்கள் பலரும் இங்கு வந்து நீராடியதால் இராமேஸ்வரம் க்ஷேத்ரத்திற்கு மென்மேலும் பெருமை உண்டு. இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் என்றென்றும் அழியாத பலனைக் கொடுக்கும்.

இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக வடை, பாயசத்துடன் அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறிய தொகை மற்றும் அரிசி போன்ற உணவுப் பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000, ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் (அ) பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

இராமேஸ்வரத்தில் பிறந்தநாள், திருமணநாள் என நீங்கள் நினைக்கும் நாளில் அன்னதானம் செய்ய எமது அறக்கட்டளை சிறப்பான ஏற்பாடுகள் செய்துள்ளன. ஆகவே, நீங்கள் நினைக்கும் நாளில் அந்தணர்கள், சாதுக்கள், ஏழைகளுக்கும் அன்னதானம் செய்யலாம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது ஒத்துழைப்பை நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST
M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR,
THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA
☎: (044) 24900303, 24900603, 24416122 Mobile : 94441 16300

ஆடி அமாவாஸை நாளில் நேரில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் முன்பதிவு செய்துகொள்ளவும்.

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

குரு பூர்ணிமா

என்னுள் உறையும் இறைவன்
அண்டசராசரத்தின் தலைவன்.
என் குரு இவ் வண்டத்தின் குரு.
என் ஆன்மா எல்லா உயிரினங்களின்
ஆன்மா.
என் மேன்மையுடைய, அறிவொளி
பரப்பும் ஆத்ம குருவே,
நான் உங்களை சிரம் தாழ்ந்து
வணங்குகிறேன்.

படைப்பு முழுவதற்கும் பொதுவாக உள்ளதை நம்முடையது என்றும், நம்முடையதென்று எது உள்ளதோ, அது எல்லோருக்கும் பொதுவானது என்றும் நாம் கருதுவதில்லை.

நம் உடைமைகள் என நாம் காண்பவையும் உலகுக்குரியன என நாம் கருதுபவையும் முற்றிலும் வேறானவை; ஒன்றுக்கொன்று எதிர்மறையானவை என்றுதான் நாம் நினைக்கிறோம்.

இந்த குரு பூர்ணிமா அன்று இப் பார்வை சமன்படட்டும். இவ்வண்ட சராசரத்தின் இறைவன் நமக்கே உரியவன் என்று உணர்ந்து விழித்தெழுவோம். குரு இந்த முழு உலகின் தலைவன். குரு, வேறு யாருமல்ல; நமது அந்தராத்மா. அந்த ஆன்மாதான் ஒவ்வொரு ஜீவனிலும் உள்ள உயிர்.

படைப்பு முழுமைக்கும் பொதுவானவற்றை உனக்குச் சொந்தமானதாக நினை. நீ எல்லாம் உடையவனாக, செல்வந்தனாக, அறிவாளியாக, வலிமையுடையவனாக ஆகிவிடுகிறாய்.

உனக்குச் சொந்தமானவைகளை, படைப்பு முழுமைக்கும் சொந்தமானதாக நினை. நீ சுதந்தரத்தையும், பரிவையும், கருணையையும், அன்பையும் காண்பாய்.





அன்புள்ள அப்பா,

ஆர்ட் ஆஃப் லிவிங் பயிற்சியை எனக்கு அறிமுகம் செய்து வைத்ததற்கு நன்றி. இந்த மூன்று நாட்களாக நான் அனுபவித்தவை அபூர்வமான உணர்வுகள். அவை என் வாழ்வின் மேம்பாட்டுக்கு என்றைக்கும் பயன்படப் போகின்றன. மூன்று நாள் சிறப்புப் பயிற்சி புத்துணர்வு தந்தது; சக்தியை அளித்தது; ஓய்வையும் கொடுத்தது! நான் எண்ணியதற்கும் மேலாக அமைந்திருந்தது.

நான் இதுவரை உணர்ந்திராத என்னையே எனக்கு அறிமுகம் செய்து வைத்தன தியான வகுப்புகள். அதன் வெறுமையில் கண்ட



அன்பின் ஊற்று-4

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

தெய்வீகம் அற்புதமானது. அன்றைக்குப் பயிற்சி எடுத்துக் கொண்ட மூன்னூறு பேருக்கு மேற்பட்டவர்களிடையே உருவான எழுச்சியும், அன்பும், விவரிக்க முடியாதவை. ஏதோ நாங்கள் எல்லோருமே ஒரு பெரிய மகிழ்ச்சியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போன்ற நினைவைத் தோற்றுவித்தது. இதுவரை நான் அறிந்திராத மகிழ்ச்சியை அனுபவித்தேன். என்னைச் சுற்றிலும் உள்ள பிரச்னைகள் மிக அற்பமானவையாக உணர்கிறேன்; நான் எப்போதும் புன்னகையுடனே உலாவுகிறேன். என்னைச் சுற்றியுள்ளவர்கள் பால் எனக்குக் கருணையும் அன்பும் பூக்கின்றன. குருஜியின் நேரடி மேற்பார்வையில் ராஜஸ்ரீ பட்டேல் நடத்திய வகுப்புகள் - பிரமாதம்!

நன்றியுடன்

வித்யா சுப்பிரமணியன்
கலிஃபோர்னியா, யு.எஸ்.

(நாட்டியக் கலைஞர் வித்யா சுப்ரமண்யம் தமது தந்தைக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி.)



பூசல், புகைச்சல் என
சதா டென்ஷனாகவே இருக்கும்
காங்கிரஸ்காரர்களைக் கொஞ்சம்
ரிலாக்ஸ் செய்ய வேறு வழியே
தெரியவில்லை.



''ஏன்யா! ஃபீஸ்
எடுத்துக்கிட்டு வரலை...?''
''நீங்கதானே டாக்டர்,
சாயங்காலம் ஆறு
மணிக்கு மேல் நான்
ஃப்ரீன்னு
சொன்னீங்க...!''
- வி. பார்த்தசாரதி



''உன்
மாமியாரைக்
கடிச்ச அதே பாம்பு
உன்னையும் கடிச்சிடுச்சா...
அதெப்படி?''
''மாமியாரைக் கடிச்சதும்
'வெல்டன்'னு தலையில
தட்டிக் கொடுத்தேனா...''
- அஜித்வால்





"உங்க
புருஷனுக்குக் காலையிலே
கொஞ்சம் அருகம்புல்லும்
சாயங்காலம் கொஞ்சம் பசலைக்
கீரையும் கொடுங்க, சரியாயிடும்!"
"இடையிடையே கொஞ்சம்
'தண்ணி' காட்டலாமா
வைத்தியரே?"
- நெ. இராமன்



"பிளேடை இனிமேல்
தொடவே மாட்டேன்னு நம்ம
பக்கிரி சத்தியம் பண்ணிட்டான் சார்!"
"வெரிகுட். பிறகு ஏன் உன்
தலையிலே கட்டு?"
"பிளேடு கையோட என் தலையிலடிச்சு
சத்தியம் பண்ணிட்டான் சார்...!
- நெ. இராமன்

கோஷ்டிச் சிரிப்பு



"நம்ம தலைவர் சலூன்ல போய்
என்ன தகராறு பண்றாரு...?"
"முடி வெட்டும்போது போர்த்தின
துண்டை வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப்
போவேன்னு அடம் பிடிக்கிறாராம்!"
- வி. சாரதி டேச்சு

இந்த நூற்றாண்டில் இந்து மதம்
14

மக்கள் பணியும்



காஞ்சி மஹாஸ்வாமிகள் யாத்திரையில் இருந்தபோது நடந்ததாக ஒரு சம்பவம் சொல்வார்கள். பூஜை நிறைவடைகிற நேரம். ஏழைக் குழந்தைகள் சிலர் வந்திருக்கிறார்கள். பூஜை முடித்து அவர்களுக்குக் கற்கண்டும் பிரசாதமும் வழங்கியிருக்கிறார்கள் ஸ்வாமிகள். ஸ்வாமிகள் உள்ளே போகத் திரும்பியபோது, யாரோ ஒரு பக்தர் ஏதேச்சையாகச் சொல்லியிருக்கிறார் 'பகவானுக்கு நைவேத்தியம்..' மஹாஸ்வாமிகள் மெல்லிய புன்னகையுடன் கூறினாராம் : 'இன்னிக்கு நைவேத்யம் ஆயாச்சு.'

இந்த நிகழ்ச்சிக்குள் சம்பிரதாயம், நிரல்முறை ஆகியவற்றைத் தேடாமல், உள் பொதிந்திருக்கும் மெய்ம்மையை உணர்தல் அவசியம். மக்களுக்குள் மகேசனைக் காணலாம்.

மக்கள் பணி, மகேசன் பணியென்பது மட்டுமல்ல, தொண்டர்களுக்குப் பணி செய்ய தெய்வங்களும் விழைந்தார்கள் என்பதுதான் எண்ணி எண்ணி வியக்க வைக்கிறது.

- உதவிக்கு யாருமில்லாமல் தவித்துக் கொண்டிருந்த வந்தியென்னும் மூதாட்டிக்காகத் தானே மண்வெட்டியும் கூடையும் சுமந்து வந்த சிவபெருமான்;
- திருநாவுக்கரசர் தன்னந்தனியாக வழிதேடிப் போனபோது, உணவு கிட்டாமல் பசியில் படுத்துச் சுருண்டபோது, அவருக்காகப் பொதி சோறு சுமந்து கொண்டு, வழியில் வந்து காத்திருந்து, பின்னர் வழிகாட்டி, திருப்பைஞ்ஞீலி திருத்தலத்திற்கு அழைத்துச் சென்ற அரனார்.
- இராமாவதாரத்தில் பதினான்கு ஆண்டுகள் காட்டிலும் மேட்டிலும் நடந்திருந்தாலும், மீண்டும் கிருஷ்ணாவதாரத்தில், பாண்டவர்களுக்காகத் தூது நடந்த பரந்தாமன்.
- பல்வேறு முறைகள், வெற்றிலைப்

டாக்டர் சுதா சேஷய்யன்

பெட்டி முதல் வெண் கொற்றக் குடைவரை, ஏதாவதொன்றைச் சுமந்து கொண்டு இருட்டிலும், ஒளியிலும், மழையிலும், வெயிலிலும், பக்தர்களுக்குச் சேவகனாய் மகிழ்ந்த இறைவன்;

... அன்பர் பணியை அளப்பரும் பணியாகவே சனாதன தர்மம் கருதுகிறது என்பதன் எண்ணற்ற எடுத்துக்காட்டுகள்.

நாயன்மார்கள் பலர் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னமிடும் தொண்டாற்றியவர்கள்; அடியார்களுக்குத் தொண்டு செய்வதையே ஆண்டவன் பணியாகக் கண்டவர்கள். அதனாலேயே அவர்கள் நாயனார் பதவியடைந்தார்கள்.

மக்கள் பணி செய்ய வேண்டுமென்பதையே மகேசனிடம் தன் விண்ணப்பமாகவும் வைத்தார் தாயுமானவர்; "எவ்வுயிரும் என் உயிர்போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருள் கருணை செய்யாய்! பராபரமே!" என்றார். மகாகவி பாரதியாரோ, அதனைக் கடமையென்றே குறிப்பிட்டார் - "கடமையாவன; தன்னைக் கட்டுதல், பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலன் பேணல்'' இவ்வாறு பணி செய்தால், விளைவாக இன்பநிலையே வரும்; தாயுமானார்தாம் அதையும் ஆணித்தரமாகச் சொன்னார் - "அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானேவந்து எய்தும்; பராபரமே!"


மக்கள் பணி ஆற்றுவது மகேசன் பணி என்பது மட்டுமல்ல; அதுவே ஒவ்வொருவரையும் பணிவடையவும் செய்யும். அடக்கமும் பணிவும் கொண்டு அன்பர் பணி செய்வதையே உண்மைத் தொண்டு என விளக்கியது இந்து தர்மம்.

மாமன்னன் சிவாஜிக்கே இந்தப் பாடத்தைக் கற்றுக் கொடுத்தார் சமர்த்த ராமதாசர். ஒரு பெருங்கோட்டையைக் கட்டிய சிவாஜி, அதனால் பலருக்கும் உணவளிக்கிறோம் என்று சற்றே இறுமாந்தார்.

அரண்மனைக்கு வந்த சமர்த்த ராமதாசர், சிவாஜியைப் புகழ்ந்துரைத்தார். புகழுரையைக் கேட்டு நெளிந்த சிவாஜி, 'எல்லாம் தங்கள் ஆசிர்வாதமன்றோ!' என்றே அடக்கத்துடன் பதிலளித்தார். குருவிடம் அடக்கமும் மரியாதையும் இருப்பினும், மற்றோர் மூலையில் இலேசான கர்வம் இருப்பதைப் புரிந்து கொண்டார் ராமதாசர். பேசிக்கொண்டே ஒரு கல்லை எடுத்து சிவாஜியிடம் கொடுத்தார் ராமதாசர். உடைக்கச் சொன்னார். சிவாஜியும் உடைக்க, அதனுள்ளிருந்து தேரையொன்று துள்ளிக் குதித்தது. தண்ணீர் வழிந்தது.

சிவாஜிக்கு வியப்பு; "எப்படி இதற்குள் தேரை இருக்கிறதென்று கண்டுபிடித்தீர்கள்?" திருப்பிக் கேட்டார் சமர்த்த ராமதாசர்; "இதற்கு யார் சிவாஜி உணவளித்தார்கள்?'' விழித்தார் சிவாஜி. ஏதோ புரிந்தமாதிரித் தெரிந்தது. மீண்டும் யோசித்தால் புரிந்தது.

எல்லோருக்கும் உணவளிப்பது இறைவன் அல்லவா!



மகேசன் பணியும்

மக்கள் பணி செய்கிறோம் என்று மதர்ப்பில் செய்வதைவிட, மகேசன் பணி செய்ய இப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்று மகிழ்வது முறை.


'எந்த மனிதனும் தீவாகிவிட முடியாது' என்பார்கள் சமூகவியலாளர்கள். நூற்றுக்கு நூறு உண்மை. உணவுக்கும், உடைக்கும், எத்தகைய அத்தியாவசியத் தேவைக்கும் ஒருவரையொருவர் சார்ந்து வாழும் சமுதாயத்தில், எந்த மனிதனும் ஏதாவதொன்றுக்காவது பிறரை எதிர்நோக்க வேண்டும். அதே விதியைச் சற்று விரிவுபடுத்தினால், தானும் பிறருக்கு உதவ வேண்டும். இப்படி ஒருவருக்கு ஒருவர் உதவிக் கொள்வதையே மக்கள் பணியாக்கி, அதிலேயே மகேசனையும் கண்ணுற்றால், சமுதாயம் எவ்வளவு செம்மையாக இருக்கும்?

'பசித்திருக்கும் வயிறுகளிடம் பகவானைப் பற்றிப் பேசமுடியாது', என்பார் இராமகிருஷ்ண பரமஹம்ஸர். இதையே சுவாமி விவேகானந்தர், ''வாயினால் செய்யும் பிரார்த்தனையை விட, கையினால் செய்யும் பிரார்த்தனை மேலானது'' என்று குறிப்பிடுவார். இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய சிந்தனையாளர்களான அலெஸாண்ட்ரோவிச் சோரோகின் மற்றும் பெர்ட்ரண்ட் ரஸல் ஆகிய இருவரும் ஒரு கருத்தை வலியுறுத்திச் சொல்வார்கள். அது என்ன அப்பேர்ப்பட்ட கருத்து? நவீன நாகரிகத்தில் இன்னும் கொஞ்சம் பொதுநல நோக்கம் தேவை, என்பது சோரோகின்னின் கண்ணோட்டம். இதயத்தில் இன்னும் கொஞ்ச அன்பு அடுத்தவர்களுக்காக இருந்தால், நவீன யுகத்தின் மானுடப் பிரச்னைகள் பலவும் தீர்ந்துவிடும் என்பது ரஸலின் அபிப்ராயம். கூர்ந்து நோக்கினால், இதுவே பகவத் கீதையின் (மொத்தமாக, சனாதன தர்மத்தின் என்றுகூடச் சொல்லிவிடலாம்) மையக் கருத்தும் ஆகும்.

நாம் செய்யும் செயல்களின் பலன் பலருக்கும் சேர வேண்டும் என்பதையும், செய்யும் செயல்களின் பலன் தனக்காக இருக்கக் கூடாது என்பதையும், மிகத் தெளிவாகவே கீதை உரைக்கும். பலன்களைத் தியாகம் செய்யச் சொன்ன கிருஷ்ண பரமாத்மா, மூன்று செயல்களை யாரும் தியாகம் செய்யக்கூடாது என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார்.

"யக்ஞ தான தப:கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத்;
யக்ஞோ தானம் தபஸ்சைவ பாவநானி மனீஷிணாம்" என்கிறார்.

கல்வியின் பயன்!



பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மா மக்களையே இரு பிரிவாக்கினார். 'அவித்வான்' என்று ஒரு சாரார். 'வித்வான்' என்று இன்னொரு சாரார். தனக்கு வேண்டியவற்றைத் தேடி, நாடி, அவற்றுக்குப் பிரார்த்தனை செய்பவன் அவித்வான் ஆவான். ஆயின் பலர் வாழ, பிறர் வாழ வழிவகைகளைச் செய்பவன் வித்வான் ஆவான். 'லோக சங்கிரஹம்' (உலக நன்மை) - இதற்காக உழைப்பது வித்வத்.

நிறையப் படித்து, நிறையப் பாடல்களையும் ஸ்லோகங்களையும் மனப்பாடம் செய்து, ஸ்வாமி விக்ரகத்தைச் சுற்றி வந்து மந்திரங்களை மொணமொணப்பதைவிட, இறையனாரின் இருப்பிடங்களாக விளங்கும் மக்களுக்கு உதவுவது பெரிய கைங்கர்யம் என்றார் திருமூலர்.
"படமாடும் கோயில் பகவர்க்கு ஒன்று ஈயில், நடமாடும் கோயில் நம்பர்க்கு அதாகா..." ஆனால்....

"நடமாடும் கோயில் நம்பர்க்கொன்று ஈயில்,
படமாடும் கோயில் பகவர்க்க தாமே!"

யக்ஞம், தானம், தவம் இந்த மூன்றையும் விட்டுவிடக் கூடாது. இவற்றைச் செய்ய வேண்டும். யக்ஞம் செய்வதே பிறர்க்கு உதவுவதற்காக. தானம் என்பது தருவதன் பொருட்டே. தவம் என்பதோ தன்னைக் கட்டுப்படுத்துதல். இவை மூன்றும் ஒருவரைத் தூய்மைப்படுத்துமாம். இவை எல்லோருடனும் ஒருவரை ஐக்கியப்படுத்தும். ஐக்கியமானால், மக்கள் பணி மிளிரும். மகேசன் பணியாய் ஒளிரும்.

திருவீழிமிழலையில் பஞ்சம் வந்தது. ஊர் வாடியது. அருளாளர்களைக் காலத்தின் கொடுமை ஒன்றும் செய்யாது. ஆனால், மற்றவர்கள்? மக்களைக் காப்பாற்ற திருஞானசம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் படிக்காசு தருகிறார் பரமனார். இருபெரும் அருளாளர்களும் தினந்தோறும் காசை எடுத்துவந்து உணவு படைத்து எல்லோரையும் உண்பித்தார்கள். மக்கள் பணிக்காக மகேசனே படிக்காசு அளந்தாரோ!

திருவாரூர் பக்கத்தில் குண்டையூர் கிராமம். இவ்வூரைச் சேர்ந்த குண்டையூர்க் கிழார் என்னும் பெருமகனார், சுந்தரருக்குத் தவறாது நெல்லும் பருப்பும் அனுப்புவார். குண்டையூரில் வளம் சுருங்கிப் பஞ்சம் ஏற்பட்டபோது, சுந்தரருக்கு நெல்லும் பருப்பும் அனுப்பமுடியவில்லையே என ஏங்கினார் கிழார். உடனே அவருக்கு உதவும் பொருட்டு ஊரெலாம் நெல்லைக் கொட்டித் திருவிளையாடல் புரிந்தார் சிவப்பரம்பொருள். பிறர் நலம் பேணும் பண்புக்குப் பரமசிவனும் பங்கு கொண்டாரோ!

பண்டைய கோவில்கள் பண்பாட்டுத் தலங்களாக மாத்திரமல்லாமல், மனிதர்களின் வாழ்க்கைத்தலங்களாகவும் விளங்கின. மடப்பள்ளிகள் உணவுக் கூடங்கள், மண்டபங்கள், கல்விக் கூடங்கள். சிற்பமும் சித்திரமும் கலைக் கூடங்கள். பிரச்னைகள் ஏற்பட்டபோது, இறைவனின் ஆலயங்களே மனிதர்களைக் காப்பாற்றும் உறைவிடங்களும் ஆயின.

ஆக்கூர் என்னும் சிற்றூர். மயிலாடுதுறைக்கு அண்மையில் உள்ள ஊர். இங்கிருக்கும் இறையனாருக்குத் தான் தோன்றியப்பர் என்று திருநாமம். இவருக்கே இன்னொரு பெயரும் உண்டு - ஆயிரத்தில் ஒருவர். இதற்கு ஸ்வாரசியமான ஒரு வரலாறும் உண்டு. இந்த ஊரை ஆண்ட அரசன் ஒருமுறை ஆயிரம் பேருக்கு அன்னமிடுவது என்று விரதம் பூண்டானாம். பற்பல ஊர்களிலிருந்து வந்தவர்களை இலையில் அமர்த்தியபின் பார்த்தால், ஒரு இலைக்கு ஆள் குறைந்ததாம். தவித்துப் போன அரசன் திக்குமுக்காட... புதியதாய், திடீரென்று ஒருவர் வந்து இலையில் உட்கார்ந்தாராம். எல்லோரும் உண்டு முடித்தபின், இவர் யாரென்று தெரியாத அரசன், 'ஐயா, தாங்கள் யார்? எந்த ஊர்?', என்று வினவ... வந்தவர் பதில் சொன்னாராம். 'கஸ்யபுரம்' கஸ்ய என்றால் வடமொழியில் 'யாருடைய' என்று பொருள். கஸ்யபுரம் - யாருடைய ஊர்? பதில் சொல்லிவிட்டு மறைந்துவிட்டாராம். ஆயிரத்தில் ஒருவராக இறையனாரே வந்ததால், அவருக்கு ஆயிரத்தில் ஒருவர் என்றே திருநாமம்.

இந்தச் சம்பவம் சொல்லும் சங்கதி என்ன? மக்கள் பணியை நிறைவேற்ற மகேசனே ஓடோடி வந்திருக்கிறார்!

(தொடரும்)



''தேவலோகத்தில் நடைபெற்ற மாறுவேடப் போட்டியில் எமதர்மன் முதல் பரிசைத் தட்டிச் சென்று விட்டாராம்!''

''அப்படியென்ன வேடம் தரித்தாராம்?''

''டாக்டர் வேஷமாம்!''

– ஜி. சுந்தரராஜன்

கோவில்பட்டி வீரலட்சுமி

கையில் இரத்தம் சொட்டும் வீச்சரிவாள்! கண்களில் தெறிக்கும் கனல்! இரவிக்கை அணியாத சிம்ரன்! சுவரொட்டியைப் பார்த்த மாத்திரத்தில், கால இயந்திரத்தில் கூட்டிப் போய், சுதந்திரத்துக்கு முந்தைய கோவில்பட்டியில் இறக்கி விடப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பைத் தூண்டி விடுகிறது.

படம் தொடங்கிய பத்தாவது நிமிடம், வரலாற்றின் தீராத பக்கங்களில் வடுவாகிப் போன, ஆண்டான் அடிமைக் கலாசாரத்தைப் பின்னணியாக வைத்துக் கொண்டு, ஒடுக்குமுறையிலிருந்து உயிர்த்தெழும் வீராங்கனையாக சிம்ரனை உற்பத்தி செய்யப் போகிறார் இயக்குனர் என்பது பிடிபட்டுவிட படம் வேகமெடுக்கிறது.

சும்மா சொல்லக் கூடாது சிம்ரனை!

தமது கவர்ச்சி முத்திரையைச் சுத்தமாய்த் துடைத்துப் போட்டுவிட்டு, தம்மை வீரலட்சுமி பாத்திரமாக வரித்துக் கொள்ள உழைத்திருப்பது, ஒவ்வொரு ஃபிரேமிலும் அழுத்தமாய்ப் பதிந்திருக்கிறது. சிலம்பம் சுழற்றுகிற நேர்த்தியும், துப்பாக்கி பிடிக்கிற லாகவமும் ஓ.கே! ஆனால் சிம்ரனுக்கு இருக்கும் சின்சியாரிட்டியில் இயக்குனருக்கு இருபது சதவிகிதம் கூட இல்லை என்பது வெளிப்படை. காரணம், பாண்டிட் குயின், சிவலேப்பேரி பாண்டி, மலையூர் மம்பட்டியான், ஜோன் ஆல்ப் ஆர்க் என்று சிம்ரனின் பாத்திரப் படைப்புக்கு அவ்வப்போது கொஞ்சம் பழைய படங்களிலிருந்து வண்ணமும், வர்ணமும் பூசி விடுகிறார். தவிர தணிக்கைக் குழுவுக்குப் பயந்து, தற்போதைய மினி பஸ், மகேந்திரா வேன், அம்பாசிடர்களைக் காட்டி, அநியாயத்துக்கு 2003-ல் கதை நடப்பதாக பின்புலத்தை அமைத்திருப்பது நெருடுகிறது.

சிம்ரனுக்கு அடுத்த நிலையில் அவரது தந்தையாக அலெக்ஸும், கணவராக சோனுவும் குறை சொல்ல முடியாத நடிப்பால், தத்தமது பாத்திரங்களுக்கு மரியாதை செய்திருக்கிறார்கள்.

“நீ ஒரு வார்த்தை சொல்லியிருந்தா வெஷத்தை நானே குடிச்சிருப்பேனே! வீரலட்சுமி உடம்பை வெஷம் திங்கலாமா?” என்று கேட்டு கணவரின் கையில் வீச்சரிவாளைக் கொடுத்து, வீர மரணத்தை சிம்ரன் இறைஞ்சும் இறுதிக் காட்சி விறுவிறுப்பான திரைக்கதைக்கு முத்தாய்ப்பாக அமைந்துவிடுகிறது.

ஒற்றைக் குவளை முறையெல்லாம் அங்காங்கே இன்றும் இருக்கத்தானே செய்கிறது என்று சப்பைக்கட்டு கட்டினாலும், காலம் தாழ்ந்து சொல்லப்பட்டிருக்கும் பீரியட் மெசேஜ் ஃபார்முலா என்பதால், வீரலட்சுமியின் அரிவாளில் கனை குறைந்து, இரத்தக் கறை (வன்முறை) கூடிவிட்டிருக்கிறது.

\- விஷுவல்தாசன்

• ஆவரெஜ்





* நேஷனல் டயட் லைப்ரரி

பாதாள சொர்க்கம்!



* செய்கன் குகைப்பாதை

ஜப்பானில் நிலத்துக்குக் கீழே நிறைய விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு வேறு வழியில்லை!

நிலப்பகுதியோடு ஒப்பிட்டால் ஜப்பானின் மக்கள் தொகை மிக அதிகம். எனவே, எழுபதுகளிலேயே அங்கு நீண்ட சுரங்கப்பாதைகளை அமைக்கத் தொடங்கி விட்டார்கள். இன்றைய தேதிக்கு ஒவ்வொரு நாளும் சுமார் ஒரு கோடி நபர்கள் அந்த நாட்டில் சுரங்கப் பாதையைப் பயன்படுத்துகிறார்கள். ஆசியாவிலேயே முதல் சுரங்கப் பாதை கட்டப்பட்ட நாடு ஜப்பான்தான். அந்தப் பெருமை கிடைத்தது எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பே!



* சுரங்கப்பாதை ரயில்

ஒரு பக்கம் மிக உயரமாக எழுந்துள்ள கட்டடங்கள், மறுபுறம் ஆழத்தில் நீளமாகச் செல்லும் சுரங்கப்பாதைகள், என்று இரண்டு வழிகளிலுமே ஜப்பான் தன் நிலபற்றாக் குறையைச் சமாளித்து வருகிறது.

தலைநகரான டோக்கியோவில் மட்டும் பதிமூன்று சுரங்கப்பாதைகள் உள்ளன. இதென்ன பிரமாதம் என்று கூறுபவர்களுக்கு ஒரு கூடுதல் தகவல் - இவற்றின் மொத்த நீளம் 286 கிலோ மீட்டரைவிட அதிகம்.

ஜப்பானில் உள்ள எந்த நகரத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கே குறைந்தது நீளமான ஒரு சுரங்கப்பாதையாவது இருக்கும். அவற்றுள் சிலவற்றில் மிகவும் பிஸியான ஷாப்பிங் வளாகங்கள் இருக்கும்.

சுரங்கப்பாதையில் உள்ள கடைத் தெரு வளாகங்களைக் கவர்ச்சிகரமான தாக்க நீரூற்றுகள், மக்கள் ஓய்வெடுக்கத் தகுந்த இருக்கைகள் என்று பல வசதிகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஒஸாகா நகரில் உள்ள ஒரு சுரங்கப் பாதையிலிருந்து எழும் நீரூற்று தரைப் பகுதியைத் தொடும்போது, ஒரு பெரும் வானவில்லைப் போல காட்சி தருகிறது. சுற்றுலாப் பயணிகளின் கண்களுக்கு இது ஒரு பெரும் விருந்து.

சில சுரங்கப்பாதைகளில் உள்ள மின் விளக்குகளுக்கு 'இயற்கையான' வர்ணம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது இரவில் கூட சூரிய ஒளி அங்கு சிந்துவதைப் போல் ஒரு தோற்றம். கூடிய சீக்கிரமே தென்றல், இயற்கை நறுமணங்கள் என்று பலவித இயல்பான சூழல்களை சுரங்கப்பாதைகளில் அறிமுகப்படுத்தப் போகிறார்களாம்.

நிறைய சுரங்கப்பாதைகள் இருப்பதால் தங்களுக்கு வேண்டிய பகுதிக்கு மிக விரைவாக மக்களால் செல்ல முடிகிறது. ஒரு சுரங்கப்பாதையிலிருந்து இன்னொரு சுரங்கப்பாதைக்கு வழி இருப்பதால், நகரின் பல்வேறு பகுதிகளை சுரங்கப்பாதையின் மூலமே கடந்துவிட முடிகிறது. போக்கு வரத்துத் தொல்லை இல்லை என்பது கூடுதல் சௌகரியம்.

ஏதோ நகரத்துக்குள்தான் சுரங்கப் பாதை செல்கிறது என்பதில்லை. செய்கன் டனல் என்ற குகைப்பாதை ஹொக்கைடோ, ஹோன்ஷு ஆகிய இரு தீவுகளையும் இணைக்கிறது. 53.85 கிலோ மீட்டர் நீளம் கொண்ட இதுவே உலகின் மிக நீளமான குகைப்பாதை. கடலுக்கு அடியில் கட்டப் பட்டது என்பதால், சுற்றுலாப் பயணிகளும் இதைப் பார்க்க மறப்பதில்லை.

அவர்களை மேலும் பிரமிக்க வைக்கும் படி "ஒரு சிறு நாணயத்தின் மீது பூமி செலுத் தும் அழுத்தம் நூறு கிலோகிராம். அந்த அழுத்தத்தை ஜெயித்து, இரு முனைகளிலிருந் தும் ஒரே சமயத்தில் பொறியியல் வல்லுனர் கள் இந்த குகைப் பாதையை உருவாக்கத் தொடங்கியது கண் கொள்ளாக்காட்சி" என்று வர்ணித்துத் தள்ளுகிறார்கள் வழி காட்டிகள்.



• மியூஸியம்

நீளமான சுரங்கப்பாதைகளில் மக்கள் சந்திக்கும் பெரிய அவதி அங்கு காற்று எளி தாக நுழையாததுதான். இதைச் சரி செய்ய, முன்னேறிய தொழில் நுட்பத்தைத் தடை யில்லாமல் பயன்படுத்துகிறார்கள் ஜப்பானியர்கள். இதற்காக உலகிலிருந்து பல வல்லுனர்களின் ஆலோசனைகளைக் கேட்க அவர்கள் தயங்குவதே இல்லை.

கண்டா ஆறு டோக்கியோவின் நடுப் பகுதியில் மேற்கு கிழக்காக ஓடுகிறது. மொத்த நீளமே இருபத்தைந்து கிலோ மீட்டர்தான் என்பதால் இதை ஒரு சிறிய நதி என்றே கூறலாம். ஆனால் அடிக் கடி உடைப்பெடுத்துக் கொள்ளும் குணம் கொண்டது இது. இந்த வெள் ளத்தின் காரணமாக நகர மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளானார்

கள். இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் விதமாக ஒரு பெரிய சுரங்கப்பாதையைக் கட்டினார்கள். மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் ஆற்றங்கரைகளை அகலப்படுத்துவது கஷ்டம். ஆனால் ஆழமாக ஒரு சுரங்கம் வெட்டி, அதில் கரையை மீறும் நீரை, சேமிப்பது என்பது அவர்களைப் பொறுத்தவரை சுலபம், புத்திசாலித்தனம்.

1973ல் பெட்ரோலியத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, வெளிநாடுகளையே பெரிதும் நம்பியிருந்த ஜப்பான் போன்ற நாடுகள் அனுபவித்த இன்னல்கள் கொஞ்சம் அல்ல. எனவே வருங்காலத்தில் பெட்ரோலை பெருமளவில் சேமித்து வைக்க ஏதாவது வழி செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தது அரசாங்கம்.

இன்றைக்கு ஜப்பானில் உள்ள பன்னிரண்டு பகுதிகளில் மொத்தம் ஐந்து கோடி கிலோ லிட்டர் பெட்ரோலைச் சேமிக்க ஏற்பாடுகளைச் செய்துவிட்டது ஜப்பான் அரசு. இதில் குஷிகினோ என்ற பகுதியில் நிலத்திலிருந்து நாற்பத்தியிரண்டு மீட்டர் கீழே சேமிக்கப்படுகிறது பெட்ரோல். இவ்வளவு கீழ்ப்பகுதியில் பெட்ரோலைச் சேமிப்பதில் (ஒரே) ஒரு பலன் உண்டு. அங்கு இயற்கையாகவே ஒன்பது டிகிரி சென்ட்டிகிரேட் வெப்பம் நிலவுவதால், பெட்ரோலை சேமிக்கத் தேவைப்படும் இந்த வெப்ப நிலையை, செயற்கையாக உருவாக்கத் தேவையில்லை.



• எஸ்கலேட்டர் வசதியுடன்...

டோக்கியோவில் உள்ள ஒரு பிரபல நூலகம் 'நேஷனல் டயட் லைப்ரரி' என்பது. எழுபத்தைந்து லட்சத்தைத் தாண்டுகிறது இங்குள்ள புத்தகங்களின் எண்ணிக்கை. தவிர, ஆண்டுதோறும் ஒரு லட்சம் புத்தகங்களை இங்கு வாங்கித் தள்ளுகிறார்கள். இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இந்தக் கட்டடத்தின் கீழ்ப்பகுதி நிலத்திலிருந்து முப்பது மீட்டர் கீழே அமைந்துள்ளது. இங்குள்ள வெப்ப நிலை புத்தகங்களைப் பாதுகாப்பதற்கு மிக ஏற்றதாக இருக்கிறதாம்.

பிரபஞ்சம் என்றாவது அழியுமா? எல்லாப் பொருள்களிலும் உள்ள ப்ரோட்டான் என்ற பொருளுக்கு ஆயுள் உண்டா என்பதைப் பொறுத்தது இது. ப்ரோட்டானுக்கு அழிவு உண்டென்றால், பிரபஞ்சமும் என்றோ ஒரு நாள் அழிந்துவிடுமென்றுதான் அர்த்தம். அதற்கான ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறார்கள் ஜப்பானில். இந்த ஆராய்ச்சியை நிலத்திற்கு மேல் நடத்தினால், கதிரியக்கத்தால் ஆராய்ச்சி நிலையத்தில் இலேசான ஒலி வரும். அதனால் ஆயிரம் மீட்டருக்குக் கீழே இந்த ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறார்கள்.

டோக்கியோவின் வட பகுதியில் உள்ள காண்டோ பகுதியில் உள்ள ஒரு சுரங்கப் பாதை மிகவும் பிரபலமாகி வருகிறது. சொல்லப் போனால் ஒரு பாதையாக எண்ணி உருவாக்கப்பட்டதல்ல இது. இங்குள்ள ஒரு வகைக் கல் அஸ்திவாரமாகப் பயன்பட மிகவும் ஏற்றது என்பதால், அதைத் தோண்டி எடுப்பதற்காக அமைக்கப்பட்ட சுரங்க வெளி இது. இடையே சிறிது காலம் மூடப்பட்டிருந்த இச் சுரங்கம், இப்போது அருங்காட்சியகம் என்ற பெயரில் திறக்கப்பட்டிருக்கிறது. அதாவது வித்தியாசமான அழகான கற்கள் இயற்கையாகவே அமைந்த மியூசியம்! இங்கு ஒரு கலைக் கண்காட்சியும் நிரந்தரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. சினிமா மற்றும் சின்னத்திரை படப்பிடிப்புகளையும் இங்கு அனுமதிக்கிறார்கள்.

- ஜி.எஸ்.எஸ்.

காட்சி: 44

மதியம்/வீடு

மதிய நேரம். சமையல் வேலைகளை முடித்து, ஏதோ ஒரு பத்திரிகையைப் படித்துக் கொண்டிருக்கிறாள் சரோஜா. கீதா, வெளியில் போயிருக்கும் நேரம். கீதாவின் அப்பா, உறக்கத்தில் இருக்கிறார். அழைப்பு மணி ஒலிக்கும் சப்தம் கேட்டு, சரோஜா எழுந்து சென்று கதவைத் திறக்கிறாள். ரேணுகா நிற்கிறாள்.

ரேணுகா: சரோஜாங்கிறது...?

சரோஜா: நான்தான். நீங்க...?

ரேணுகா: ரேணுகா... உங்களுக்கும் சேது அண்ணனுக்கும் பிரச்னை ஏற்படுத்தின அதே ரேணுகா. *(என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விக்கித்துப் போய் நிற்கிறாள், சரோஜா.)* நான் உள்ளே வரலாமா?

சரோஜா: வாங்க.

(வரவேற்பறையில் அமர்ந்து கொள்கிறாள். அவள் முன், என்ன செய்வது என்ற சிந்தனையில் நின்றபடி இருக்கிறாள் சரோஜா.)

ரேணுகா: உட்காருங்க சரோஜா... *(தயக்கமுடன் அவள் எதிரில் அமர்கிறாள், சரோஜா)* ரொம்பக் குழம்பிப் போயிட்டீங்க. இவள்கிட்ட என்ன பேசறது, எப்படி நடந்துக்கிறதுன்னு உங்களுக்குக் குழப்பம் இல்லையா? கவலையே படாதீங்க சரோஜா. உங்க கணவர் சேது, என்னை அக்கான்னு தான் கூப்பிடுவார். நான் அவரைத் தம்பியாத்தான் நினைச்சுப் பழகறேன். பல சமயங்கள்ளே எனக்கு அவர் உதவி இருக்கார். கையில, காலணா இருக்காது. யாராவது போலீஸ்காரர், அந்த சமயம் பார்த்து மாமூல் கேட்பார். ஏதோ கொடுத்து வச்சது மாதிரி கேட்பாங்க, போலீஸ். கொடுக்கலைன்னா ஆத்திரம் வரும். எதையாவது காரணம் சொல்லி, நான் நடுரோட்டுல நின்னுகிட்டு, போற வர்றவங்களைக் கையைப் பிடிச்சு இழுத்தேன்னு 'கேஸ்' போடுவாங்க, கண்ணியமான காவலர்கள். கோர்ட்டுல கொண்டு போயி 'நியூசன்ஸ்' கேஸ்னு சொல்லுவாங்க. அவங்க, அபராதம் போடுவாங்க. பண்பாட்டைக் காப்பாத்தற, நம்ம பத்திரிகைக்காரங்க, விபசார வழக்கில் அழகி கைதுன்னு செய்தி போட்டு, விற்றுப் பிழைப்பாங்க. அந்த மாதிரி சமயங்கள்ள சேது, உதவி இருக்கார். உங்கள மாதிரி இருக்கப் பட்டவங்க, எங்களைக் கேவலமா நினைக்கிறீங்க.

சரோஜா: நீங்க செய்யறது தப்பு இல்லையா?

ரேணுகா: சரின்னு நான் என்னைக்குமே சொன்னது இல்லை. சரோஜா. எனக்கும் மானம், அவமானம் எல்லாம் உண்டும்மா. எந்தப் பெண்ணாவது, வரம் வாங்கியா, அப்படியான வாழ்க்கை வாழ வர்றா? இல்லியே? அது, அவள் மேல திணிக்கப்பட்ட வாழ்க்கைம்மா. நானும் ஒருத்தனை நேசித்து அவன்கூட பட்டணத்துக்கு வந்தவ, உன்னை

14

பிரபஞ்சன்

மாதிரிதான். அந்த பேமானி என்னை இன்னொருத்தன்கிட்ட வித்துட்டு வண்டி ஏறிட்டான். அவன்கிட்ட இருந்து, தப்பிக்கவே இத்தனைக் காலம் ஆச்சு. இப்போ, ரூளை ரங்கனாதன்கிற பெரிய புள்ளியோடு, நிரந்தரமா இருக்கேன். அவனும் பெரிய யோக்யன் இல்லை. ஓடற வரைக்கும் வண்டி ஓடட்டும். சேது, ரொம்ப நல்ல மனுஷன். என்னாலதான் உங்க கல்யாணம் தள்ளிப் போச்சுன்னு சேதுவும் சொன்னார். கண்ணனும் சொன்னார். எனக்கு ரொம்ப வருத்தம். உங்க அப்பா கிட்ட, கிருஷ்ணவேணி அக்காவைப் பேசச் சொன்னேன்.

சரோஜா: அவங்க யாரு?

ரேணுகா: இப்போ உங்க அப்பா, சேர்த்துக்கிட்டவங்க.

சரோஜா: ஓ...

ரேணுகா: ஒரு விஷயத்தை நீங்க புரிஞ்சுக்கணும் சரோஜா. சேதுவோட சம்சாரம் நீங்க. இந்த உடம்பில உசுரு இருக்கிற வரைக்கும், என்னால, ஏதாவது உபகாரம் உங்களுக்கு

நடக்குமே தவிர, ஒருநாளும் உபத்திரவம் வராது. நான் சொல்ல வந்ததைச் சொல் விடறேன். வீடு தேடிக்கிட்டு இருக்கிறதா. கேள்விப்பட்டேன்.. கண்ணன் தான் சொன்னாரு... மைலாப்பூர்ல,



கோயிலுக்குப் பக்கத்துல, சித்திரைக்குளத்து தெருவுக்குப் பக்கத்துல, அநுமார் கோவில் நாலாவது வீடு, உங்களுக்காக இருக்கு. சேதுகிட்ட சொல்லுங்க. இந்தாங்க, சாவி.

(சரோஜா தயங்குகிறாள்)

வாங்கிக்குங்க. வாங்கலைன்னா, சேது கோவிச்சுக்கும். நாளைக்காலைலே ஒன்பது பத்தரை நல்ல நேரம். வந்து வீட்டைப் பாருங்க. பிடிச்சிருந்தா, வர்ற வெள்ளிக் கிழமை பால் காய்ச்சலாம். நான், நாளைக்கு உங்களுக்காகக் காத்துகிட்டு இருப்பேன். ஞாபகம் இருக்கட்டும். ஒன்பது

பத்தரை. நான் வர்றேன்...

(ரேணுகா எழுகிறாள். சரோஜாவும் எழுகிறாள். இதன் ஊடாக, மனமாற்றத்துக் குட்பட்டிருக்கிறாள் சரோஜா.)

சரோஜா: சாப்பிட்டுப் போலாமே...

ரேணுகா: சாப்பிட்டுத்தான் புறப்பட்டேன்.

சரோஜா: காபியாவது...

ரேணுகா: *(யோசித்தபடி)* சரி கொடுங்க.

(சரோஜா உள்ளே போகிறாள்)

காட்சி: 45

மொட்டை மாடி.. மாலை மங்கி நிலவு வெளிப்படும் நேரம்.

பாத்திரங்கள்: அம்மா, சுசீலா.

காட்சி தொடங்கும்போது, அம்மா தீவிரமாகச் சிந்தனையிலிருந்து தலையை நிமிர்த்திப் பேசுகிறாள்.

அம்மா: நீ என்ன நினைக்கிறே, சுசீலா?

சுசீலா: எதைப் பத்திம்மா?

அம்மா: இந்த கீதாவைப் பத்திதான்.

சுசீலா: ரொம்ப நல்ல பெண். புத்திசாலி. கத்தியோட கூரிய பக்கம் மாதிரி இருக்கா, எல்லா விஷயத்திலேயும்.

அம்மா: நல்லா சொல்லிட்ட. குடும்பம் எல்லாம் எப்படி?

சுசீலா: *(சிரித்தபடி)* நீங்க நினைக்கிற மாதிரி, அவங்க இருப்பாங்களான்னு தெரியலைம்மா.

அம்மா: அப்படீன்னா?

சுசீலா: ஆணும் பெண்ணும் பழகறது, அது மாதிரியான உறவுக்குத்தான்னு, இப்பல்லாம் சொல்ல முடியாதும்மா.

அம்மா: புரியுது. இவங்க எப்படி?

சுசீலா: அப்படிச் சொல்ல முடியலை. அதுக்கு நல்ல பிள்ளை, உங்க பையன். அந்தப் பொண்ணும், எரியிற சுடர் மாதிரி இருக்கா. இதுங்க, அது மாதிரியான உறவு எல்லாம், வச்சிருக்கும்னு தோணலை. அது மாதிரியான பிள்ளையைப் பெத்து வச்சிருக்கலையே, நீங்களும்.

அம்மா: *(பெருமிதம் தோன்ற..)* சரிதான்: ஆனா... இப்ப என் கவலையே வேற...

சுசீலா: என்னம்மா..?

அம்மா: நல்ல பெண்ணா, அவனுக்கு இஷ்டப்பட்டவளா, யாராவது இருந்தா, அவளையே கல்யாணம் பண்ணி வச்சிடலாமேன்னு தோணுது.

சுசீலா: இதெல்லாம், தானா கனியற சமாசாரம் இல்லையாம்மா?

அம்மா: சரிதான்.

சுசீலா: இப்பல்லாம் பிள்ளைகள், பெரியவங்க நினைக்கிறமாதிரி இல்லை. ரொம்ப ஒழுக்கமா, ரொம்ப நல்லவிதமா, ரொம்ப முன்னேறணும்கிற தாகத்தோடு இருக்காங்க. சினிமாவுலதான் காதல், கச்சடா, சண்டைன்னு காட்டறாங்க. பசங்க அப்படி இல்லை.

அம்மா: நீ இவங்களைக் கவனி. சிநேகிதமா இருந்தா நல்லது. வேறு மாதிரி இருந்தா சொல்லு, முடிச்சிடுவோம். நாமா, இருந்து கல்யாணம் பண்ணி வைப்போம்.

சுசீலா: உங்க பிள்ளை, மத்தவங்கக் கல்யாணத்தை நடத்தி வைக்க அலையறான். உலகமே மாறணும்னு பேசறான். இது மாதிரி சமாசாரம் எல்லாம் தெரிஞ்சவனாகவே தெரியலை. மத்தவங்க சந்தோஷம்தான் அவன் சந்தோஷம்.

அம்மா: *(நெகிழ்ச்சியுடன்)* அது அவன் அப்பா, அவனுக்குக் கொடுத்த சொத்து, சுசீலா. இப்ப, காலணாவுக்குக்கூட அவனுக்கு வேற சொத்து இல்லாமப் போகுது.

காட்சி: 46

சரியான மதிய நேரம்/வீடு

பாத்திரங்கள்: கீதா, கண்ணனின் அம்மா கௌரி, சுசீலா

மதிய உணவை முடித்து, சாவகாசமாகப் பத்திரிகை ஒன்றைப் புரட்டிப் படித்துக் கொண்டிருக்கிறார், கௌரி அம்மாள். கண்ணனின் ஒற்றைக் கட்டிலில் படுத்துக் கொண்டிருக்கிறார். வாசல் பக்கம் தலை வைத்துப் படுத்திருக்கிறார். ஏதோ நிழலாடுவதை உணர்கிறார். எழுந்து, பார்க்கிறார். கீதா வாசலில் நிற்கிறாள். அவள் கையில் சிறிய இனிப்புப் பாக்கெட். வந்தவளைப் பார்த்துப் புன்சிரிப்புடன் வரவேற்கிறார் கௌரி அம்மா.


கீதா: வணக்கம்மா... நான் கீதா. கண்ணனோட சிநேகிதி. சுசீலா அக்கா, மேலே நீங்க மட்டும்தான் இருக்கிறதா சொன்னாங்க. 'பெல்' அடிச்சா, நீங்க சிரமப்பட்டு எழுந்து வரவேண்டி இருக்கும். உங்களைச் சிரமப்படுத்த

''நடிகை நளினாஸ்ரீயோட அம்மாவுக்கு ஆனாலும் இந்த பந்தா ரொம்ப ஓவர்.''

''என்ன விஷயம்?''

''மகளோட 25-வது 'பர்த் டே' பார்ட்டில ''வாழ்த்த வயதில்லை, வணங்குகிறேன்''-னு சொல்லிட்டு உட்கார்ந்துட்டாங்க!''

- சீர்காழி வி. ரேவதி



விரும்பலை. பெல்லடிக்காம வந்ததுக்கு, அது தான் காரணம். மன்னிக்கணும்.

கௌரி: சேச்சே... உக்காரு... இவ்வளவு கரிசனமா, இத்தனை யோசிச்சிருக்கியே... கண்ணனும் கசிலாவும் அப்படிச் சொல்லி இருக்காங்க. உன்னைப் பத்தி...

கீதா: தப்பா ஒண்ணும் சொல்லலையே...

கௌரி: சொல்ல முடியுமா? வேலை தேடி அலையறேன்னு கண்ணன் சொன்னான். ஏதேனும் தகைஞ்சதா? நல்ல வேலையை அவனுக்கு வாங்கிக் கொடுத்திட்டு, நீ இப்படி அலையும்படியாயிடுச்சே. அவனுக்கு மனசு ரொம்ப உறுத்துது.

(எழுந்து சென்று பானைத் தண்ணீர் எடுத்து வந்து குடிக்கக் கொடுக்கிறாள். கீதா அதைப் பருகுகிறாள்...)

கீதா: என் வேலையை அவருக்குத் தரலையே... நானாதான் என் வேலையை விட்டுப் போயிட்டேன்.

கௌரி: சாப்பிட்டியோ? நான் இப்போ தான் முடிச்சேன். கசிலா உபயம். இங்க வந்தா, வேற எங்கேயும் சாப்பிடக் கூடாது, நான்.

கீதா: ரொம்ப நல்ல மனுஷி. நான் சாப்பிட்டுத்தான் புறப்பட்டேன்.

கௌரி: எனக்கு இன்னொரு பெண் அவ. என்ன சமையல்? வீட்டுல, சமையல், நீயா, அம்மாவா?

கீதா: எனக்கு அம்மா முகமே ஞாபகம் இலலேம்மா. எனக்கு மூணு வயசுல அம்மா காலமாயிட்டாங்க. அப்பா அம்மா கல்யாணப் போட்டோவிலதான் எனக்கு அம்மாவைத் தெரியும். மூக்குக்குக் கீழே புல்லாக்கு தொங்கற, கையில 'பஃப்' வச்ச ஜாக்கட் போட்டுக்கிட்டு, கழுத்துலே, கையில, புஜத்துல நூறு பவுன் நகை போட்டிருக்கிற அம்மா. கல்யாணத்துக்குப் பிறகு நாலாம் வருஷம் போயிட்டாங்க.

கௌரி: அடக் கடவுளே... ஏதேனும் உடம்புக்கு...?

கீதா: ஒண்ணும் இல்லையாம். இருமல், ஜுரம், மாதிரி எதுவும் இல்லை. ரொம்ப ஆரோக்யமான உடம்புன்னு அப்பா சொல்வாங்க. ஒரு நாள், சாயங்காலம், முதுகு வலிக்குதுன்னு சொல்லி இருக்காங்க. அந்த வலியோட, மறுநாள் இட்லிக்கு மாவு அரைச்சிருக்காங்க. ராத்திரிக்கான சோறு வடிச்சு, மதியம் குழம்பைச் சுட வைச்சு, பருப்புத் தொகையல் அம்மில அரைச்சிருக்காங்க. அப்பா, சாப்பிட உக்காரும்போது, அப்பளம் பொரிச்சிருக்காங்க. ராத்திரி சாமத்துல எழுந்து, தண்ணீர் குடிச்சுட்டுப் படுத்திருக் காங்க. காலையில கண் திறக்கலையாம்.

கௌரி: அடப் பாவமே! தெய்வத்துக்குச் சில சமயங்கள்ள, கண் அவிஞ்சு போயிடறது.

கீதா: புரியலை. நல்லவங்க எல்லாம் கஷ்டப்பட, அயோக்கியர்கள், கொள்ளைக்காரர்கள், திடகாத்திரமா சந்தோஷமா இருக்க என்ன காரணம்? கண்ணன் சொல்லுவார். வள்ளுவருக்கே புரியாத புதிரா இருந்திருக்கு, இது. பல்லக்கிலே போறவன் என்ன பண்ணான்? சுமக்கிறவன் என்ன பண்ணலை? போன பிறவியோட கர்மபலன்னா, அந்தப் பிறவியோட நினைவு, இப்போ இருந்தாத்தானே அது சாபம் அல்லது வரம்? எந்தத் தவறும் இல்லாமே, தெருவில போறவனைக் கூப்பிட்டுச் சும்மா ஆயிரம் தோப்புக் கரணம் போடுன்னு சொல்லற கதையால்ல இருக்கு?

(கௌரி அம்மாள் சிரித்துக் கொள்கிறாள். கண்ணாடி பிரேமைச் சுட்டு விரலால் மேலேற்றிக் கொண்டு, கீதாவைக் கூர்மையாக நோட்டம் விடுகிறாள்.)

கௌரி: வீட்டுல வேறு யார் இருக்காம்மா?

கீதா: அப்பா, நான். சமையல் எல்லாம் நான் தான். எனக்குச் சிரமம் தரக் கூடாதுன்னு, அப்பாவே காலைக் காபி போட்டுடுவாங்க. சமையல்கூட பண்ணிடுவாங்க... என்னைவிட அப்பா ரொம்ப நல்லா சமையல் பண்ணுவாங்க.

கௌரி: என்னமோ தெரியலை, கீதாம்மா. என்னதான் நாம மாஞ்சி மாஞ்சி சமையல் பண்ணினாலும், பேர் மட்டும் ஆம்பிளைக்குப் போகுது, பாரு. பீம பாகம், நள பாகம்னுதானே சொல்றாங்க.

கீதா: ஒரு பக்கம் அப்படி. ஆனா, வீட்டுக்குள்ளே சமைக்கிறது பொம்பளையா மட்டும்தான் இருக்கணும். என் ஆத்துக்காரி ரஸம் பண்ணினா, வாசம் மூணு ஊரைத் தூக்கும்னு சொன்னா, எந்த அசடும் மகிழ்ந்துடும்.

(கௌரி மகிழ்ச்சியுடன் சிரிக்கிறார்)

(தொடரும்)

'டேவிட் வாக்னர்' என்ற ஜெர்மன் விஞ்ஞானி, எலெக்ட்ரோ மேக்னடிக் ஃபீல்டு பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில், ஒரு விபத்தில் சிக்கி, அவரது முதுகெலும்பு உடைந்து போனது. ஏதேதோ வைத்தியம் செய்தும் சக்கர நாற்காலியில் முடங்கும் நிலைமை ஏற்பட்டது. மனம் தளராத டேவிட் வாக்னர், அளப்பரிய மகத்துவம் கொண்ட ஆராய்ச்சி அறிவைப் பயன்படுத்தி, தமக்குத் தாமே சிகிச்சை செய்ய முனைந்தார்.

இதற்கு அவர் உபயோகப்படுத்திய முக்கியப் பொருள் என்ன தெரியுமா? சிலிகான்! சிலிகாவின் சப் மாலிக்குலர் அமைப்பை, பதினான்கு நாட்கள் பதப்படுத்தும் முறையில், மாற்றியமைத்தால் அது எலெக்ட்ரோ



அங்கே சிலிகா! இங்கே ருத்ராட்சம்!

மேக்னடிக் எனர்ஜியை மிக எளிதில் கடத்தக்கூடியதாக உருவாகும், என்பதை அவர் ஏற்கெனவே அறிந்திருந்தார். அதை டேக்கியான் எனர்ஜியை உள்வாங்கி பரப்பும் சக்தி வாய்ந்ததாக மாற்றி, செயலிழந்த தமது முதுகு நரம்புகளுக்கு உயிரூட்ட முயற்சி செய்தார்.

டேவிட் வாக்னரின் நம்பிக்கை வீண் போகவில்லை. வலியும் நோயும் நாளடைவில் குணமாகி, முன்பிருந்ததைவிட ஆரோக்கியமாக நடமாட ஆரம்பித்துவிட்டார்.

இந்தச் சிகிச்சை முறையின் மற்ற சாத்தியக் கூறுகளை எல்லாம் ஆராய்ந்து பார்க்கும் நோக்கத்தில் 1991ல் Advance Tachyon Institute என்ற பெயரில் கலிஃபோர்னியாவில் மருத்துவ நிலையம் ஆரம்பித்தார். தற்போது டேக்கியான் சிகிச்சை முறை பிரபலமடைந்திருப்பதோடு உலகப் புகழ் பெற்ற மருத்துவமனைகளிலும் மாற்று மருத்துவ முறையாகச் செயல்படுத்தி பலன் கண்டு வருகிறார்கள்.

இனி சென்னைக்கு வருவோம். புகழ் பெற்ற வியாபாரக் குடும்பத்தில் பிறந்தவர் உமா ஸ்ரீராம். இவருடைய இரண்டாவது பிரசவத்தில் ஏற்பட்ட சிக்கலால், முதுகெலும்பில் கோளாறு ஏற்பட்டு, உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. சுவரைப் பிடித்துக் கொண்டு, மெள்ள ஊர்ந்து செல்ல வேண்டிய அளவுக்கு பலவீனமான நிலைமை. எந்த வைத்தியரும் பூரணமாக குணப்படுத்தாத நிலைமையில், வெறுப்புற்று நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் துபாயில் மருத்துவராகப் பணிபுரியும் உமாவின் சகோதரர் ரமேஷ், 'டேக்கியான் தெரபி' பற்றிச் சொல்லவே, உமா ஸ்ரீராம் அமெரிக்காவுக்குச் சென்று, முழுமையான குணம் அடைந்ததோடு, தாமும் இப்பயிற்சியைக் கற்றுத் தேர்ந்து திரும்பியிருக்கிறார்.

உமா ஸ்ரீராம் தற்போது, சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள பெட்டிகோலா டவர்ஸில் டேக்கியான் சிகிச்சை அளிக்கிறார் என்று அறிந்ததும், சென்று அவரைச் சந்தித்தோம்.

"டேக்கியான் என்பது ஒலியைவிட வேகமாகச் செல்லக்கூடிய பிரபஞ்ச சக்தி.

'டேக்கியான்' என்பதற்கு கிரேக்க மொழியில் 'அதிவேகம்' என்று பொருள்.

"நமது உடலில் ஏழு பிரதான சக்கரங்கள் சுழன்று கொண்டிருக்கின்றன என்பதை அறிவீர்கள். அவற்றில் ஏதாவது ஒன்று தடைப்பட்டால்கூட கோளாறு ஏற்பட்டு விடும். அந்த நேரத்தில் நோயாளியின் உடலில் எண்ணெய், தண்ணீர், கிரிஸ்டல், ருத்ராட்சம், கிளாஸ் செல், போன்றவற்றைப் பயன்படுத்தி டேக்கியான் சக்தியைப் பாய்ச்ச வேண்டும். பிரபஞ்சமெங்கும் பரவிக் கிடக்கும் டேக்கியான் சக்தியைத் திரட்டி, குவித்து, உடலுக்குள் பாய்ச்ச மிகச் சிறந்த ஆன்டெனாவாக இவை பயன்படுகின்றன. நோயின் தன்மைக்கு ஏற்ப, இவற்றைப் பயன்படுத்தும்போது, பிரதான சக்கரங்களின் சுழற்சி சீராகி, உடலும் உள்ளமும் சீரடைகிறது" என்கிறார் உமா ஸ்ரீராம்.

எந்தவிதமான நோய்கள் குணமாகின்றன?

"கழுத்து வலி, முதுகு வலி, தலைவலி போன்ற நாள்பட்ட வலிகள், மனரீதியான உபாதைகள், அலர்ஜி, ஆஸ்துமா, அல்சர், சோர்வு போன்ற வியாதிகளைச் சுலபமாகக் குணப்படுத்தலாம். ஆரம்பத்தில் என்னிடம் அடிப்படையாகக் கற்றுக் கொண்டுவிட்டு பிறகு வலி குறையக் குறைய, வீட்டிலிருந்து நீங்களே சுய சிகிச்சை செய்து முழு நிவாரணம் பெறலாம்" என்றவர், சமீபத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார்.

• உமா ஸ்ரீராம்



"'சாந்தி கோபாலன்' என்ற பத்திரிகையாளர் (எச்ஆர்டி டைம்ஸ்) என்னைப் பேட்டி காண வந்தார். முதலில் அவருக்கு நம்பிக்கையே ஏற்படவில்லை. அசுவாரசியமாகத்தான் காணப்பட்டார். பேச்சுவாக்கில் அவருடைய கணவருக்கு 'ஸ்லீப் ஆப்னியா' என்றொரு கோளாறு இருப்பதாகச் சொன்னார்.

தூக்கமின்மை, தூக்கத்தில் அலறியடித்துக் கொண்டு எழுவது, மூச்சு விட சிரமம், பயம், தலைவலி, கெட்ட கனவுகள் போன்றவை அந்த நோயின் அறிகுறிகள். 'சிபிஏபி' எனப்படும், மூளைக்குச் சீராக ஆக்ஸிஜன் பாய்ச்சும் கருவிகூட, அவருக்குப் பலனளிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

நான், சில டேக்கியான் கற்களைக் கொடுத்து, எப்படிப் பிரயோகிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தேன். சாந்தியின் கணவர், டேக்கியான் கற்களை, தொண்டை மற்றும் நெற்றியில் வைத்து, சில நிமிடங்கள் அமைதியாக இருந்திருக்கிறார். அன்று இரவு, அவருக்கு மூச்சுவிட சிரமம் ஏற்பட்டாலும், கெட்ட கனவுகள் வரவில்லை. இலேசாக நம்பிக்கை பிறந்ததும் தொடர்ந்து, பயன்படுத்த ஆரம்பித்தார். மறுவாரம் இன்னும் கொஞ்சம் முன்னேற்றம். மிகுந்த நம்பிக்கையோடு தொடர்ந்து சிகிச்சை எடுத்து வருகிறார்" என்றவர், "இப்போது என் கணவரின் வேதனை பாதியாகக் குறைந்துவிட்டது" என்று சாந்தி கோபாலன் எழுதியிருக்கும் பாராட்டையும் காண்பித்தார் உமா ஸ்ரீராம்.

டேக்கியான் சிகிச்சையோடு, யோகாவும் சேர்த்து கற்றுத் தருவதால், நிலையான ஆரோக்கியம் கிடைக்கிறதாம்.

"ருத்ராட்சம், ஸ்படிகமாலை, துளசிமணி, போன்றவற்றை ஞானிகள் அணிவது சன்னியாஸத்தின் அடையாளம் என்று மட்டுமே நினைக்கிறோம். டேக்கியான் எனர்ஜியை, உள்வாங்கி, எப்போதும் சார்ஜ்டாக இருப்பதற்கான அம்சங்களை இயற்கையாகவே இவை பெற்றுள்ளன என்பதுதான் உண்மை. எனவேதான், மகான்கள் தொட்டவுடன் நோய் குணமாகும் அதிசயம் எல்லாம் நடக்கிறது. இதெல்லாம் நம்ம ஊர் சிகிச்சை முறைதான். ஆனால் அது கடல் கடந்து அமெரிக்கா சென்று விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டு, நமக்கே நவீன சிகிச்சையாகத் திரும்பி வருகிறது..." என்கிறார் உமா ஸ்ரீராம்.



• டேக்கியான் சிகிச்சை

— டாலி

படங்கள்: ஸ்ரீஹரி

பிழைக்கும் வழி!

ஓர் ஊரில் ராம்சரண் என்று ஒருவன் இருந்தான்.

அவன் வேலை செய்வதும் இல்லை. உழைப்பதுமில்லை.

ஆனாலும் பிழைத்துக் கொண்டிருக்கிறான். இது மற்றவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. எனவே ஒருவன் அவனைப் பார்த்துக் கேட்டான்.

"ராம்சரண்! உனக்குப் படிப்பில்லை... வியாபாரம் செய்யப் போதிய பணமில்லை. உழைப்பதற்கு உறுதியான உடல் இல்லை. உன்னால் குடிப்பழக்கத்தையும் விட முடியவில்லை. எல்லா கெட்ட குணங்களும் உன்னிடம் இருக்கின்றன. அப்படி இருந்தும் நீ எப்படிப் பிழைக்கிறாய்?"

ராம்சரண் சொன்னான்:

"ரொம்ப சுலபம்... எல்லோருக்கும் உபதேசம் செய்கிறேன்!"

வேண்டுமானால் போய் உன் குடும்பத்தையேகூட அழைத்துக் கொண்டு வா... எல்லாருமாச் சேர்ந்து என் கொம்புலே உட்கார்ந்துக்குங்க! அதைப்பத்தி எனக்கென்ன கவலை?" என்றது காளை.

சுதந்திரம் என்றால் என்ன என்பதை நாம் அந்தக் காளையிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

அது எதையும் தேடிச் செல்லவில்லை. அது எதையும் விலக்கவுமில்லை. வருவதை அப்படியே ஏற்றுக் கொள்கிறது.


எதனாலும் பாதிக்கப்படவில்லை. பொறுத்துக் கொள்வது மட்டுமல்ல. பற்றற்று இருப்பதும் முக்கியம்.

நமக்குத் தேவை அதுதான்!

துள்ளி ஓடும் மான்!

ஒரு காடு. அங்கே ஒரு மான் இருந்தது.

கொம்பில் அமர்ந்த கொசு!



ஒரு கொசு பறந்து வந்தது.

ஒரு காளை மாட்டின் கொம்பின் மீது அது உட்கார்ந்தது.

நீண்ட நேரம் அப்படியே இருந்தது.

அதன் மனசுக்குள் ஓர் உறுத்தல்...

நாம ரொம்ப நேரமா இங்கேயே உட்கார்ந்திருக்கோமே... மாட்டுக்கு வலிக்காதா? அது தாங்குமா?

"ஏங்க... காளையாரே! இங்கே நான் ரொம்ப நேரமா உட்கார்ந்திருக்கேன்... உங்களுக்குச் சிரமமாயிருக்கும்... அதனாலே இதோ நான் புறப்பட்டுடறேன்!"

இதைக் கேட்டதும் காளைக்குச் சிரிப்பு வந்தது.

"கொசுவே! நீ போக வேண்டியதில்லை...

அது ஒருநாள் தன் குட்டியிடம் சொன்னது.

"மகனே! நாம் மானாகப் பிறந்ததற்குப் பெருமைப் படணும். இதோ என்னைப் பார். தலையிலே கொம்புகள், எவ்வளவு வலிமை பார்த்தாயா? ஒரு முட்டுதான்... மனுஷன் காலி!"


குட்டி தன் அப்பாவைப் பெருமையோடு நிமிர்ந்து பார்த்தது.

இந்த சமயத்தில்தான் அந்தச் சத்தம்.

சற்று தூரத்தில் ஒரு வேட்டைக்காரன் எழுப்பிய கொம்பொலி!

அவ்வளவுதான்!

எடுத்தது ஓட்டம். அப்பாவைத் தொடர்ந்து குட்டியும் பாய்ந்து ஓடியது.



பாதுகாப்பான ஓர் இடத்துக்கு இருவரும் போய்ச் சேர்ந்தார்கள். மூச்சு வாங்கியது.

குட்டி மான் கேட்டது.

"என்ன இது... அவ்வளவு துணிச்சலா பேசினே...? அப்புறம் இவ்வளவு வேகமாக ஓடி வர்றே?"

அப்பா மான் சொன்னது:

"மகனே! நான் பலசாலிங்கறது எனக்கு நல்லாத் தெரியுது! ஆனாலும் அந்த சத்தத்தைக் கேட்டா மட்டும், ஏதோ ஒண்ணு என்னை ஆட்டி வைக்குது. எனக்குப் பிடிக்குதோ இல்லையோ ஓட ஆரம்பிச்சுடறேன்!"

இது மானின் கதை அல்ல... மனிதனின் கதை!

பூமி விழுமா?

அது ஒரு பள்ளிக்கூடம்.

ஆசிரியர் புவியீர்ப்புச் சக்தி பற்றி பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார். முடிவில் மாணவர்களிடம் ஒரு கேள்வி கேட்டார்.

"பூமி ஏன் கீழே விழுவதில்லை!"

ஆளுக்கு ஒருவிதமாக பதில் சொன்னார்கள். ஒரு புத்திசாலி சிறுமி எழுந்தாள்.

"அது எங்கே சார் விழும்?" என்றாள்.

ஆசிரியர் திகைத்துப் போய் நின்றார். ஆனாலும் அதுதான் சரியான பதில்!

எல்லையற்ற அண்டவெளியில் எது மேல்புறம்? எது கீழ்ப்புறம்? அதில் மேலே கீழே என்பதெல்லாம் ஒன்றும் கிடையாது. அப்படி இருக்கும்போது "பூமி ஏன் கீழே விழுவதில்லை?" - என்ற கேள்வியே சரியில்லை!

ஆசிரியர் அந்தச் சிறுமியைப் பாராட்டினார்!

மத வழிபாடு

அமெரிக்கக் கப்பல் ஒன்று கடலில் மூழ்கிக் கொண்டிருந்தது.

கப்பலில் இருந்த மனிதர்களுக்குத் தப்ப முடியும் என்று தோன்றவில்லை.

நம்பிக்கை இழந்தார்கள்.

இறுதியாக ஆறுதலுக்காக மத வழிபாடு நடத்த அவர்கள் விரும்பினார்கள்.

அந்தக் கப்பலில் ஜோஷ் மாமா என்பவர் இருந்தார். ஆலயம் ஒன்றில் அவர் உயர் பதவியில் இருப்பவர்.

"மத சம்பந்தமாக ஏதாவது செய்யுங்களேன்!" என்று அவரிடம் எல்லாரும் வேண்டினார்கள். மதத்தைப் பற்றி அறிந்த பலரும் என்ன செய்வார்களோ அதையே அவரும் செய்தார்.

என்ன செய்தார் தெரியுமா?

தன் தொப்பியைக் கையில் எடுத்துக் கொண்டார். அதே இடத்தில் நன்கொடை வசூலிக்க ஆரம்பித்துவிட்டார்!

மதம் என்றால் இத்தகைய ஏதோ ஒன்று, என்றுதான் பலரும் நினைக்கின்றனர். ஆனால் உண்மையான மதம் இத்தகைய எதுவும் அல்ல.

இறைவனிடம் மனிதம் கொள்கின்ற



மாறாத உறவே மதம்!

'சிரிக்க சிந்திக்க விவேகானந்தரின் கதைகள்' - தென்கச்சி கோ. சுவாமிநாதன், வெளியீடு : ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 4, விலை ரூ. 25/-

நட்பு

எதிர்க்காற்றில் செம்மண் புழுதி, கலந்தடித்தது. ராமையா கண்களை மூடிக் கொண்டார். ஆனால் அந்த மணம் நாசிக்கு இதமாயிருந்தது. ஏர்பூட்டி நிலத்தை உழுகையில் இப்படித்தான் மணம் வீசும்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரிசல் கண்ட தரிசுகள். வரப்புகள் கூடக் காய்ந்து கிடந்தன.

முன்பெல்லாம் இப் பகுதி முழுவதும் பச்சைப் போர்வையை விரித்தாற் போல பசுமையாய்ப் பரந்து கிடக்கும். வருடம் முழுவதும் விவசாயம் நடக்கும். இப் பொழுது...?


''ராசிபுரம் ஒண்ணு கொடுங்க!'' - ராமையா ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினார்.

"இன்னும் இரண்டு ரூபா வேணும்!''

''மூணு ரூபா அம்பது காசுதானே தம்பி...?''

''என்ன பெரியவரே... நீங்க பஸ் ஏறி எத்தனை வருஷமாச்சி?'' கண்டக்டர் கிண்டலாகக் கேட்டாலும், நிஜம் அதுதான்.

ராமையா, பேருந்தில் பயணித்து இரண்டு வருடத்திற்கும் மேலாகியிருக்கும். அவர் செம்பள்ளியை விட்டு வெளியே போக நேர்வதே, எரு மற்றும் உரம் வாங்கத் தான். அதையும் மாட்டு வண்டி கட்டிக் கொண்டு நாமகிரிப்பேட்டைக்குப் போய் வாங்கி வந்துவிடுவார்.




மகள் செல்வராணி திருமணமாகி சேலத்தில் இருந்தவரையில், இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை போய்ப் பார்த்து விட்டு வருவார். மருமகனுக்கு பிலானிக்கு மாற்றல் கிடைத்துச் சென்றுவிட்ட பிறகு, வெளியூர்ப் பயணத்திற்கான சந்தர்ப்பமே ராமையாவிற்கு ஏற்படுவதில்லை.

இப்பொழுது ராமையா பேருந்து ஏறிப் போவது சங்கரனைச் சந்திக்க. சங்கரனை நினைக்கையிலேயே, அவரது மனசு வாய்க்கால் தண்ணீரில் கால் வைத்தது போலச் சிலிர்த்தது.

சங்கரன் பிறந்து, வளர்ந்ததும் செம்பள்ளி கிராமம்தான். ராமையாவும் சங்கரனும் பள்ளிப் பருவத்திலிருந்தே சிநேகிதம். இருவரையும் தனித்துப் பார்ப்பதே அரிது. எப்பொழுதும் ஒன்றாய்த்தான் இருப்பார்கள். காடு, கரை, தென்னந்தோப்பு என அவர்களின் பாதம் படாத இடம், பாவம் செய்த இடம்.

அப்பொழுது செம்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரைதான் இருந்தது. ராமையா அத்தோடு நின்று விட்டார். சங்கரன் மட்டும் நாமகிரிப்பேட்டை சென்று பியூசி வரை படித்துக் கல்லூரிக்கும் சென்றுவிட்டார். பட்டணத்தில் வேலையும் கிடைத்தது. மாதத்திற்கொரு முறை கிராமத்திற்கு வந்து விடுவார். அந்தச் சமயங்களில் ராமையாவுடன்தான் பொழுது கழியும்.

தமது தந்தையின் மரணத்திற்குப் பின் கிராமத்து நிலத்தை விற்று, தாயையும் அழைத்துச் சென்றுவிட்டார் சங்கரன்.



வாய்த்த மனைவி மிகப் பெரிய இடம். வேலையை விட்டுவிட்டு சொந்தமாய் பிஸினெஸ் தொடங்கினார். தொட்டதெல் லாம் பணமாய்க் கொட்டியது.

ராமையாவின் உலகம் இரண்டு ஏக்கர் நஞ்சை, ஏர் கலப்பையுடன் சுருங்கிப் போனது. தாராள விளைச்சல், பற்றாக் குறையில்லா ஜீவனம். அங்கம்மாளைத் திருமணம் செய்து, செல்வராணி பிறந்தாள். பெயர் சூட்டு விழாவுக்குச் சங்கரன் குடும்பத்தோடு வந்திருந்தார். குழந்தையின் கைகளுக்கு ஒரு ஜோடி கெட்டி வளையல், இடுப்புக்கு அரைஞாண் கயிறு, கால்களுக் குக் கொலுசு.

அந்தஸ்து வேறு பட்டாலும், மனசு வேறுபடாமல் இருக்கும் உயர்வைக் கண்டு கிராமமே ஆச்சரியப்பட்டு நின்றது.

மாதம் ஓரிருமுறையாவது சங்கரனிட மிருந்து கடிதம் வரும். அவரது நிலை உயர உயர, ராமையாவுக்குப் பெருமையாகத்தான் இருந்தது. காலம் மாறி வந்த சூழலில் விவ சாயம் என்பது சிரம ஜீவனமாகி, சமயங் களில் வயிற்றுப்பாட்டுக்கே தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையிலும் ராமையா, சங்கரன் மேல் பொறாமை கொண்டதில்லை. அது வேண்டும், இது வேண்டும் என கை நீட்டி எதுவும் கேட்டதில்லை. கேட்டு கொடுப்பது தான் நட்பா? நண்பனின் நிலைமையறிந்து சங்கரனே பலமுறை பல வழிகளில் உதவி செய்ய முனைந்திருக்கிறார். ஆனால் அவை எதையும் ஏற்றுக் கொள்ள ராமையா விழைந்ததில்லை.

மனம் நோகாமல் மறுத்து விடுவார்.

செல்வராணிக்குத் திருமணம் நிச்சய மானது. மாப்பிள்ளைக்கு அரசு உத்தி யோகம். பிக்கல் பிடுங்கல் இல்லை. எனவே தான், விரலுக்கு மீறின வீக்கம் என்றாலும் ராமையா ஒப்புக்கொண்டார். விவரமறிந்த சங்கரன் பெட்டி நிறைய, பணத்துடன் வந்து நின்றார். ஆனால் ராமையா தமது நிலத்தில் பாதியை விற்று, திருமணச் செலவை ஈடுகட்டுவதில் உறுதியாக நின்று விட்டார். சங்கரன் 'மொய்'யாக வைத்த கணிசமான பணத்தையும், அவரின் மூத்த மகன் ராகுலின் திருமணத்தின்பொழுது கூடுதலாகத் திருப்பி விட்டார்.

சமீபகாலமாக சங்கரனிடமிருந்து கடிதம் வருவதில்லை. 'பாவம். அவனுக்கிருக்கும் வேலையில் நேரமிருக்காது..' என ராமையா வும் அது குறித்து வருத்தம் கொள்வதில்லை.

மகள் செல்வராணிக்கு, சென்ற மாதம் பெண் குழந்தை பிறந்தது.

ஆடி முடிந்ததும் தாயையும், சேயை யும் செம்பள்ளிக்குக் கூட்டி வர வேண்டும்.

''இத்தனை வருஷங் கழிச்சி பேத்தி பொறந்திருக்கா... முதன் முதலா வீட்டுக்குக் கூட்டிட்டு வர்றப்ப கை, காலுக்கு ஏதாவது செஞ்சிப் போடணும்!'' என்றாள் அங்கம்மாள்.


"நீ சொல்றது வாஸ்தவம்தான். ஆனா, பத்தாயிரமாவது தேவைப்படுமே... எங்க போறது?"

"உங்க பால்ய சினேகிதர்கிட்ட கேளுங் களேன்."

"யாரு... சங்கரன்கிட்டயா?"

"ஆமா... நீங்க கேட்டா தர மாட்டாரா?"

என்ன சார். அந்த வீட்டில் 'நாய் ஜாக்கிரதை'ன்னு இரண்டு போர்டு தொங்குதே... அங்கே இரண்டு நாய்கள் இருக்கோ?



''எவ்வளவு வேணாலும் தருவான். அவன் கிட்டப் போய்... எப்படி?''

"இலவசமா வேண் டாம். கடனா கேட்டு வாங்கிட்டு வாங்க."

தினசரி நச்சரிப்புத் தாளாமலும், பல நாள் யோசனைக்குப் பிறகும் ராமையா இன்று கிளம்பிவிட்டார்.

கரூர் பேருந்து நிலையத்தில் இறங்கிய துமே ராமையாவுக்குச் சற்று மிரட்சியாக இருந்தது. சங்கரனின் அலுவலக முகவரி யைக் காட்டி ஆட்டோ ஒன்றில் போய்ச் சேர்ந்தார்.

தன்னிடமிருப்பதில் சற்று புதிய வெள்ளை வேட்டியைத்தான் கட்டிக் கொண்டு வந்திருந்தார். வாசற்படியில் மின்னிய சலவைக் கல்லோடு ஒப்பிடுகை யில், வேட்டி அழுக்கு போலத் தோன்றியது.

வரவேற்பறை இளைஞன் சுரத்தின்றிப் பார்த்தான்.

"என்ன வேணும் பெரியவரே?"

சங்கரனைப் பாக்கணும். இருக்கானா?"


தனது முதலாளியை ஒருமையில் அழைப்பவரைக் கண்டு கோபமுறுவதா, மரியாதை செலுத்துவதா எனப் புரியாமல் "உங்க பேர்?" என்றான்.

"ராமையா."

"ஒரு நிமிஷம் இருங்க..." இன்டர்காம் பட்டனை அழுத்தி விவரம் சொன்ன இரண்டாவது நிமிடம் சங்கரன், தட தடவென்று படியிறங்கி வந்தார். வந்தவர் ராமையாவை நெஞ்சோடு தழுவிக் கொண்டார்.

"வாடா... ரூமுக்குப் போலாம்!"

தங்களுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கும் முதலாளி, யாரோ ஒரு கிராமத்து மனிதரை, தாமே இறங்கி வந்து வாஞ்சையுடன் கட்டிப்பிடித்து, கை கோத்து அழைத்துச் செல்வதை அலுவலகமே வியந்து பார்த்தது.



- புளியரை கணேசன்

அறைக்குள் நுழைந்ததுமே தமது பி.ஏ.விடம் இரண்டு குளிர்பானம் கொண்டு வரச் சொன்னார் சங்கரன். சிறிது நேரத்திற்கு எந்தத் தொலைபேசி இணைப்பையும் தர வேண்டாம் என்றார்.

"நீ வந்திருக்கேன்னு தெரிஞ்சதும் அப்படியே சந்தோஷத்தில் திகைச்சிப் போயிட்டேன். பார்த்து எத்தனை வருஷமாச்சு, வீட்ல அங்கம்மா சௌக்கியமா?"

"ம்... நம்ம வீட்ல எல்லாரும் எப்படியிருக்காங்க?"

"எல்லாம் நல்லாயிருக்காங்க.... பசங்க ரெண்டு பேருமே குடும்பத்தோட அமெரிக்காவுக்குப் போயாச்சு. இங்க நான் ஒருத்தனே கம்பெனியைப் பார்த்துக்கறேன். அதனால்தான் ஊர்ப்பக்கமே வர முடியறதில்ல. லெட்டர் கூட எழுத நேரமில்ல... கோவிச்சிக்காதடா..."

"சேச்சே... உன்னைப் போய் நான் கோவிக்குவேனா?"

"செல்வராணி எப்படி இருக்கா?"

நல்லா இருக்கா. அவளுக்குப் பொம்பளைப் பிள்ளை பிறந்திருக்கு..."

"அப்படியா... ரொம்ப சந்தோஷம். எப்ப செம்பள்ளிக்குக் கூட்டிட்டு வரப் போறே?"

"ஆடி முடிஞ்சதும்."

"அப்ப எனக்குத் தகவல் கொடு. நானும் சுசிலாவும் அங்க வர்றோம்..."

ராமையா தலையசைத்தார். இதுதான் தமது தேவையைப் பற்றிப் பேச்செடுக்க சரியான தருணம் என அவர் உணர்ந்தார். ஆனால் வாயை விட்டு வார்த்தைகள் வெளியே வரவில்லை. புனிதமான நட்புக்கிடையே சிறு கீறல் விழுவதைக்கூட அவர் விரும்பவில்லை.

'ஏதாவது தேவையா?' என சங்கரனே வாய் விட்டுக் கேட்டால் தெரிவிக்கலாம் என எதிர்பார்த்தார். சங்கரன் அப்படி ஏதும் கேட்கவில்லை. பழைய நினைவுகளை அசை போடுவதில் மூழ்கிவிட்டார்.

ஆற்று வெள்ளத்தில் நீச்சலடித்தது, அடுத்தவர் தோட்டத்து மாமரத்தில் மாங்காய் பறித்துச் சாப்பிட்டது, தன்னந்தனியே ஒற்றை மாட்டு வண்டியை ஓட்டிச் சென்றது, பள்ளிக்கூடத்திற்கு 'கட்' அடித்துவிட்டு 'டூரிங்' கொட்டகைக்குப் போனது...

ராமையாவும் தாற்காலிகமாக தமது கவலையை ஒதுக்கிவிட்டு அசை போடலில் கலந்து கொண்டார். மனசு மகிழ்ந்தது.

சங்கரன் திடும்மென்று மீண்டு வந்து மணிக்கட்டைப் பார்த்தார்.

"பழைய கதையைப் பேசினா நேரம் போறதே தெரியாது... வா... வீட்டுக்குச் சாப்பிடப் போகலாம்!"

"அங்க போனா நேரமாயிடும்டா... ராத்திரிக்குள்ள திரும்பிடறதா அங்கம்மாகிட்ட சொல்லிட்டு வந்திருக்கேன். காத்துக்கிட்டிருப்பா..."

"நீ வந்துட்டுப் போனா சுசிலா ரொம்ப சந்தோஷப்படுவா..."

"அடுத்த தடவை வர்றேன்... கோவிச்சிக்க வேண்டாம்னு சொல்லு..."

"சரி... வா... ஹோட்டல்ல போய்ச் சாப்பிடலாம்!"

உயர்ரக மதிய சாப்பாடு. வயிறோடு மனதும் நிறைந்தாற் போலிருந்தது ராமையாவிற்கு.

"அப்ப நான் கிளம்பறேன்..."

"இவ்வளவு தூரம் வந்துட்டு உடனே ஓடறே..."

"உன்னைப் பாக்கணும்னு வந்தேன். பாத்தாச்சி... போதும்... "

"வா... பஸ் ஸ்டாண்ட்ல ட்ராப் பண்ணிடறேன்."

"உனக்கு ஆயிரத்தெட்டு வேலை இருக்கும்பா... நான் டவுன் பஸ்ல போய்க்கிறேன்... போ..."

"உன்னைக் கவனிக்கறதைவிட வேற என்ன எனக்கு முக்கியமான வேலை... ஒரு நிமிஷம் கார்ல உட்கார்... வர்றேன்..."

ரெஸ்டாரெண்ட்டுக்குள் போய் வந்தார் சங்கரன். கையில் பிளாஸ்டிக் பை.

"பாதுஷா... அங்கம்மாவுக்கு ரொம்பப் பிடிக்குமே... கொண்டு போய்க் குடு..."

அங்கம்மாள் காத்திருந்தாள்.

ராமையாவைக் கண்டதும் "என்னாச்சு... அவரைப் பாத்தீங்களா?" என்றாள்.

"ம்!"

"பணம் கிடைச்சதா?"

"இல்ல!"

"ஏன்?"

"நான் கேக்கல..."

"கேக்கலியா...? பின்னே எதுக்கு இவ்ளோ தூரம் போனீங்க?"

"போனேன். அவன்கிட்ட கேக்க ஏனோ வாய் வர்ல"

அங்கம்மாளுக்கு முகம் சுண்டிவிட்டது.

"உனக்குப் பிடிக்குமேன்னு பாதுஷா வாங்கிக் குடுத்தான்..."

பையை வாங்கிக் கொண்டு, "சாப்பிட வாங்க" என்றாள்.

"பசிக்கல... மதியம் சாப்பிட்டதே வயிறு 'திம்'முனு இருக்கு..."

ராமையா துணி மாற்றிக் கொண்டு திண்ணையில் சென்று அமர்ந்தார். குளிர்க்காற்று இதமாக வீசியது. வானில் நட்சத்திரங்களின் மினுக்கல்.

கண்மூடி சுவரோடு சாய்ந்து கொண்டார்.

வேண்டிச் சென்ற காரியம் நிறைவேறவில்லையென்றாலும் நண்பனைச் சந்தித்து வந்ததில் நெஞ்சு நிறைய நிறைவு, திருப்தி.

"ஏங்க... இங்க வாங்க..."

மனைவியின் குரலில் கலைந்து உள்ளே சென்றார்.

"எதுக்கு எங்கிட்ட பொய் சொன்னீங்க?"

"பொய்யா... என்ன சொல்றே?"

"இதைப் பாருங்க... பணம் வாங்கிட்டு வர்லேன்னு சொன்னது பொய்யில்லையா...?"

அங்கம்மாள் அந்த பிளாஸ்டிக் பையைப் பிரித்துக் காட்டினாள். உள்ளே நெய் மணக்கும் இனிப்புப் பொட்டலத்துடன் வீற்றிருந்தது - புத்தம்புது வாசனை மாறாத நூறு ரூபாய்க்கட்டு ஒன்று! ●

முத்தம்!



'**ஒ**ரு கன்னத்தில் அடித்தால்
மறு கன்னத்தைக் காட்டு'
என்று சொன்ன ஏசுவின்
போதனையைச் சிரமேற்கொண்டு
இந்தப் பக்கம்
அந்தப் பக்கம் காட்டுகிறேன்.
வலி தெரியாமல் அடிப்பதற்கு
எங்கு கற்றனவோ அருவிகள்!
புறமுதுகு காட்டினாலும்
சுகமாக அடித்துக் கொண்டே இருக்கும்.
அருவியிடம் சமர்புரியச் சென்றுவிட்டால்
இன்னும் நாலு அடிகளையும்
பல கும்மாங்குத்துகளையும்
வாங்கத் தோன்றுமே தவிர உதை
கொடுக்கத் தோன்றாது.
வேண்டுமென்றால் கணக்கில்லா
முத்தங்களைக் கொடுக்கலாம்!

எஸ்.சீதாராமன்

'தாமரை' பத்திரிகையின் மகேந்திரன், தமது இலங்கை அனுபவங்களைப் புத்தகமாக எழுதியிருக்கிறார். தலைப்பு: திக்குள் விரலை வைத்தேன்!



பத்திரிகையாளர் லேனா தமிழ்வாணன் ரேடியோ பிரியர். அவரிடம் ஐம்பது ரூபாய் முதல் பத்தொன்பதாயிரம் ரூபாய் வரை மதிப்புள்ள விதம் விதமான ரேடியோக்கள் இருக்கின்றன.



சென்னை பர்கிட் ரோடு முனையில் ஒரு விளம்பரப் பலகை இருக்கிறது. டச்டெல் டெலிபோன் நிறுவனம் வைத்துள்ள இந்த விளம்பரப் பலகையில், கார்ட்டூனிஸ்ட் மதனின் டெலிபோன் பற்றிய ஜோக்குகள், அவரது கார்ட்டூனுடன் இடம் பெற்றிருக்கின்றன.

'இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு' (நான்காம் பாகம்) நூலுக்காக, பஞ்சாப் மொழி எழுத்தாளர்களைச் சந்திக்க டெல்லி சென்றிருக்கிறார் சிவசங்கரி.



மாலன் ஒவ்வொரு ஆண்டும் தம்முடைய பிறந்த நாளன்று ரத்ததானம் செய்கிறார்.




ரேடியோ லேனா!



ரமணிசந்திரன் சமீபத்தில் முழு மூச்சாகப் படித்து முடித்த நூல்: வியாஸ மகாபாரதம்.

திருவாரூர் பாபு, டைரக்டர் சரணிடம் உதவி இயக்குனராகச் சேர்ந்திருக்கிறார்.




மினி மினி மினி மினி மினி மினி மினி மினி மினி மினி

'இன்று ஒரு தகவல்' உட்பட தென்கச்சி சுவாமிநாதனின் பல்வேறு ரேடியோப் பேச்சுகளும் புத்தகமாக வெளி வந்துவிட்டன. ஆனால், அந்தப் புத்தகங்களுக்குரிய ராயல்டி பணத்தை அவர் வாங்கிக் கொள்வதில்லை. சமூக சேவை அமைப்புகளுக்கு வழங்கி விடுகிறார்.



பத்து வருடங்களுக்கு முன் பட்டுக்கோட்டை பிரபாகர் கல்கியில் எழுதிய தொடர்கதை 'ஆகவே செக்ஷன் 302ன்படி'. அந்தக் கதை, சமீபத்தில் கன்னடத்தில் சினிமாவாக எடுக்கப்பட்டுள்ளது. தலைப்பு: ராங் நெம்பர். இயக்குனர்: என்.எஸ். சங்கர் என்ற தமிழர்.




'வின்' டி.வியில் 'தினம் ஒரு மலர்' நிகழ்ச்சியில் புதன்தோறும் காலை ஏழு மணிக்கு எழுத்தாளர்களைச் சந்தித்து உரையாடுகிறார் வாஸந்தி.



'வாக்கப்பட்ட பூமி' என்ற தமிழக கிராமிய மணம் கமழும் கட்டுரைத் தொகுப்பு புத்தகமாக வெளி வரவிருக்கிறது. இது, இளைய தலைமுறை இயக்குனர் ஒருவர், பத்திரிகையாளராக இருந்தபோது, எழுதியது. அந்த இயக்குனர்: சுசி கணேசன்.

அசோகமித்திரன் தண்ணீர்ப் பிரச்னையை வைத்து எழுதிய நாவல் 'தண்ணீர்.' அது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு நான்கு பதிப்புகள் வெளியாகி, தமிழ் விற்பனையை பலமடங்கு விஞ்சிவிட்டது.







தம்மைப் பாதித்த நிகழ்ச்சிகளை ஓவியங்களுடன் டைரிக் குறிப்பு எழுதும் பழக்கம் அனுராதா ரமணனுக்கு உண்டு.

சீதாப்பாட்டி - அப்புசாமி கதாபாத்திரங்களின் சிருஷ்டிகர்த்தாவான பாக்கியம் ராமசாமி, இணையதளம் நடத்தி வருகிறார். பெயர்: www.appusami.com

தொகுப்பு:
எஸ். சந்திரமௌலி, அனு

பேரின்பமும், பெருவாழ்வும் தரும் புண்ய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்து பித்ருக்களின் ஆசிகளைப் பெறலாம்!

சகல தோஷ நிவர்த்தி ஸ்தலமான இராமேஸ்வரத்தில்

ஆடி அமாவாசைநாளில்

அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

ஜெகத்குரு காஞ்சி ஸ்ரீ பரமாச்சார்யார் அனுக்கிரகத்துடன் பேரின்பமும், பெருவாழ்வும் தரும் புண்ய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்குகொள்ள அன்புடன் அழைக்கிறோம்!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ இராமநாத சுவாமி தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

பன்னிரெண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுள் ஒன்றான இராமேஸ்வரத்தில் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீ ராமநாத சுவாமி உடனிருந்து அருள் பாலிக்கிறார். மூர்த்தி, தீர்த்தம், தலம் மூவகையாலும் இராமேஸ்வரம் சிறப்புற்று சிவ விஷ்ணு ஸ்தலமாக பிரகாசிக்கிறது. மாங்கல்ய தோஷம், புத்திர தோஷம், செவ்வாய் தோஷம், நாக தோஷம் போன்ற எல்லாவிதமான தோஷங்களுக்கும் பரிகாரத்தலமாக இராமேஸ்வரம் விளங்குகிறது. இத்தகைய சிறப்பு மிக்க புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நேரில் சென்று அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்ய இயலாத அன்பர்களுக்காக, "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" மூலம் அன்னதானத் திருப்பணி நடைபெறுகிறது. புண்ணிய பூமி இராமேஸ்வரத்தில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னதானம் அளிக்கும் பணியிலும், குடும்பம் நலம் பெற அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றும் பணியிலும், நாமும் பங்கு கொண்டோம் என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.


தங்கள் சார்பாக அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்ய தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பலாம்.

- ரூ.500- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு வருடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கும், அக்னி தீர்த்தத்திற்கு தீபம் ஏற்றுவதற்கும் நன்கொடையை அனுப்புவோர், விரும்பும் மாதத்தில் அமாவாசை தினத்தில் இராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ. 1000, ரூ. 5000 அனுப்பும் அன்பர்களுக்கு இராமேஸ்வரத்தில் பூஜிக்கப்பட்ட "கோடி தீர்த்த செம்பும்" வலம்புரி சங்கும் ஸ்ரீ பர்வத வர்த்தினி சமேத ஸ்ரீ இராமநாத சுவாமி வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும். ரூ.5000 - அனுப்பும் அன்பர்களுக்கு ஆறு வருடங்களுக்கு அன்னதானம் செய்து "இராமலிங்க தீபமும்" 336 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள "ஸ்ரீ மத் இராமாயணம்" புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு இராமேஸ்வரத்தில் நேரில் சென்று 'தர்ப்பணம்' செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" மூலம் தர்ப்பணம் செய்யப்படுகிறது. பித்ருக்களை குறித்து இராமேஸ்வரத்தில் செய்யப்படும் தர்ப்பணம் செல்வம், கீர்த்தி, ஆயுள், ஐஸ்வர்யம் முதலிய நன்மைகளை அளிக்கும். எதிரிகளை விலக்கும். தன் வம்சம் தழைத்தோங்கச் செய்யும். மறைந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய ரூ. 750- அனுப்பும் போது யாருக்கு தர்ப்பணம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், மாதம், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் ஆகிய மூவகையாலும் சிறப்பு வாய்ந்த இராமேஸ்வரத்தில் தர்ப்பணம் செய்து கிடைத்தற்கரிய பேரருளைப் பெற்று க்ஷேமமாக வாழுங்கள்.

இராமேஸ்வரத்தில் அமாவாசை நாளில் அன்னதானம் செய்ய விரும்பும் அன்பர்கள் சார்பாக தாங்கள் என்ன வேண்டுதலுக்காக அக்னி தீர்த்தத்திற்கு தீபம் ஏற்ற வேண்டும் என்பதையும், உங்கள் பெயர், நட்சத்திரத்தையும் குறிப்பிட்டு எங்களுக்கு எழுதி அனுப்பினால் அதன்படி அமாவாசை நாளில் அக்னி தீர்த்தத்திற்கு தீபம் ஏற்றி தங்களுக்கு பிரசாதம் அனுப்பிவைக்கப்படும். தீபமேற்றும் பணியிலும், அன்னதானப் பணியிலும் ஈடுபட விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque / D. D/ M. O. மூலம் Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai-4 என்ற பெயருக்கு எடுத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நடைபெறும் இச் சீரிய அன்னதானப் பணியிலும், அக்னி தீர்த்தத்திற்கு தீபவழிபாட்டு பணியிலும் பங்கு கொண்டு முன்னோர்களின் நல்லாசிகளைப்பெற உங்களை அழைக்கிறோம்.



ஸ்ரீ பர்வதவர்த்தினி தாயார்

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.


Cheque / D. D/ M. O. அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street,(Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

TEL : 2495 9302, Fax : 2461 6466. E-mail:siva siva @ vsnl.net



ஸ்ரீ இராமநாத சுவாமி

ஆடி அமாவாசை அன்று பித்ருகளுக்கு தர்ப்பணம் செய்வது இந்துக்களின் கடமையாகும்.

ஆராதனை

■ சீதா ரவி ■



"அப்புறமென்ன?" ப்ருத்வியைப் பார்த்துக் காதலுடன் கேட்டாள் பத்மினி.

"என்ன ஆச்சு...? கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துப் பிடிவாதமானது தகர்ந்தது. அதற்கு முன் தோன்றிய காதலாகிற மூத்த குடி வென்றது. நவநீதா ஜெர்ரி பிரவுன் கல்யாணம் அதே பெருமாள் கோயில்ல பெற்றோர் சூழ, தேவர் மூவர் சாட்சியாக நடந்தது. அப்புறம் எனக்கொரு வழி பிறந்தது. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கிட்டு, இப்போ உன் கையால வாழைக்காய் வறுவல் சாப்பிட்டுக் கிட்டிருக்கேன். எங்க அம்மா சொல்ற மாதிரி, எல்லாம் அந்த பெருமாள் செயல்தான்..."

"ஆமாமாம்! பெருமாள் பதினோராவது அவதாரமெடுத்து ஆயிரம் டாலர் செக் வடிவில வந்தாலும் வந்தார், பிடிவாத யுகம் அஸ்தமிச்சு புரட்சி யுகம் பிறந்ததாக்கும்!" – பத்மினி அக்மார்க் கும்பகோணம் பாணியில் முகவாயை நொடித்து வலது தோளில் இடித்துக் கொண்டு பழித்துக் காட்டினாள்.

"கணக்குத் தப்புதே... அப்போ பத்தாவது அவதாரம் எது...?" ப்ருத்வி குழம்பினான்.

"வேற என்ன, மஹாவிஷ்ணு ஸ்வரூபமா பாத பூஜை பண்ணி, நீங்க உங்க வீட்டு மாப்பிள்ளையா ஏத்துக்கிட்ட ஜெர்ரி பிரவுன் தான்."

இதற்கு மேலும் வாசகர்கள் பொறுமையைச் சோதிக்க நாம் ஒன்றும் ஸ்ரீமந் நாராயணப் பெருமாள் இல்லையென்பதால் பழைய பாக்கியை இதோ படியளந்து விடுகிறோம்...

நவநீதா புடைவைத் தலைப்பு படபடெனப் வீசிப் பறக்க ஜெர்ரி பிரவுனை ஆலிங்கனம் செய்து கொண்டதும், சொக்கலிங்கமோ சுப்ரமண்யமோ, கிழைச் சீமை மிராசுகள் போல் அரிவாளைத் தூக்கினார்கள் – மானசீகமாக!

"நவநீதா!" என்றொரு அதட்டு அதட்டிய சொக்கலிங்கம், ஜெர்ரி பிரவுனைத் தோளில் தட்டிச் சொன்னார்:

"இது பொது இடம். ஹிந்துக் கோயில். இங்கெல்லாம் இப்படி நடந்துக்கறது எங்க சம்பிரதாயத்துக்கு விரோதம். தெய்வ குத்தம். தெரியுமா...!"

உடனே நவநீதாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட ஜெர்ரி பிரவுன், தனது குர்த்தா பாக்கெட்டில் கைவிட்டு ஒரு நீண்ட உறையை எடுத்து நீட்டினான்.

"மன்னிக்கணும். கொஞ்சம் தடுமாறிட் டேன். இதோ என்னோட சின்ன காணிக்கை..."

சொக்கலிங்கம் உறையை வாங்கிப் பிரித்துப் பார்த்தார். ஓராயிரம் டாலர் செக்! ராபர்ட்ஸன் பெருமாள் கோயில் பெயருக்கு முத்து முத்தாய் எழுதப்பட்டிருந்தது. கீழே ஜெர்ரி பிரவுனின் மின்னல் கீற்றுக் கையெழுத்து!

கல்யாணப் பதிவுப் பத்திரத்தை எதிர் பார்த்த சொக்கலிங்கம், பெருமாள் - தாயாருக்கு நிரந்தர கல்யாண உத்ஸவ வைப்பு நிதியொன்று கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் நிலை தடுமாறினார்.

"ரொம்ப தேங்க் யூ..." என்று மணிப்பிரவாளத்தில் சற்றுத் தத்தளித்து மீண்டு ஆங்கிலத்தில் தமது ஆழ்ந்த நன்றியை ஜெர்ரி பிரவுனுக்கு அவர் தெரிவித்தபோது, நவநீதாவின் காதல் விவகாரம் கொஞ்சம் பின்னுக்குத் தள்ளப்பட்டுப் பதுங்கிக் கொண்டது.

தனது நீண்ட கரத்தைப் பெருமாள் இருந்த திக்கில் கட்டி அவஸ்தையற்ற தமிழில் கேட்டான் ஜெர்ரி பிரவுன், "தரிசனம் பண்ணலாமா?"

அவன் செம்பட்டைத் தலையும் சாம்பல் கண்களும் கூட அக்கணத்தில் அழகாகத் தெரிந்தன காந்திமதிக்கு. 'நெற்றியில் சின்னதாக



சந்தனப் பொட்டு வைத்தால் களையாக இருக்காதோ...?'

நவநீதாவின் கண்கள் ப்ருத்வியைத் தேடின. நாடகத்தின் இந்தப் பகுதி அவளுக்கு முன் கூட்டிச் சொல்லப்படவில்லை. ஒத்திகையின்றி எந்தக் கட்டத்தில் என்ன செய்வது என்று புரியாமல் சற்றுக் குழப்பமாகயிருந்தது. அவள் கண்களால் கேட்ட கேள்விக்குக் கண்களாலேயே பதில் சொன்னான் ப்ருத்வி. 'பேசாமல் வாயை மூடிக்கொண்டு இரு. நான் பார்த்துக்கறேன்!'

பூனைக் குட்டியைப் போல் நவநீதா ஜெர்ரி பிரவுனின் மடியில் சுருண்டு கிடப்பதைப் பார்த்த கணத்தில் ப்ருத்விக்கு அவர்களுடைய காதலின் சக்தி குறித்த பிரும்ம ரகசியம் புலனாயிற்று. அதுவரை அத்தனை நெருக்கத்தில் ஓர் ஆணையும் பெண்ணையும் அவன் கண்டதில்லை. தெருவில் முத்தமிடும் ஜோடிகளும், பொது விடங்களில் காதல் புரியும் இளைஞர்களும், அரிதாகக் கண்ணில் பட்டதுண்டு. ஆனால், அவர்கள் போக்கின் அபத்தமும் அநித்தியமும் உடனே புலப்பட்டு விடும். இது அப்படி இல்லை. மேலை நாகரிகத்தின் மொத்த உருவாய் ஓர் இளைஞன். என்னதான் நுனி நாக்கு ஆங்கிலமும் நகப் பூச்சுமாக வலம் வந்தாலும், ராத்திரிச் சாப்பாட்டுக்கு ரஸம் இல்லாவிட்டால் ரகளை செய்யும் ஒரு யுவதி. அவனுக்குச் செய்யும் தொழிலைத் தவிர வேறு தெய்வம் இருப்பதாகத் தெரியவில்லை; இவளோ தினமொரு திக் விஜயம் செய்தாலும், இரவு பூஜை அறையில் பத்து நிமிடம் கடவுளுடன் ஒன் டு ஒன் உரையாடல் முடித்து, திருநீறு அணியாமல் தூங்கப் போவதில்லை. கவர்ச்சிக் கன்னிகள் நிறைந்த மேலை நாகரிக வட்டத்தில் வலம் வரும் ஜெர்ரி பிரவுனுக்கு, இந்த இருபது வயது இளம் புயல் நவநீதா தனித்துத் தெரிகிறாள். கால தேச வர்த்தமானங்களைக் கடந்த ஒரு ஆகர்ஷண சக்தி அவளை அவனிடம் ஈர்க்கிறது. அவன் மடியில் கிடக்கும் அவள் தலை, வாசல் மணியடித்தும், நிமிரவில்லை; 'கம் இன்' என்று ஜெர்ரி பிரவுன் அழைத்த பிறகும் நகரவில்லை. தான் உள்ளே சென்று ஸ்தம்பித்த பிறகும் அசையவில்லை!

ஆடாது அசங்காது கிடந்த அந்த தலை நவநீதாவின் சரணாகதியை, அவள் காதலின் உறுதியை, உலகமே எதிர்த்தாலும் எதிர் கொள்ளும் நம்பிக்கையை, பலத்தைப் பிரகடனப்படுத்தியது.

மடியில் கிடக்கும் பெண்ணை மலர்போல் மென்மையாய் நோக்கிய ஜெர்ரி பிரவுனின் கண்ணியம், நவநீதாவின் தேர்வில் அர்த்தமிருப்பதைக் காட்டியது.

இப்படிப்பட்ட காதலைக் கலைக்க முடியாது; கலைக்க முயற்சி செய்வது பின் வேடனைத் துரத்துவது போன்ற மாயமான் வேட்டைதான் என்ற தீர்மானத்துக்கு வந்தான் ப்ருத்வி.

திரும்பிப் போய் அப்பா – அம்மாவிடம் இந்தக் காட்சியை விவரித்து, தனக்குப் புரிந்ததைப் புரிய வைத்து, அவர்களுடைய மனங்களை மாற்ற முயல்வதோ, சதாமைப் பிடிக்க முயல்வது போன்ற மடத்தனம்!

இரண்டு சர்வாதிகார சக்திகளிடையே மாட்டிக் கொண்ட ப்ருத்வியின் மூளை நெருக்கடி நிர்வாக முறையில் தீர்வுகளைத் தேடியது...

"நவநீதா, உங்க இரண்டு பேருக்கும் நான் கல்யாணம் பண்ணி வைக்கிறேன். இப்போ கிளம்பி வா... வீட்டுக்குப் போகலாம்."

வெடுக்கென்று தலை நிமிர்த்திய நவநீதா,

''அந்தப் பெண், என்னைக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்து விட்டாள்.''
''அடடா! அப்புறம்?''
''என்ன செய்றது? ஏற்கெனவே உள்ள இரண்டு மனைவிகளுடன் குடும்பம் நடத்த வேண்டியதுதான்!''
– எஸ். மோகன்

"நான் வரமாட்டேன்" என்று மீண்டும் முகத்தை அவன் மடியில் புதைத்துக் கொண்டாள்.

மெள்ள அவளை விடுவித்து வீட்டுக்கு அனுப்பி வைத்தவன் ஜெர்ரி பிரவுன்தான்.

திரும்பும் வழியில் தங்கையிடம் தனது திட்டத்தை வெளிப்படுத்தினான் ப்ருத்வி.

"இதோ பாரு நவநீதா... கஷ்டம்தான், எனக்குத் தெரியும்... ஒரு மாசம் பல்லைக் கடிச்சுக்கிட்டு அவனைப் பார்க்காம, பேசாம இரு..."

"என் பல்லெல்லாம் கொட்டிப் போயிடும்!"

"பரவால்லை டெஞ்சர் வேணா வாங்கி வைச்சுக்கலாம். ஆனா நம்ம அப்பா – அம்மாவை சமாளிக்கணும்னா, வேற வழி கிடையாது."

"ஒரு மாசத்துல எப்படி மனசு மாறும் அவங்களுக்கு? என்ன பண்ணுவே?"

"எனக்கே இப்போ தெரியலை. ஆனா நிச்சயம் ஏதாவது பண்ணுவேன்... உங்க காதல் என் கண்ணைத் திறந்திருக்கு... ஆனா, தூங்கற மாதிரி பாசாங்கு பண்ற அவங்க கண்ணை அது திறக்காது. அதனாலே, கொஞ்சம் அதிர்ச்சி வைத்தியம் பண்ணி திறக்க வைச்சு அப்புறம் அதுல மண்ணையும் தூவித்தான்

அவங்களை மசிய வைக்கணும்."


ஜெர்ரி பிரவுனுக்கு வேட்டி அணியக் கற்றுத் தந்ததும், 'தரிசனம் பண்ணலாமா?' என்று தடுமாறாத தமிழில் அவனைப் பேசப் பழக்கியதும், கோயில் சடங்குகள் பற்றிய விவரங்களைப் புகட்டியதும், சிறிதும் பெரிது மாக ஒத்திகைகள் பார்த்ததும், ப்ருத்விக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

அடிப்படைத் தத்துவத்தை ஜெர்ரி அழகாகப் புரிந்து கொண்டான்.

"இந்தியாவுல ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கல்யாணம் பண்ணிக்கிறதோட நின்னுடாது..."

"............"

"அவங்க இரண்டு பேர் குடும்பங்களும் கல்யாணம் பண்ணிக்கணும். அதாவது ஒருத்தரை ஒருத்தர் ஏத்துக்கிட்டாகணும்...



அதுதான் இந்தியத் திருமணம்..."

"ஓ. ஓகே! அதனாலதான் உங்க அப்பா அம்மா என்னைப் பிடிக்கலேன்னு என்கிட்டயே சொல்றாங்களா...?"

"ஆமாம்... அதுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்..."

"ப்ருத்வி, உன் மன்னிப்பு எனக்கும் நவநீதாவுக்கும் கல்யாணம் பண்ணி வைக்காது!"

"தெரியும்... அதான் இப்போ யோசனை..."

"என்னைப் பிடிக்காத உங்க அப்பா அம்மாவுக்கு எதை ரொம்பப் பிடிக்கும்?..."

"அம்மாவுக்கு கர்னாடிக் மியூஸிக். அப்புறம் அப்பாவோட டெலிக்னேஷன், அப்புறம் அமெரிக்கா... அப்பாவுக்கு...ம்.. அவரோட வேலை பிடிச்சிருக்கு, ஆனா அதைவிட அதிகமா பெருமாள் கோயில் பொறுப்புகள்..."

"ஹா!" என்றான் ஜெர்ரி பிரவுன்.

"என்ன...?"

"எல்லாரையும் காப்பாத்தறதா நீங்க சொல்ற பெருமாள்தான், என்னையும் நவநீதாவையும் சேர்த்து வைக்கப் போறார்..."

ராபர்ட்ஸன் பெருமாள் ஆலயத்துக்கு ஆயிரம் டாலர் நன்கொடை வழங்க ஜெர்ரி பிரவுன் முடிவு செய்ததும், அதைப் பெற்றுக் கொண்ட சொக்கலிங்கம் நெகிழ்ந்து போனதும், அந்த காசோலையே நவநீதா – ஜெர்ரி பிரவுன் திருமணத்துக்குப் பெருமாள் சன்னிதியில் தரப்பெற்ற திருவுளச்சீட்டு என்று காந்திமதி உருகியதும், திட்டத்தின் தொடர் விளைவுகள்.

நவநீதாவைப் பெண் பார்க்க வந்த கணேஷ் சுப்ரமண்யமும் அவன் பெற்றோரும், திருவிழாவில் தொலைந்துபோன குழந்தைகள் போல் விழிப்பதைக் கண்டு மனமிரங்கிய ஜெயா, ப்ருத்விக்கென்று கணக்குப் பண்ணி வைத்திருந்த தன் மகளையே அவர்களுக்கு அறிமுகமும் திருமணமும் செய்து வைத்தாள்.

ஜெயா மாமியின் கணக்கு பிசகியதில் பிருத்விக்குப் பெருமகிழ்ச்சி. மாட்ரிமோனியல் டாட்காமின் மிரட்டல்களிலிருந்து அதிகம் மாறுபடாத ஒரு பெண்ணிடமிருந்து தப்பிய அவன், பத்மினி அன்றாடம் வறுத்துத் தரும் வாழைக்காய் வறுவலைச் சுவைத்துக் கொண்டிருக்கிறான்.

பத்மினி...?

அமெரிக்க நச்சுக் காற்றெல்லாம் படாமல் பாதுகாப்பாக கும்பகோணம் பக்கத்திலுள்ள குலம் விளங்குமங்கலத்தில் பிறந்து, வளர்ந்து, பள்ளி சென்று, பூப்பெய்திய பெண். வாழைக்காய் சீவவும், வீணை வாசிக்கவும், மாவிளக்கு போடவும் அறிந்த போஸ்ட் கிராஜுவேட். 'வாழ்க்கையில் வேறென்ன வேண்டிக் கிடக்கிறது!' என்று பிருத்வி அவளை ஆராதிக்கிற போது, அமெரிக்காவெங்கும் பொறாமைப் புயல்கள் மையம் கொள்வதாகக் கேள்வி!

அந்தச் சூறாவளியிலிருந்து விலகிய ஓர் ஆனந்தத் தீவில் நவநீதா – ஜெர்ரி பிரவுன் வளைய வருகிறார்கள்.

"எனக்காக ஃபேன்ஸி டிரெஸ்ஸெல்லாம் உடுத்தி, தமிழ் பேசக் கத்திக்கிட்டு... ஆயிரம் டாலர் தண்டம் அழுது, தேங்க் யூ ஜெர்ரி..." என்று நவநீதா உருக, அழகாக முற்றுப் புள்ளி வைக்கிறான் ஜெர்ரி பிரவுன்:

"அது உனக்காக இல்லை நவ்நீட்... உன் குடும்பத்துக்காக.. அப்பா, அம்மா, ப்ருத்வி, அப்புறம் இப்போ புதுசா சேர்ந்திருக்கிற பத்மினி... இந்தியப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா, அவ குடும்பத்தையே பண்ணிக்கிட்டா மாதிரி... ஒரு விதத்துல குளோபலைசேஷன்...!"

நவநீதாவின் சிரிப்பு ப்ருத்விக்குக் கோயில் மணியை நினைவூட்டுகிறது!

(முற்றும்)

தட்டினேன் திறந்தது



கணிப்பொறித் தமிழின்

நுனி நாக்கு ஆங்கிலம் பேசத் தெரிந்தால் மட்டுமே கணிப்பொறி கற்க முடியும்! - என்பதுகளின் இறுதி வரை இதுதான் நிலை. காரணம், கம்ப்யூட்டரில் பயன்படுத்தப்படும் மென்பொருட்கள் அத்தனையும் ஆங்கிலத்தில் இருந்தன. இதனால் கம்ப்யூட்டர் கல்வி ஓர் இரும்புக்கோட்டையாக இருந்தது. அதைத் தகர்த்து எறிந்து சாதித்துக் காட்டினார் சாஃப்ட்வ்யூ ஆண்டோபீட்டர்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக, தமிழ் வழியே கம்ப்யூட்டர் கல்வி அளித்தல், தமிழ் மென்பொருட்களைத் தயாரித்தல், தமிழில் கம்ப்யூட்டர் குறித்த நூல்களை எழுதிக் குவித்தல், அயலக மொழிகளுக்கு இணையாக மல்டி மீடியா குறுவட்டுக்களை (சிடி), தமிழில் புழங்க விடுதல், இணையதளத்திற்குத் தமிழ் மொழியை எடுத்துச் செல்லுதல், தமிழில் கம்ப்யூட்டர், கலைச் சொற்களை உருவாக்குதல் என ஒரு நாளில் பதினெட்டு மணி நேரம் உழைத்து வரும் மா. ஆண்டோ பீட்டர் ரமேஷ், சாதித்தது நிறைய. இனி கம்ப்யூட்டர் வேகத்தில் இவரது ஃப்ளாஷ்பேக்.

"தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆறுமுகநேரி எனது ஊர். வளர்ந்தது, படித்ததெல்லாம் சென்னை நகரில். ஐந்தாம் வகுப்பு படிக்கிறபோதே அப்பா காலமாகி விட, வீட்டில் வெறுமையும் வறுமையும் சூழ்ந்து கொண்டன. "இன்று இஷ்டப்பட்டு கஷ்டப்படு; நாளை சந்தோஷத்தை அறுவடை செய்யலாம்" என்று தினசரி அம்மா சொல்லிக் கொண்டேயிருப்பார்கள்.

மேல்நிலைக் கல்வி முடித்த பிறகு தமிழக அரசு முதன்முதலாக அறிமுகப்படுத்திய கணிப்பொறி பட்டயப் படிப்பில், முதல் மாணவர் குழாமில் ஒருவனாகச் சேர்ந்தேன்.

படிப்பு முடிந்தவுடன் கணிப்பொறித் துறையில் சாதித்தே தீருவது என்று தீர்மானம் எடுத்துக் கொண்டேன். சென்னையில் கணிப்பொறிகளை விற்பனை செய்யும் நிறுவனமொன்றில் விற்பனைப் பிரதிநிதியாக வேலைக்குச் சேர்ந்தேன். மாதம் ஆயிரம் ரூபாய் ஊதியம். வீடு பெரம்பூரிலும், அலுவலகம் தேனாம்பேட்டையிலும் இருந்தது. அலுவலகம் முடிந்து வீட்டுக்குச் செல்ல, பேருந்துக் கட்டணத்தில் பத்து பைசா குறையும் என்பதற்காக, தேனாம்பேட்டையிலிருந்து ஸ்டெர்லிங் சாலைக்கு நடந்தே வந்து பேருந்தைப் பிடிப்பேன். பள்ளி, கல்லூரியில் படிக்கிறபோதும், வேலையில்

சேர்ந்த பிறகுமேகூட, மதிய உணவையே மறந்து போனேன். இதற்குக் காரணம், சாப்பிட நேரமில்லை என்பதல்ல. சாப்பாட்டுக்கே வழியில்லை என்பதுதான். ஜெயித்தே தீருவது என்ற எனது இதயத் துடிப்பின் வேகத்தில், வயிற்றின் துடிப்பெல்லாம் என்னை வதைக்கவில்லை.

எல்லோரும் பெரிய நிறுவனங்களை மட்டும் குறி வைக்கும்போது நான், சிறிய நடுத்தர நிறுவனங்களில் ஏறி இறங்குவேன். 'உங்களது அலுவலகக் கணக்குகளையெல்லாம் இந்தக் கணிப்பொறி ஊதித் தள்ளிவிடும்' என்பேன். "எங்களுக்கு எண்ணூறு ரூபாய் சம்பளத்தில் கணக்குப் பிள்ளை இருக்கிறார். எண்பதாயிரம் ரூபாய்க்கு இடத்தை அடைக்கிற இந்தப் பிளாஸ்டிக் பெட்டி எதற்கு?" என்பார்கள். 'உங்கள் கணக்குப்பிள்ளைக்கு சுகமில்லாமல் போகலாம். கணிப்பொறியை நீங்கள் எந்த நேரத்திலும் வேலை வாங்கிக் கொள்ளலாம்' என்பேன். யோசிக்கத் தொடங்குவார்கள்.

–சாஃப்ட்வியூ ஆண்டோ பீட்டர்



தளபதி!

இதற்கிடையில் கணினி அச்சகத் துறையின் மீது கவனத்தைத் திருப்பினேன். அங்கே நான் கண்ட மிகப் பெரிய முரண்பாடு என் சிந்தனையைத் தூண்டியது. கணிப்பொறியின் விலை நாற்பதாயிரம் என்றால், அதில் பயன்படுத்தப்படும் தமிழ் மென்பொருளின் விலையும் நாற்பதாயிரம் ரூபாயாக இருந்தது. தவிர, சந்தையில் ஒரு சில மென்பொருட்கள் மட்டுமே கிடைத்தன. இந்த நிலையில் தமிழ் மென்பொருள் என்றதும் 'அய்யோ! அப்பா!' என்று எல்லோரும் அலறினர். கொஞ்சமும் யோசிக்காமல் எனது ஆசிரியர் அலெக்ஸாண்டர் என்பவருடன் இணைந்து, 12X10 சதுர அடி இடத்தில் 'சாஃப்ட்வியூ கம்ப்யூட்டர்ஸ்' நிறுவனத்தைத் தொடங்கினேன். தமிழில் சாஃப்ட்வேர் தயாரிக்கும் துணிச்சலும் ஆர்வமும் வந்துவிட்டதே தவிர, அலுவலகத்தில் மேசையும், நாற்காலியும் தவிர, ஒரு கம்ப்யூட்டர் கூடக் கிடையாது. முதல் தமிழ் 'சொற்செயலி'யை உருவாக்கினோம். மனசுக்குள்ளிருந்த வலிகள் விலகி சாரல் அடித்தது.

தமிழகத்திலிருக்கிற மிகச் சிறிய அச்சுக்கூடத்தில் கூட நமது மென்பொருள் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து, வெறும் தொள்ளாயிரத்து ஐம்பது ரூபாய்க்கு விற்பனை செய்யத் தொடங்கினோம். மார்க்கெட்டிங், பிராண்ட் நேம் போன்ற விஷயங்கள் எல்லாம் புரிந்தன.

சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம், ரஜினிகாந்த், சன் டிவி என்று தொடங்கி, தெருவோர டி.டி.பி மையங்கள் வரை எங்கும் எங்களது வாடிக்கையாளர்கள் நிறைந்தனர். அடுத்து விண்டோஸ் என்.டி என்ற மென்பொருளுக்கு

லேடி கவுண்டமணி!

"அய்யோ சாமி... சமாளிக்கவே முடியலை... போன் மேலே போன். கால் மேலே கால்..." என்று சந்தோஷமாக சலித்துக் கொண்டார் ஊர்வசி. ஊர்வசி நடித்து ஜெயா டீ.வியில் ஒளிபரப்பாகியிருக்கும் 'ருக்கு... ருக்கு-ருக்குமணி'க்குக் கிடைத்த வரவேற்பால் பூரித்துப் போய் சொன்ன வார்த்தைகள்தாம் இவை.

பதிலுக்கு நடிகர் சேத்தனும் பெருமை பொங்கினார்.

"ஊர்வசி மேடம், லேடி கவுண்டமணி மாதிரி. ஒற்றை ஆளா நின்னு, பட்டையைக் கிளப்புவாங்க. என்னோட முதல் முயற்சிக்கே அவங்க ஒத்துழைப்பு கிடைச்சது எங்க அதிர்ஷ்டம்தான்" என்றார்.

இந்த ஜாலி டீ.வி தொடரின் நிர்வாகத் தயாரிப்பாளர் சேத்தன் தானே?

- ஆதர்ஷ்



இந்தியாவில் முதன்முதலில் தமிழ் வடிவம் தந்தோம். உலகம் முழுவதும் பரந்து விரிந்து கிடக்கும் தமிழர்கள் அத்தனை பேரிடமும் தமிழ் மென்பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஒரே நோக்குடன் http://www.tamilsoftware.biz என்ற இணைய தளத்தைத் தொடங்கி, எனது மென்பொருட்களோடு, எனது போட்டியாளர்களின் மென் பொருட்களையும் அதில் பட்டியலிட்டேன்.

அடுத்த முயற்சியாக தமிழ்வழி கம்ப்யூட்டர் கல்வி வகுப்புகளைத் தொடங்கியபோது, முதல் பதினைந்து நாட்கள் வரை ஒரு மாணவர்கூட வரவில்லை. யாரும் வரவில்லை என்றதும், எங்களை உற்சாகப்படுத்த எங்கள் அலுவலகத்திற்கு எதிரில் இருந்த நண்பரே முதல் மாணவராகச் சேர்ந்தார். அதன் பிறகு இலங்கையிலிருந்து இரண்டாவது மாணவர் வந்தார். அவரைத் தொடர்ந்து, மலேசியா, மொரிஷியஸ், தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, மாலத்திவு என்று தமிழ் மாணவர்கள் வந்து குவியத் தொடங்கினர். 'நாங்கள் குடியேறிய நாடுகளில் எங்கள் தாய்மொழியில் கம்ப்யூட்டர் கற்றுத் தர யாருமில்லை. எங்கள் தாயகத்தில் அதற்கு வாய்ப்பிருப்பதை அறிந்து ஓடோடி வந்தோம்' என்றபோது, எனது நம்பிக்கை வீணாகிவிடவில்லை என்று மகிழ்ந்தேன். தமிழ்வழி கம்ப்யூட்டர் கல்விக்குக் கிடைத்த பேராதரவைத் தொடர்ந்து, மல்டி மீடியா கல்வியையும் தமிழிலேயே தரமாகக் கற்றுத் தந்தோம். இதை அறிந்த சி.எஸ்.சி கம்ப்யூட்டர் நிறுவனம், எங்களுடன் இணைந்து மிகக் குறைந்த கட்டணத்தில் மல்டி மீடியா கற்றுத்தர முன் வந்தது."

ஆண்டோ பீட்டர், தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பத் துறை கலைச் சொல்லாக்கத் துறையின் உறுப்பினராக இருந்து கொண்டு, இதுவரை கணிப் பொறி உலகில் புழங்கும் தொழில்நுட்ப வார்த்தைகள் உட்பட ஒரு லட்சத்திற்கும் அதிகமான வார்த்தைகளைக் கலைச் சொல்லாக்கம் செய்திருக்கிறார். உலகத் தமிழ் இணைய மாநாடுகளில் தொடர்ந்து முக்கியப் பொறுப்பு வகித்து வந்திருக்கும் இவர், சென்னையில் தமிழக அரசு நடத்தவிருக்கும் ஆறாவது உலகத் தமிழ் இணைய மாநாட்டின் திட்டத்துறைத் துணைத் தலைவராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

- ஆர்.சி. ஜெயந்தன்

படம்: ஸ்ரீஹரி



பெருந்தலைவர்

ம.க.பா

மேடையில் முழங்கத் தெரியாது;
எழுத்தில் ஜாலம் புரியவும் தெரியாது;
சினிமா, நாடகம், என்று கவர்ச்சிகரமான பின்னணி சக்திகள் கிடையாது...
உயர்நிலைப் பள்ளியைக் கூடப் பார்த்ததில்லை.
— இப்படிப்பட்ட ஒருவர் ஒன்பது ஆண்டுகள் தமிழக முதல்வராகத் தொடர்ந்து விளங்கினார் என்று சொன்னால் இன்றைய தலைமுறையினர் நம்ப மறுப்பார்கள்.

முதல்வர் என்ன பேசப் போகிறார் என்று கூட்டம் காதைத் தீட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறது. ஒரு பிரபல நிறுவனத்தின் விழாவில் அவர் தலைமையுரை ஆற்ற எழுந்து நிற்கிறார். "நன்றி. வணக்கம்" என்று கூறிவிட்டு அமர்கிறார்!

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஒரு முதல்வருக்கு இவ்வாறு நடந்து கொள்ள நிரம்ப நெஞ்சுரம் வேண்டும். காமராஜரிடம் அது நிறையவே இருந்தது. அவர் பதவி யேற்ற சூழல் எத்தகையது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். பக்தவத்சலம், சி.சுப்ரமண்யம் போன்ற அனுபவம் மிக்க தலைவர்கள் காங்கிரஸில் இருந்த கால கட்டம். அவர்களை மீறி சட்ட மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் காமராஜர். அவருக்கு முந்தைய தமிழக முதல்வரோ, இணையற்ற நிர்வாகியும் தலைவருமான ராஜாஜி! தமிழகம் புதிய முதல்வரான காமராஜரிடம் நிறைய எதிர்பார்த்தது.

காமராஜர் முதல் காரியமாக சி. சுப்ரமண்யத்தை நிதியமைச்சராக்கினார்; பக்தவத்சலத்தை கல்வி - சட்டத் துறைகளுக்கு அமைச்சராக்கினார். முதல்வருக்குத் தன்னம்பிக்கையில்லாததால்தான் இந்த மூத்த அனுபவஸ்தர்

களிடம் முக்கியப் பொறுப்புகளை விட்டுக் கொடுத்திருக்கிறார் என்று மக்கள் விமர்சித்தார்கள். ஆனால் இவர்களுக்கு முக்கியப் பொறுப்பளித்து அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டதன் மூலம், இருவரது ஒத்துழைப்பையும் உறுதி செய்து கொண்டார்; இருவருமே தமது பார்வையின் கீழ் இயங்கும் பாதுகாப்பான சூழலையும் உருவாக்கிக் கொண்டார்.

காமராஜர் ஆதரவாளரான ஆர். வெங்கட்ராமன், அமைச்சரவையில் மற்றொரு முக்கிய நபர். தொழில்துறை அமைச்சர்.

ஆதரவாளர்களைப் போலவே



• ரோஜாவுடன் ராஜா!

எதிரணியினரையும் அரவணைத்துச் சென்ற யுக்தி கைகொடுத்தது. இந்த மூவர் அணி தமிழகத்தின் வளர்ச்சிக்குப் பலமான அஸ்திவாரம் அமைத்தது. அதற்குக் காரணம், காமராஜரின் சீரிய தலைமை, தீர்க்கதரிசனம், ஆதரவு, ஊக்கம்.

சிறிய அமைச்சரவைதான் என்பதால் முதல்வரின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்கியது. அமைச்சர்களின் பொறுப்பில் தலையிட்டுத் துன்புறுத்தமாட்டார் காமராஜர். அதிகாரிகளிடம் நம்பிக்கை கொண்டு அவர்கள் சுதந்தரமாக இயங்க அனுமதித்தார். பெரிய தலைவர் முதல் எளிய தொண்டன் வரை, அனைவரையும் தனக்கு நெருக்கமாக உணரச் செய்யும் எளிமை இருந்த போதும், கேட்டதெல்லாம் கொடுத்துவிட மாட்டார். 'ஆகட்டும் பார்க்கலாம்' என்ற அவரது தாரக மந்திரம் அவரைக் காப்பாற்றிக் கைகொடுத்தது.

காங்கிரஸ் கட்சியின் கடை நிலைத் தொண்டராக இருந்து படிப்படியாக முன்னேறி வந்ததால், அடிமட்ட நிர்வாகத்தின் நெளிவு சுளிவுகளை அவர் அறிந்திருந்தார். இந்த அனுபவம் மாநில நிர்வாகத்திலும் அவருக்கு உதவியது. மேல்மட்ட நிர்வாக அனுபவம் மட்டுமே பெற்றிருந்த அரசாங்க அதிகாரிகள், முதல்வரின் இந்த ஆழ்ந்த அனுபவத்தை மதித்தார்கள்; முதல்வரையும் மதித்தார்கள்.

காமராஜரின் நினைவாற்றல் அசாதாரணமானது. மனிதர்கள், முகங்கள், நிகழ்வுகள், இடங்கள் – யாவையும் நினைவு வைத்துக் கொள்வார். நான்கு மாத கால சுற்றுலாத் திட்டத்தை





டைரியைப் புரட்டிப் பார்க்காமல் ஒப்பிக்க அவரால் முடியும். அந்த அளவுக்குப் பணியில் ஈடுபாடு.



தலைமைச் செயலகத்தில் அரசியல்வாதிகள் ...... நடமாட்டம் இருக்கக் கூடாது என்பதில் ராஜாஜியைப் போலவே கடுமை காட்டினார் காமராஜர்.

திருமலைப் பிள்ளை சாலையில் அவர் இல்லம். யார் வேண்டுமானாலும் உள்ளே நுழைந்து அவரைக் காணலாம். வருகிற நபரின் நெருக்கத்தைப் பொறுத்து வரவேற்பறையிலோ, தனியறையிலோ, உணவுக் கூடத்திலோ, சந்திப்பார் முதல்வர்.

தமது நோக்கத்தை முதலில் வெளியிடாமல், வருகிற நபரிடமிருந்து தமக்குத் தேவையான தகவல்களைத் தக்க கேள்விகள் கேட்டுச் சாதுர்யமாகப் பெற்று விடுவார்.

முதல்வரைத் திருப்திபடுத்துவதாக எண்ணிக் கொண்டு சிலர், அதிகாரிகள் அல்லது கட்சிக்காரர்களைப் பற்றிப் புகார் படிப்பார்கள்.

"ஒரு நாளாவது நீ யாரையேனும் பாராட்டியிருக்கியா?" என்று ஒரே கேள்வி கேட்பார். உடனே புகார் பார்ட்டிகள் உரிய சாட்சியங்களுடனான சம்பவங்களை எடுத்துச் சொல்வார்கள்.

அதேபோல் அதீதமாக யாரையேனும் பாராட்டிப் பேசினால், "உனக்கு யாரை யாவது குறைசொல்லிப் பேசத் தெரியுமா?" என்று உசுப்பி விடுவார். உடனே, வந்த விருந்தினர் தமது புகழுரையை நியாயப் படுத்தும் நிகழ்ச்சிகளை விளக்கிச் சொல்ல ஆரம்பிப்பார்.

இது போன்ற சந்திப்புகளின் மூலம் பல்வேறு மாநிலங்களில் நடக்கும் நிகழ்வுகள் குறித்த செய்திகளும், அதிகாரிகள், அரசியல்வாதிகளின் நடத்தை செயல்பாடு பற்றிய தகவலும், அவருக்குக் கிடைத்துவிடும்.

தலைமைச் செயலகத்தில் அரசு அதிகாரிகளுக்குத் தனி மரியாதை இருந்தது. முதல்வரை மிகச் சுலபமாக அவர்கள் சந்திக்க முடிந்தது. அலுவலக நேரத்தில் அரசு அதிகாரிகளுக்கே முதல்வரைக் காண முதலுரிமை. நேரமிருந்தால்தான் மற்றவர்கள் பார்க்க முடியும். அதிகாரிகளை தமது வீட்டுக்கு வரச் சொல்லவே மாட்டார்.

ஒருமுறை ராமநாதபுரத்துக்குப் புதிய கலெக்டர் நியமிக்கப்பட்டார். உடனே அவரை அழைத்து காமராஜர் சொன்னார்: "முதல்வர் அனுப்பியதாகச் சொல்லிக் கொண்டு பலர் வருவார்கள். உங்களைச் சந்தித்துத் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ள முயற்சி செய்வார்கள். அதற்கு இடம் கொடுக்க வேண்டாம். உங்களிடம் ஏதேனும் தெரிவிக்க விரும்பினால், நானே நேரடியாகப் பேசுவேன்; வேறு நபர் மூலம் செய்தி அனுப்ப மாட்டேன்" என்று தெளிவுபடுத்தினார்.

அதிகாரிகள் செயல்பாட்டில் யாரும் தலையிடக் கூடாது. தன் பெயரைப் பயன்படுத்தி பிறர் ஆதாயம் தேடக் கூடாது என்பதில் அவ்வளவு உறுதி!

சுதந்தரப் போராட்டத் தியாகி ஒருவர் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அதைப் பட்டா பண்ணித் தரும்படி கலெக்டரை நச்சரித்து வந்தார். கலெக்டர் மசியவில்லை. உடனே, முதல்வருக்குக் கடிதம் அனுப்பினார் தியாகி. தாம் பல ஆண்டுகளாக விவசாயம் செய்து அனுபவ பாத்யதை பெற்ற நிலம் மறுக்கப்படுவதாகப்

புகார் செய்தார்.

தியாகிகளைப் பெரிதும் மதித்த காமராஜர் அக் கடிதத்தைத் தமது தனிச் செயலரிடம் கொடுத்து, உடனே நிலத்தைப் பட்டா செய்யும்படி உத்தரவும் போட்டு விட்டார்.

முதல்வரின் கோபம் தணியக் காத்திருந்து விஷயத்தை மீண்டும் விவாதித்தார் தனிச் செயலர். ஃபைலை வர



• ஆசீர்வாதம்!

வழைத்துப் பார்ப்போம் என்று யோசனை சொன்னார். கலெக்டரிடமிருந்து கோப்பு தருவிக்கப்பட்டது. ஆக்கிரமிக்கப்பட்ட நிலம் ஏரிப் புரம்போக்கு என்பது உறுதியாயிற்று. அதைப் பட்டா செய்ய விதிகள் அனுமதிக்கவில்லை. கலெக்டர் வழங்கிய மாற்று நிலத்தை, தியாகி ஏற்க மறுத்திருந்தார்.

உடனே தமது நிலையை மாற்றிக் கொண்டார் முதல்வர். ஆனால், அப்போதும் அத் தியாகியை அவர் குற்றஞ் சொல்லவில்லை. "கஷ்டம் வருகிற போது தியாகிகள் கூட இவ்வாறு பொய் புகார்கள் கூற முற்படுவார்கள் போலிருக்கிறது" என்று வருத்தப்பட்டுக் கொண்டார்!

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு முறை கலவரங்கள் வெடித்தன. கலெக்டரை பணி மாற்றம் செய்தால் நல்லது என்று கருத்து கூறப்பட்டது. 'நடந்த கலவரத்துக்கு கலெக்டர் பொறுப்பல்ல; அவரைப் பலிகடா ஆக்குவது தவறு' என்று அந்த யோசனையை நிராகரித்தார் காமராஜர்.

இன்று, இருக்கிற அத்தனை அரசியல் கட்சிகளும் மதிய உணவுத் திட்டம் தங்களுடையது என்று தம்பட்டம் அடித்துக் கொள்கின்றன. உண்மையில் அதை அறிமுகம் செய்தவர் காமராஜ்தான்.

குடும்பக் கட்டுப்பாடு அமலாகாவிடில் மற்ற எந்த வளர்ச்சிப் பணியும் வெற்றிபெற முடியாது என்று உணர்ந்து, மாநிலம் முழுவதும் அத்திட்டம் பரவலாவதற்கு ஆதரவு கொடுத்தார். 'பஞ்சாயத் ராஜ்'இன் முதன்மை ஆதரவாளர்.

காமராஜ் திட்டத்தின் கீழ் தமது பதவியைத் துறந்தவர், கடைசிக் காலத்தில் நாடு சென்ற நிலையைக் கண்டு நொந்து போனார். நேருவின் மகள் எமர்ஜென்ஸி பிரகடனம் செய்தது அவருக்குப் பேரதிர்ச்சி. இறுதிவரை வாடகை வீடுதான். அவர் மரணத்துக்குப் பிறகு அவரது வங்கிக்



• கிங் மேக்கர்...

கணக்கில் சொற்பப் பணமே இருந்தது.

இன்றைக்கு அரசியல் கட்சிகள் தலைக்குத் தலை காமராஜர் ஆட்சி அமைப்பது குறித்துப் பேசுகின்றன. காமராஜர் ஆட்சி அமைக்க வேண்டுமென்றால் காமராஜரைப் போன்ற ஒரு தலைவர் அல்லவா முதலில் வேண்டும்! தன்னலமற்ற, தன்னடக்கம் மிகுந்த ஒரு தலைவர் வேண்டுமே! அவர் ஜாதி, மத, வட்டாரப் பிரிவினைகளைக் கடந்த மனித நேயப் பண்பாளராக இருக்க வேண்டுமே! அத்தகைய தலைவருக்கு எங்கே போவது!



குல்லு மல்லு

(ஹ்ருதிக் ரோஷன், சல்மான்கான் படங்களை சுவரில் ஒட்டிக் கொண்டிருக்கிறாள் குல்லு.)

—கதிர்





Ideapraxis

நன்றி !

சன் டிவி – ஏ.சி. நீல்சன் இணைந்து நடத்திய சென்னையின் 'சிறந்த புடவைக் கடை' கருத்துக் கணிப்பில் போத்தீஸ் நிறுவனத்திற்கு முதலிடம் அளித்த வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றி.

இந்த நல்ல தருணத்தில் எங்களுடைய சேவை பன்மடங்கு பெருகும் என்று உறுதியளிக்கிறோம்.

போத்தீஸ்

அழகிய ஜவுளிகளின் ஆலயம்

உஸ்மான் ரோடு, பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. ☎ 2431 0901